ஸ்ரீ:

திவ்யப் பிரபந்தம்

இயற்பா

பதிப்பாசிரியக் குழுவினரால்
பல பிரதிகளை ஒப்புநோக்கிப் பரிசோதித்து
வெளியிடப்பட்டது

வெளியிடுவோர்
எஸ். ராஜம்
5, தம்புச் செட்டித் தெரு
சென்னை-1

முதற் பதிப்பு — 1956

உரிமை பதிவு செய்யப் பெற்றது

விலை ரூபாய் ஒன்று
(தபால் செலவு தனி)

கிடைக்கும் இடம்
மர்ரே அண்டு கம்பெனி
5, தம்புச் செட்டித் தெரு
சென்னை-1

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை-14

ஸ்ரீ:

இயற்பா

பதிப்புரை

திவ்யப் பிரபந்தங்களை அடைவுபடுத்தி, ‘இசைப்பா’, ‘இயற்பா’ என வகுத்தருளியவர் ஸ்ரீமந் நாதமுனிகள் ஆவர். முதலாயிரம், பெரிய திருமொழி, திருவாய்மொழி, மூன்றும் இசைப்பாக்கள் அடங்கிய தொகுதிகள். இயற்பாவில் அடங்கிய பிரபந்தங்களை ‘சப்த ரஸப் பிரதானமாகையாலே’ இயற்பா என்று வகுத்ததாகக் கோயிலொழுகு கூறுகிறது. கட்டளைக் கலித்துறைச் செய்யுளால் அமைந்த ‘திருவிருத்தம்’, ‘இராமாநுச நூற்றந்தாதி’ ஆகியவை இசைக்குச் சேருமாயினும், இயற்பா என்றே பெயர் பெறுகின்றன.

ஸ்ரீமந் நாதமுனிகள் தாம் ஏற்படுத்தின திருமொழி—திருவாய் மொழித் திருநாளிலே முதலாயிரத்தையும், பெரிய திருமொழியையும், திருவாய்மொழியையும், தேவகானத்திலே ஏறிட்டுச் சேவித்தார் என்றும், இயற்பாவை இயலாகச் சேவித்தார் என்றும், வரும் கோயி லொழுகுச் செய்தி இசைப்பா, இயற்பா, என்னும் பாகுபாட்டைத் தெளிவாகத் தெரிவிக்கிறது.

இசைப்பாத் தொகுதிகளுக்குப் பண், தாளங்கள் அமைந்திருத் தலும் கவனிக்கத்தக்கது. திருவாய்மொழிப் பாசுரங்கள் முழு மைக்கும் பண், தாளங்கள் உள்ளன. ‘பண் ஆர் பாடல் இன் கவிகள்’ (3961) என்று திருவாய்மொழியில் ஸ்ரீ சடகோபரே அருளிச் செய்துள்ளார். இவரது சீடரான மதுரகவிகள்,

> ‘தேவு மற்று அறியேன்; குருகூர் நம்பி
> பாவின் இன்னிசை பாடித் திரிவனே’ (938)

என்று அருளிச் செய்வதும் காண்க. பெரிய திருமொழிக்கும் பண், தாளங்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத்து ஏட்டில் காணப்படுகின்றன. ‘இன் இசையால் சொன்ன செஞ்சொல் மாலை’ (1127, 1767), ‘பண் ஆர் பாடல்’ (1037), ‘பண்ணுள் ஆர்தரப் பாடிய பாடல்’ (1267), ‘பண்கள் அகம் பயின்ற சீர்ப் பாடல்’ (1537) முதலியனவாக வரும் பெரிய திருமொழிப் பகுதிகள் இத் தொகுதியும் இசைப்பா

என்பதைத் தெளிவிக்கின்றன. இங்ஙனமே முதலாயிரத்திற்கும் பண், தாள அமைப்புக்கள் முன்பு வழக்கத்தில் இருந்திருக்க வேண்டும். பெரியாழ்வார் பாசுரங்கள் பண்ணில் இயன்றவை என்பதை ஸ்ரீ வேதாந்த தேசிகன் தமது 'பிரபந்த சாரத்'தில் (15) 'பட்ட நாதன் பண் இயல் நானூற்றேழு பத்து மூன்றும்' என்று குறிப்பிடுகின்றார். திருமழிசைப் பிரான் அருளிய இரண்டு பிரபந்தங்களில், 'திருச்சந்தவிருத்தத்'தை முதலாயிரத்திலும், 'நான்காம் திருவந்தாதி'யை இயற்பாவிலும் சேர்த்து முறைப்படுத்தியுள்ளமையை நோக்கினாலும், முதலாயிரத் தொகுதியிலுள்ள பிரபந்தங்கள் அனைத்தும் இசைப்பாக்களே எனத் துணிய இயலும். எனவே, இயற்பா ஒழிந்த ஏனைய மூன்று தொகுதிகளும் இசைப்பாத் தொகுதிகள் என்பது தெளிவு.*

திவ்யப் பிரபந்தம் இருபத்து நான்கில் இயற்பாப் பிரபந்தங்கள் பதினொன்று. இவற்றுள் இறுதியாக அமைந்துள்ள 'இராமாநுச நூற்றந்தாதி' ஸ்ரீ ராமாநுஜர் காலத்தில் இயற்பாவுடன் சேர்க்கப் பட்டது. இச் செய்தியைத் தெரிவிக்கும் கோயிலொழுகுப் பகுதி பின்வருமாறு :

> இப்படி உடையவர் திட்டம் செய்தருளின அநந்தரம், சில நாளைக்குப் பின்பு, திருவரங்கத்தமுதனார், எம்பெருமானார் விஷயமாக காயத்ரீ ஜப ஸங்க்யையாலே கலித்துறை நூற்றந்தாதியை விண்ணப்பம் செய்ய; பெருமாள், ஒரு ஸப்தாவரணத் திருநாளிலே, உடையவரைத் தம்முடனே கூட வரவேண்டாம் என்று நியமித்தருளி, திருவீதியிலே ஸகல வாத்யங்களையும் நிறுத்தி, ஸ்ரீ வைஷ்ணவர்கள் அநுஸந்திக்கக் கேட்டருளி, போர உகந்தருளினார்; அது முதலாக, பெருமாள் நியமனத்தினாலே, பெரிய ஸந்நிதியிலே இயற்பா அநுஸந்தித்த உடனே நூற்றந்தாதியை வரிசையுடன் கேட்டருளுகிறார்............உடையவர் நூற்றந்தாதியை இயற்பாவோடே, முதலாயிரத்திலே 'கண்ணி நுண் சிறுத்தாம்பை'ப் போலே சேர்த்து, ஸகல ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் ப்ரபந்ந காயத்திரியாக நித்யாநுஸந்தேயம் என்றும்;...திட்டம் செய்தருளினார்.

---

*பிற்காலத்தில் திவ்யப் பிரபந்தப் பாசுரங்களுக்கு இராக-தாளம் குறித்த ஸ்ரீ அப்பாவு முதலியார் இயற்பாப் பிரபந்தங்களுக்கும் இராக-தாளம் அமைத்திருக்கிறார். இசைப் பாக்களைப் போல இயற்பாக்களுக்கும் இராக-தாளம் அமைத்தது மிகமிகப் பிற்பட்ட காலத்து வழக்கமே ஆகும்.

அது முதலாக, முதலாயிரத்தில் 'கண்ணிநுண் சிறுத்தாம்பை'ப் போலே, இயற்பா இறுதியில் 'இராமாநுச நூற்றந்தாதி' எங்கும் ஓதப்படுவதாயிற்று. இப்பொழுதும் அவ் வழக்கம் இருந்துவருகிறது. கோயில்களில் இயற்பாவின் இறுதியில் இப் பிரபந்தத்தை அநுஸந்தித்து வருகிறார்கள். இதனால் இந் நூற்றந்தாதி இயற்பாப் பிரபந்தங்களுள் ஒன்றாக அமைந்துவிட்டமை புலனாம்.

கி. பி. 1856ல் அச்சிடப்பட்ட ஸ்ரீ கூர்மாசாரியர் பதிப்பில் இயற்பாவுடன் ' 'இராமாநுச நூற்றந்தாதி' சேர்த்துப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. திவ்யப் பிரபந்தம்-நான்கு ஆயிரங்களும் பெரும்பாலான ஏட்டுப் பிரதிகளிலும் தனித் தனியாகவே அமைந்துள்ளன. பெரும்பாலான இயற்பா ஏடுகளில் 'இராமாநுச நூற்றந்தாதி' இறுதியில் சேர்ந்தே அமைந்துள்ளது. நாலாயிரம் முழுமையுமுள்ள ஒரு சில ஏடுகளில் இயற்பாவை நான்காவது ஆயிரமாக அமைத்துள்ளனர். திருமொழி-திருவாய்மொழித் திருநாளில் இறுதியாக இயற்பாவை ஓதும் வழக்கமும் இந்த அமைப்பு முறையை உறுதிப்படுத்துகிறது.

இங்ஙனமாகவும், பிற்பட்ட பதிப்பாசிரியர்கள் பலரும் 'இராமாநுச நூற்றந்தாதி'யை இயற்பா இறுதியில் சேர்க்காமல், திருவாய்மொழிக்கும் பின்னர், திவ்யப் பிரபந்தத்தின் இறுதியில், பதிப்பித்துள்ளார்கள். கி. பி. 1865ல் திவ்யப் பிரபந்தத்தைப் பதிப்பித்த ஸ்ரீ அப்பாவு முதலியார் இயற்பாவுடன் 'இராமாநுச நூற்றந்தாதி'யைச் சேர்க்காமலும், திருவாய்மொழியின் இறுதியில் இணைக்காமலும், தனி நூலாகவே வெளியிட்டுள்ளார். நாலாயிரம் எண்ணிக்கையில் இவர் இப் பிரபந்தத்தை உட்படுத்தவில்லை. இவரைப் பின்பற்றியே பின் வந்த பதிப்பாசிரியர்கள் திவ்யப் பிரபந்தத்தின் இறுதிச் சேர்க்கையாக 'இராமாநுச நூற்றந்தாதி'யை அமைத்தனர் என்று தோன்றுகிறது. ஏடுகளில் அமைந்துள்ள முறை கருதியும், வாசிப்பதற்கு வசதியாயிருக்கும் என்ற நோக்கத்தினாலேயும், நான்கு தொகுதியாக வெளியிடப்பெறும் இந்தத் திவ்யப் பிரபந்தப் பதிப்பிலே இராமாநுச நூற்றந்தாதி இயற்பாவுடன் சேர்த்தே வெளியிடப்படுகிறது.

இயற்பாத் தொகுதியில் ஒரே பாடலாக உள்ள 'திரு எழுகூற்றிருக்கை', 'சிறுத் திருமடல்', 'பெரிய திருமடல்' என்னும் மூன்றைத் தவிர்த்து, ஏனைய எட்டுப் பிரபந்தங்களும் அந்தாதிப் பிரபந்தங்கள். அந்தாதியாவது ஒரு பாடலின் இறுதியில் அமைந்த

எழுத்தேனும், அசையேனும், சீரேனும் அடுத்த பாடலின் தொடக்கமாகக் கொண்டு பாடப்பெறும் பிரபந்தம். இந்தப் பிரபந்தத்தின் இறுதியும் முதலும் மண்டலித்துவரப் பாடுதல் மரபு. இதனை நேரிசை வெண்பா அல்லது கட்டளைக் கலித்துறைச் செய்யுட்களால் பாடுவர். இதனால் வெண்பா அந்தாதி, கலித்துறை அந்தாதி எனவும் வழங்கும். அந்தாதிப் பிரபந்தங்களைப் பெரும்பாலும், நூறு பாடல்கள் கொண்டனவாகச் செய்து வருதல்பற்றி, 'நூற்றந்தாதி' என்று குறிப்பிடுதலும் உண்டு.

இயற்பாவில் 'இராமாநுச நூற்றந்தாதி' மட்டும் கட்டளைக் கலித்துறைச் செய்யுளால் அமைந்தது. 'திருவிருத்தமும்' கட்டளைக் கலித்துறைச் செய்யுளால் அமைந்த அந்தாதிப் பிரபந்தமாக இருந்த போதிலும், இதனை அந்தாதி என்று பெயரிட்டு வழங்குதல் இல்லை. ஏனைய அந்தாதிப் பிரபந்தங்கள் எல்லாம் வெண்பா அந்தாதிகள். முதலாழ்வார்கள் மூவரும் பாடிய அந்தாதிகள் ஒவ்வொன்றிலும் 100 பாடல்கள் உள்ளன. நான்காம் திருவந்தாதியில் 96 பாடல்களும், பெரிய திருவந்தாதியில் 87 பாடல்களும் அமைந்துள்ளன. இராமாநுச நூற்றந்தாதியில் 108 பாடல்கள் உள்ளன. அந்தாதிப் பிரபந்தங்கள் நூறு பாடல் என்னும் வரையறை இன்றி, மிக்கும் குறைந்தும் பல்வேறு எண்ணிக்கைகளைப் பெற்று வருவதும் உண்டு என்பது இயற்பாப் பிரபந்தங்களால் தெரியவருகிறது.

அந்தாதிப் பிரபந்தங்களைத் தொடர்நிலைச் செய்யுள் வகையில் சொல்-தொடர்நிலைச் செய்யுள் என்று சொல்லுவர். 'விருந்தே தானும்—புதுவது கிளந்த யாப்பின் மேற்றே' (பொருள் 1551) என்ற தொல்காப்பியச் சூத்திர உரையில் பேராசிரியர் 'விருந்து தானும் புதிதாகப் பாடும் தொடர்நிலை மேற்று.........புதிதாகத் தாம் வேண்டியவாற்றால் பல செய்யுளும் தொடர்ந்துவரச் செய்வது. அது முத்தொள்ளாயிரமும், பொய்கையார் முதலாயினோர் செய்த அந்தாதிச் செய்யுளும் என உணர்க' என்று கூறியுள்ளார். இதனால் பொய்கையாழ்வார் முதலாயினோர் செய்தருளிய அந்தாதிப் பிரபந்தங்கள் 'விருந்து' வகையைச் சார்ந்த புதுமைப் பிரபந்தங்கள் என்பது தெளிவாம்.

முதல் திருவந்தாதிக்கு 'மூத்த திருவந்தாதி' என்னும் பெயர் மதுரைத் தமிழ்ச் சங்கத்து ஏட்டில் தரப்பட்டுள்ளது. நான்காம் திருவந்தாதியை நூலின் தொடக்கத்தை அனுசரித்து 'நான்முகன்

திருவந்தாதி' என்று இப்பொழுது வழங்குகிறார்கள். பெரும்பான்மையான ஏடுகளில் 'நாலாம் திருவந்தாதி', 'நான்காம் திருவந்தாதி' என்றே பெயர் காணப்படுகிறது. கி. பி. 1856ல் வெளிவந்த ஸ்ரீ கூர்மாசாரியர் பதிப்பிலும், கி. பி. 1865ல் வெளிவந்த ஸ்ரீ அப்பாவு முதலியார் பதிப்பிலும், 'நான்காம் திருவந்தாதி' என்றே பெயர் கொடுத்துள்ளனர். இப் பதிப்பிலும் 'நான்காம் திருவந்தாதி' என்றே பெயர் அமைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ சடகோபர் அருளிய அந்தாதிக்குப் 'பெரிய திருவந்தாதி' என்று பெயர் வழங்குகிறது. இப் பெயர் நூலின் பொருள்-சிறப்புக் கருதி அமைந்தது எனச் சிலர் கூறுவர். இவர்கள் பெருமை பொருந்திய அந்தாதி பெரிய திருவந்தாதி எனக் கருதுகின்றனர். மற்றும் சிலர் 'பெரிய திருவந்தாதி'யில் அமைந்த ஒரு பாடலில், 'யான் பெரியன், நீ பெரியை என்பதனை யார் அறிவார்?' என்று ஆழ்வார் அருளிச் செய்வதால், இதற்குப் பெரிய திருவந்தாதி என்று பெயர் அமைந்தது என்பர். பரிமேலழகர் திருக்குறள் உரையில், 'இறைமாட்சி' என்னும் அதிகாரத்தின் அவதாரிகையில், 'திரு உடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே என்னும் (3271) என்று பெரியாரும் பணித்தார்' என்று குறித்துள்ளார். இங்குப் பெரியார் என்றது ஸ்ரீ சடகோபரை. ஸ்ரீ சடகோபருக்குப் பெரியன் அல்லது பெரியார் என்பதை ஒரு பெயராகக்கொண்டு, பெரியன் செய்த திருவந்தாதி பெரிய திருவந்தாதி என்கின்றனர் போலும்.

'திருவாசிரியம்', 'திரு எழு கூற்றிருக்கை', இரண்டும் ஆசிரியப் பாவால் ஆகிய பிரபந்தம். திருவாசிரியம் அந்தாதிப் பிரபந்தமாய் அமைந்தும், இயற்பாவில் உள்ள ஏனைய அந்தாதிப் பிரபந்தங்களைப் போல, இறுதியும் முதலும் மண்டலித்து அமையவில்லை.

'திரு எழு கூற்றிருக்கை' என்பது சித்திரக் கவி வகையுள் ஒன்று. இத் திரு எழு கூற்றிருக்கைப் பாடலை ரத-பந்தமாகச் சில பதிப்புக்களில் அமைத்துக் காட்டுவர். திருஞான சம்பந்தரது தேவாரத் திருமுறைகளில், முதல் திருமுறையில், எழுகூற்றிருக்கை உள்ளது. நக்கீரர் பெயரால் வழங்கும் திரு எழு கூற்றிருக்கை பதினோராந் திருமுறையில் ஒரு பிரபந்தமாக உள்ளது. பிற்காலத்தில் 'மாறன் அலங்காரம்' செய்த திருக்குருகைப் பெருமாள் கவிராயர் தமது அலங்கார நூலில் ஸ்ரீ சடகோபரை முன்னிட்டுத் திரு எழு கூற்றிருக்கை பாடியுள்ளார்.

'திருவிருத்தம்', 'சிறுத் திருமடல்', 'பெரிய திருமடல்', மூன்றும் அகத்துறைப் பிரபந்தங்கள். திருவிருத்தம் நூறு பாட்டுக்களை அந்தாதியாகப் பெற்றதொரு நூல். விருத்தம் என்னும் சொல்லிற்குச் செய்தி என்று பொருள்கொண்டு, ஆழ்வார் தமது அன்பு மிகுதி முதலிய செய்திகளை எடுத்துச் சொன்ன பிரபந்தமாதலின் திருவிருத்தம் என்று பெயராயிற்று என்று கூறுவது உண்டு. இக் கருத்தினை அரண் செய்வது போன்ற குறிப்புக்களையும் இந்நூலின் முதற் பாசுரத்திலும் இறுதிப் பாடலிலும் கண்டு காட்டலாம். ஆனால், ஆசிரியப் பாவாலான பிரபந்தம் 'திருவாசிரியம்' ஆனாற் போல, விருத்தக் கலித்துறையால் அமைந்த இப் பிரபந்தமும் 'திரு விருத்தம்' எனப் பெயர் பெற்றது என்பது பொருந்தும். இப் பிரபந்தம் மாணிக்கவாசகரது 'திருக்கோவையார்' போன்ற அகப் பொருள் அமைதியைப் பெற்றுள்ளது.

'மடல்' என்பது அகப்பொருள் துறைகளுள் ஒன்று. காதல் கைகூடாத தலைமகன் மடல் ஊர்ந்தாயினும், தான் காதல் கொண்ட தலைவியைப் பெறுவேன் என்று சொல்வதாக அமைவது இத் துறை. தலைமகன் தன் காதலை உலகு அறிய வெளிப்படுத்துதலே இதன் நோக்கம். தலைவன் பனை மடலால் குதிரை வடிவாகச் செய்து, அதன்மேல் ஏறி, பித்தன் போல ஊர் நடுவே தோன்றுவன் என்றும், இதனால் இவனது காதலின் உண்மையை உணர்ந்த பெரியோர் உதவி செய்வர் என்றும் கூறுதல் மரபு. பெண்கள் மடல் ஏறுதல் மரபு அன்று. ஆனால், 'சிறுத் திருமடல்', 'பெரிய திருமடல்' இரண்டும் நாயகனைப் பெறாத நாயகி மடல் ஊர்வதாக அமைந்துள்ளன.

அன்ன நடையார் அலர் ஏச, ஆடவர்மேல்
மன்னும் மடல் ஊரார் என்பது ஓர் வாசகமும்
தென் உரையில் கேட்டு அறிவது உண்டு—அதனை யாம் தெளியோம்;
மன்னும் வடநெறியே வேண்டினோம்;...... (2732, 2733)

எனப் பெரிய திருமடலில் நாயகியே இது தமிழ் வழக்கிற்கு மாறுபட்டது என்று எடுத்துக் காட்டுகிறாள். ஆனால், இம் மடல் பிரபந்தத்தில் தலைவி மடல் ஊர்ந்ததாக இல்லை; ஊர்வேன் என்று தன் துணிவை உரைத்ததாகவே உள்ளது. ஸ்ரீ சடகோபரும் திருவாய்மொழியில் பிரிவாற்றாமை மேலீட்டால் தலைமகள் காதல் கைம்மிக்கு, மடலூரத் துணிவதாகப் பாடியுள்ளமையும் (3371, 3372) கவனித்தற்கு உரியது.

அரசாங்கத் தொன்னூல் நிலையச் சுவடிகளிலும், பிரதேசச் சுவடிகளான இயற்பா ஏடுகளிலும் 'சிறுத் திருமடல்' என்ற பெயரே பெரும்பாலும் காணப்படுகிறது. இதனால், 'கண்ணி நுண் சிறுத் தாம்பு' என வழங்குதல் போல, மடல் பிரபந்தத்தில் சிறியதான இதனையும், 'சிறுத் திருமடல்' என்பது முன்னர் பெருவழக்கா யிருந்தது எனத் துணியலாம். பின்னர், வரவரப் பெரிய திருமடல் என்பதனோடு ஒக்க, 'சிறிய திருமடல்' என வழங்கி வந்திருக்க வேண்டும். பெரும்பான்மையான ஏட்டுப் பிரதிகளை ஒட்டியே இப் பதிப்பிலும், 'சிறுத் திருமடல்' என்று பெயர் அமைக்கப்பட்டுள்ளது.

சிறுத் திருமடலும் பெரிய திருமடலும் கலி வெண்பாவால் பாடப்பெற்ற ஒரே பாடல் வகையால் ஆகிய பிரபந்தங்கள். ஆயினும், திவ்யப் பிரபந்தம் நாலாயிரம் பாசுரம் பூர்த்தியாய் உள்ளது என்று கருதி, இரு மடல்களையும் பல பாசுரங்களாகக் கொண்டுள்ளனர். இதில் இரு வேறு கொள்கைகள் உள்ளன.

அப்பிள்ளார் என்பார் மடலில் அமைந்த ஒரு கண்ணியை (இரண்டு வரிகளை) ஒரு பாசுரமாகக் கொண்டு, சிறுத் திருமடல் $77\frac{1}{2}$ பாசுரம் என்றும், பெரிய திருமடல் $148\frac{1}{2}$ பாசுரம் என்றும் கணக்கிட்டு, இரு மடலிலும் 226 பாசுரங்கள் உள்ளனவாகக் கொள்வர். இது இவர் பாடிய திருமங்கை மன்னன் வாழித் திருநாமத்தில்,

> இலங்கு எழுகூற்றிருக்கை, இருமடல், ஈந்தான் வாழியே !
> இம்மூன்றில் இருநூற்று இருபத்து ஏழ் ஈந்தான் வாழியே !

எனவரும் பகுதியால் தெரியவருகிறது. இவரது கொள்கைப்படி இராமாநுச நூற்றந்தாதி இன்றியே நாலாயிரம் என்ற எண்ணிக்கை பூர்த்தியாகி விடுகிறது.

இராமாநுச நூற்றந்தாதியைச் சேர்த்து நாலாயிரம் கொண்டவர் ஸ்ரீ தேசிகன். இவர் தாம் பாடிய பிரபந்த சாரத்தில் இரு திருமடல் களையும் 118 பாசுரங்களாகக் கொள்வர்.

> சிறிய திருமடற் பாட்டு முப்பத்தெட்டு இரண்டும்
> சீர் பெரிய மடலினிற் பாட்டு எழுபத்தெட்டும்

என்பது இவரது பாசுரப் பகுதி (பிரபந்தசாரம், 13). பிறிதோரிடத்தில் (பிரபந்தசாரம், 16) திருமங்கை மன்னன் பாசுரங்கள் 1253 என்கிறார். மடல் ஒழிந்த நான்கு பிரபந்தங்களிலும் அடங்கிய பாசுரங்கள்

1135. எனவே, இரு மடல்களும் 118 செய்யுட்கள் ஆகும் என்பது இதனாலும் தெளிவாகும்.

ஸ்ரீ தேசிகன் சிறுத் திருமடல் முப்பத்தெட்டு இரண்டும், பெரிய மடற் பாட்டு எழுபத்தெட்டு என்று குறித்த எண்ணிக்கையை ஒரு சிலரைத் தவிரப் பதிப்பாசிரியர்களில் பெரும்பாலாரும் மேற்கொண் டிருக்கிறார்கள். பாடலின் பொருட் போக்கைக்கொண்டு, அங்கங்கே பாசுரங்களாக நிறுத்தியுள்ளனர். வியாக்கியானம் அச்சிட்டவர்களும், ஸ்ரீ அப்பாவு முதலியார் ஸ்ரீ பி. ப. அண்ணங்கராசாரியர் ஒழிந்த மூல பாடம் பதிப்பித்த பிற பதிப்பாசிரியர்களும், பாடலின் இடை யிடையே நிறுத்தவேண்டும் இடங்களில் சிறியதொரு கோடிட்டுக் காட்டியுள்ளனர். இதோடு ஒவ்வொரு கண்ணிக்கும் தனித் தனி எண்களும் தந்திருக்கிறார்கள். கி. பி. 1856ல் பதிப்பித்த கூர்மா சாரியர் பதிப்பில் மட்டும் கோடு வரும் இடங்களில் எண்கள் காணப் படுகின்றன. கண்ணிகளாகப் பிரித்து இவர் எண் இடவில்லை. இப் பதிப்புக்களில் பெரிய திருமடலை 78 பாசுரமாகப் பிரித்துக் காட்டி யிருக்கின்றனர். சிறுத் திருமடலை 40 பாசுரமாகக் கொள்வதில் நூலை 38 பாசுரமாகவும், பிற்சேர்க்கையாக உள்ள பாடலை 2 பாடலாகவும் கொள்ளுகின்றனர்.

பாடலின் இடையில் அவரவர்க்குத் தோற்றியபடி கோடு இட்டனரென்று சொல்ல முடியாது. ஏட்டுப் பிரதிகளில் பாசுரங் களாகக் கணக்கிடும் இடங்களில் எண்களையே எழுதியுள்ளனர். இந்த எண்களுக்குப் பிரதியாகத்தான் பதிப்பாசிரியர்கள் கோடுகளை அமைத்து வந்திருக்கிறார்கள். இவர்களது அமைப்பில் சிறுத் திருமடலில் பிற்சேர்க்கைப் பாடலையும் சேர்த்து 40 பாட்டல்கள் கொண்டது பொருத்தமாகத் தோன்றவில்லை.

ஒரு சில ஏட்டுப் பிரதிகளில் சிறுத் திருமடலை 38 பாசுரமாகக் கொண்டதோடு, பெரிய திருமடலை 80 பாசுரமாகக் கொண்டு எண் இட்டுள்ளனர். இதனால் இரு மடல் பிரபந்தங்களும் 118 செய்யுட்கள் என்ற எண்ணிக்கை நிரம்பி விடுகிறது. தேசிகப் பிரபந்தத்திலே, சிறிய திருமடல் முப்பத்தெட்டு இரண்டும் பெரிய திருமடல் எழுபத் தெட்டும் என்று உள்ளதனை, சிறிய திருமடல் முப்பத்தெட்டு; இரண்டும் எழுபத்தெட்டும் பெரிய திருமடல் எனக் கூட்டிப் பெரிய திருமடலை எண்பது பாசுரமாகக் கொண்டனரோ என்று நினைக்க இடம் உண்டு. இப் பதிப்பிலே சிறுத் திருமடல் 38 பாசுரங்களாக

வும், பெரிய திருமடல் 80 பாசுரங்களாகவும் கொண்டுள்ள பிரதி களைப் பின்பற்றிப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. பாடல்கள் பிரியும் இடத்தில் கோடு அமைத்ததோடு, ஓரத்தில் எண்ணும் தரப்பட்டிருக்கிறது.

ஒரே பாடலாக அமைந்த நீண்ட பாசுரங்களைப் பொருள் முடிவு கருதி, தனித் தனிப் பகுதியாகப் பிரித்துக் கொள்ளுதல் பழமையாக வரும் ஒரு மரபே ஆகும். நச்சினார்க்கினியர் நீண்ட பாடல்களைக் கொண்ட பத்துப்பாட்டைப் பகுதி பகுதியாகப் பொருள்-இயைபுக்குத் தக்கபடி பிரித்துக்கொண்டு, பொருள் உரைத்துள்ளார். சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லாரும் இம்முறையை மேற்கொண்டுள்ளனர். இம் மரபை ஒட்டியே இரு மடல் பிரபந்தங்களையும் பல பாசுரங்களாகக் கொண்டு எண்ணும் மரபும் ஏற்பட்டிருத்தல் வேண்டும்.

இயற்பாப் பிரபந்தங்களுக்கு ஆன்றோர்கள் அருளிய தனியன்கள் நூல்-முகப்பில் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பெரிய திருமடலுக்கு 'பொன்-உலகில் வானவரும்' என்ற தனியனின்பின், 'மூளும் பழவினை எல்லாம்' எனத் தொடங்கும் மற்றொரு தனியனும் சில ஏடுகளில் காணப்படுகிறது. இத் தனியனும் இதில் உடன் சேர்க்கப்பட்டுள்ளது. இயற்பாப் பிரபந்தங்களில் திரு எழுகூற்றிருக்கை, சிறுத் திருமடல் இரண்டிற்கும் ஒவ்வொரு பாடலும், பெரிய திருமடலிற்கு இரண்டு பாடல்களும் பிற்சேர்க்கையாக உள்ளன. இப் பிற்சேர்க்கைப் பாடல்களும் தனியனுடன் ஒரு சேர அமைக்கப்பட்டுள்ளன. பெரிய திருமடலின் பிற்சேர்க்கைப் பாடல்கள் இரண்டில் 'மண்ணில் பொடி பூசி' என்ற பாடல் மிகுதியாக வழங்குவதில்லையாம்.

பாட ரூப பேதங்கள் இறுதியில் அமைக்கப்பட்டுள்ளன. இப் பதிப்பிற்குப் பயன்பட்ட சுவடி-புத்தகங்களின் விவரங்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. அதன்பின், அரும்பத விளக்க அகராதி ஒன்றும் சேர்க்கப்பட்டுள்ளது. இது பெரும்பாலும் வியாக்கியான கர்த்தர்களின் பொருட் போக்கைத் தழுவியே அமைக்கப்பட்டுள்ளது. இயற்பாவில் ஆழ்வார்கள் மங்களாசாஸனம் செய்தருளிய திருப்பதிகளின் விவரமும் ஒரு தனி அநுபந்தமாக அமைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை அருளிச் செய்த ‘ திவ்யப் பிரபந்தப் பாசுரப்படி இராமாயணம் ’ ஒரு பிற்சேர்க்கையாக நூல் இறுதியில் அமைக்கப் பெற்றுள்ளது. இதன்பின், திவ்வப் பிரபந்தத்தில் ஆழ்வார் களால் குறிப்பிடப் பெற்ற இதிகாச புராண வரலாறுகள் முதலியன ஆழ்வார்களின் அருளிச் செயல்களை அடியொற்றித் தொகுத்து, ‘ திவ்யப் பிரபந்தக் கதைக் குறிப்புக்கள் ’ என்னும் தலைப்பில் தரப் பட்டுள்ளன.

திருவாய்மொழிப் பதிப்பிற்கு உதவிய பதிப்பாசிரியக் குழு வினரே தொடர்ந்து இயற்பாவைப் பதிப்பிக்க உதவிபுரிந்துள்ளனர். பதிப்பாசிரியக் குழுவினராகிய ஸ்ரீ வை. மு. கோபால கிருஷ்ணமா சாரியர், ஸ்ரீ காரப்பங்காடு வேங்கடாசாரியர், ஸ்ரீ வேங்கடராஜுலு ரெட்டியார், ஸ்ரீ பி. ஸ்ரீ., ஸ்ரீ பெ. நா. அப்புஸ்வாமி ஆகிய இவ் ஐவர்க்கும் எமது உளம் கனிந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பதிப்பாசிரியக் குழுவினரின் ஆலோசனைகளை ஏற்று, சந்தி முதலியன பிரித்துச் செய்யுளை அமைத்தும், பாட பேதங்கள், அரும்பத விளக்கம் முதலியவற்றைத் தக்கவண்ணம் தயாரித்து அமைத்தும் நூலைச் செவ்வையாக வெளியிட உதவிய வித்வான் மு. சண்முகம் பிள்ளை அவர்களுக்கும் எமது நன்றி.

இப் பதிப்பைத் தமிழுலகம் வரவேற்று, இவ்வகையான இலக்கியப் பதிப்பு முயற்சிகளில் மேலும் மேலும் ஈடுபட, எங்களுக்கு ஊக்கம் அளிக்கப் பிரார்த்திக்கிறோம்.

மர்ரே அண்டு கம்பெனி
சென்னை
29—8—'56

வெளியிடுவோர்

உள்ளுறை

பக்கம்

பொய்கை ஆழ்வார்

1. முதல் திருவந்தாதி ... 1

பூதத்தாழ்வார்

2. இரண்டாம் திருவந்தாதி ... 14

பேயாழ்வார்

3. மூன்றாம் திருவந்தாதி ... 27

திருமழிசை ஆழ்வார்

4. நான்காம் திருவந்தாதி ... 40

சடகோபர்

5. திருவிருத்தம் ... 53
6. திருவாசிரியம் ... 70
7. பெரிய திருவந்தாதி ... 73

திருமங்கை ஆழ்வார்

8. திரு எழுகூற்றிருக்கை .. 84
9. சிறுத் திருமடல் ... 86
10. பெரிய திருமடல் ... 91

திருவரங்கத்தமுதனார்

11. இராமானுச நூற்றந்தாதி ... 100

---

12. பாட ரூப பேதங்கள் ... 114
13. இப் பதிப்பிற்குப் பயன்பட்ட சுவடிகளும் புத்தகங்களும் ... 128
14. அரும்பத விளக்கம் ... 129
15. மங்களாசாஸனம் செய்தருளிய திருப்பதிகள் ... 160
16. பாடல் முதல் குறிப்பு அகராதி ... 162
17. திவ்யப் பிரபந்தப் பாசுரப்படி இராமாயணம் (பெரியவாச்சான் பிள்ளை) ... 169
18. திவ்யப் பிரபந்தக் கதைக் குறிப்புக்கள் ... 173

ஸ்ரீ :

தனியன்கள்

முதல் திருவந்தாதி

கைதை சேர் பூம் பொழில் சூழ் கச்சி நகர் வந்து உதித்த
பொய்கைப் பிரான், கவிஞர் போர் ஏறு, வையத்து
அடியவர்கள் வாழ அருந் தமிழ் அந்தாதி
படி விளங்கச் செய்தான், பரிந்து.

இரண்டாம் திருவந்தாதி

என் பிறவி தீர, இறைஞ்சினேன்—இன் அமுதா
அன்பே தகளி அளித்தானை, நன் புகழ் சேர்
சீதத்து ஆர் முத்துக்கள் சேரும் கடல் மல்லைப்
பூதத்தார் பொன் அம் கழல்.

மூன்றும் திருவந்தாதி

சீர் ஆரும் மாடத் திருக்கோவலூர்-அதனுள்
கார் ஆர் கரு முகிலைக் காணப் புக்கு, ஓராத்
திருக்கண்டேன் என்று உரைத்த சீரான் கழலே
உரைக்கண்டாய், நெஞ்சே ! உகந்து.

நான்காம் திருவந்தாதி

நாராயணன் படைத்தான், நான்முகனை ; நான்முகனுக்கு
ஏர் ஆர் சிவன் பிறந்தான் என்னும் சொல் சீர் ஆர்
மொழி செப்பி வாழலாம் ; நெஞ்சமே ! மொய் பூ
மழிசைப்பரன் அடியே வாழ்த்து.

திருவிருத்தம்

கரு விருத்தக் குழி நீத்தபின், காமக் கடுங் குழி வீழ்ந்து,
ஒரு விருத்தம் புக்கு, உழலுறுவீர் ! உயிரின் பொருள்கட்கு
ஒரு விருத்தம் புகுதாமல், குருகையர்கோன் உரைத்த
திருவிருத்தத்து ஓர் அடி கற்று இரீர்—திருநாட்டகத்தே.

திருவாசிரியம்

காசினியோர்-தாம் வாழ, கலியுகத்தே வந்து உதித்து,
ஆசிரியப்பா-அதனால் அரு மறை நூல் விரித்தானை ;
தேசிகனை ; பராங்குசனை ; திகழ் வகுளத் தாரானை—
மாசு அடையா மனத்து வைத்து, மறவாமல், வாழ்த்துதுமே.

பெரிய திருவந்தாதி

முந்துற்ற நெஞ்சே! முயற்றி, தரித்து உரைத்து,
வந்தித்து, வாயார வாழ்த்தியே, சந்த
முருகு ஊரும் சோலை சூழ் மொய்பூம் பொருநல்
குருகூரன், மாறன் பேர் கூறு.

திரு எழுகூற்றிருக்கை

வாழி, பரகாலன்! வாழி, கலிகன்றி!
வாழி, குறையலூர் வாழ் வேந்தன்! வாழியரோ—
மாயோனை வாள் வலியால் மந்திரம்கொள் மங்கையர்–கோன்,
தூயோன் சுடர் மான வேல்!

சீர் ஆர் திரு எழுகூற்றிருக்கை என்னும் செந்தமிழால்
ஆரா-அமுதன், குடந்தைப் பிரான்-தன் அடி-இணைக்கீழ்
ஏர் ஆர் மறைப்பொருள் எல்லாம் எடுத்து, இவ் உலகு உய்யவே,
சோராமல் சொன்ன அருள்-மாரி பாதம் துணை, நமக்கே.

சிறுத் திருமடல்

முள்ளிச் செழு மலரோ தாரான்—முளை மதியம்
கொள்ளிக்கு என் உள்ளம் கொதியாமே: வள்ளல்,
திருவாளன், சீர்க் கலியன், கார்க் கலியை வெட்டி
மருவாளன் தந்தான், மடல்.

பெரிய திருமடல்

பொன்-உலகில் வானவரும், பூமகளும் போற்றி செய்யும்
நல் நுதலீர்! நம்பி நறையூரர் மன் உலகில்
என் நிலைமை கண்டும் இரங்காரேயாமாகில்,
மன்னும் மடல் ஊர்வன் வந்து.

மூளும் பழவினை எல்லாம் அகல முனிந்தருளி,
ஆளும் குறையல் அருள்-மாரி அம் பொன் மதிள் அரங்கர்
தாள் அன்றி மற்று ஓர் சரண் இல்லை என்று தரும் தடக்கை
வாளும் பலகையுமே அடியேன் நெஞ்சம் மன்னியதே.

இராமாநுச நூற்றந்தாதி

முன்னை வினை அகல, மூங்கில்குடி அமுதன்
பொன் அம் கழல் கமலப்போது இரண்டும் என்னுடைய
சென்னிக்கு அணி ஆகச் சேர்த்தினேன்—தென்புலத்தார்க்கு
என்னுக் கடவுடையேன் யான்?

நயம் தரு பேரின்பம் எல்லாம் பழுது இன்றி, நண்ணினர்பால்
சயம் தரு கீர்த்தி இராமாநுச முனி தாள்-இணைமேல்
உயர்ந்த குணத்துத் திருவரங்கத்தமுது ஓங்கும் அன்பால்
இயம்பும் கலித்துறை-அந்தாதி ஓத இசை, நெஞ்சமே!

இனி என் குறை நமக்கு—எம்பெருமானார் திருநாமத்தால்
முனி தந்த நூற்றெட்டுச் சாவித்திரி என்னும் நுண்பொருளை
கனிதந்த செஞ்சொல் கலித்துறை-அந்தாதி பாடித் தந்தான்,
புனிதன் திருவரங்கத்தமுது ஆகிய புண்ணியனே?

சொல்லின் தொகை கொண்டு, உனது அடிப்போதுக்குத் தொண்டு செய்[யும்
நல் அன்பர் ஏத்தும் உன் நாமம் எல்லாம் என்தன் நாவினுள்ளே,
அல்லும் பகலும் அமரும்படி நல்கு—அறுசமயம்
வெல்லும் பரம! இராமாநுச!—இது என் விண்ணப்பமே.

பிற்சேர்க்கைப் பாடல்கள்

திரு எழுகூற்றிருக்கை

இடம் கொண்ட நெஞ்சத்து இணங்கிக் கிடப்பன—என்றும் பொன்னித்
தடம் கொண்ட தாமரை சூழும் மலர்ந்த தண் பூங் குடந்தை
விடம் கொண்ட வெண் பல், கருந் துத்தி, செங் கண், தழல் உமிழ் வாய்,
படம் கொண்ட பாம்பு-அணைப் பள்ளிகொண்டான் திருப்பாதங்களே.

சிறுத் திருமடல்

ஊராது ஒழியேன், உலகு அறிய, ஒள்-நுதலீர்!
சீர் ஆர் முலைத்தடங்கள் சேரளவும்: பார் எல்லாம்
அன்று ஓங்கிநின்று அளந்தான் நின்ற திருநறையூர்
மன்று ஓங்க ஊர்வன்—மடல்.

பெரிய திருமடல்

என் நிலைமை எல்லாம் அறிவித்தால், எம் பெருமான்
தன் அருளும் ஆகமும் தாரானேல், பின்னைப்போய்
ஒண் துறை நீர் வேலை உலகு அறிய ஊர்வன், நான்—
வண்டு அறை பூம் பெண்ணை மடல்.

மண்ணில் பொடிப் பூசி, வண்டு இரைக்கும் பூச் சூடி,
பெண்ணை மடல் பிடித்துப் பின்னே, அண்ணல்
திருநறையூர் நின்ற பிரான் தேர் போகும் வீதி
பொரு முறையால் செல்வம், புரிந்து.

ஸ்ரீ :

பொய்கை ஆழ்வார் அருளிச்செய்த

முதல் திருவந்தாதி

வையம் தகளியா, வார் கடலே நெய் ஆக,
வெய்ய கதிரோன் விளக்கு ஆக, செய்ய
சுடர்-ஆழியான் அடிக்கே சூட்டினென் சொல்-மாலை—
இடர்-ஆழி நீங்குகவே என்று. 1

என்று கடல் கடைந்தது ? எவ் உலகம் நீர் ஏற்றது ?—
ஒன்றும் அதனை உணரேன் நான் : அன்று, அது—
அடைத்து, உடைத்து, கண்படுத்த ஆழி ; இது—நீ
படைத்து, இடந்து, உண்டு, உமிழ்ந்த பார். 2

பார் அளவும் ஓர் அடி வைத்து, ஓர் அடியும் பார் உடுத்த
நீர் அளவும் செல்ல நிமிர்ந்ததே : சூர் உருவின்
பேய் அளவு கண்ட பெருமான்! அறிகிலேன்—
நீ அளவு கண்ட நெறி. 3

நெறி வாசல் தானேயாய் நின்றானை, ஐந்து
பொறி வாசல் போர்க் கதவம் சாத்தி, அறிவானும்—
ஆல மர நீழல் அறம் நால்வர்க்கு அன்று உரைத்த,
ஆலம் அமர் கண்டத்து, அரன் ! 4

அரன், நாரணன்—நாமம் ; ஆன்விடை, புள்—ஊர்தி ;
உரை—நூல், மறை ; உறையும் கோயில்—வரை, நீர் ;
கருமம்—அழிப்பு, அளிப்பு ; கையது—வேல், நேமி ;
உருவம்—எரி, கார் ; மேனி, ஒன்று. 5

ஒன்றும் மறந்தறியேன், ஓத நீர் வண்ணனை நான் ;
இன்று மறப்பனோ, ஏழைகாள் ? அன்று,
கரு-அரங்கத்துள் கிடந்து கைதொழுதேன், கண்டேன்—
திருவரங்கம் மேயான் திசை. 6

திசையும், திசை உறு தெய்வமும், தெய்வத்து
இசையும் கருமங்கள் எல்லாம்—அசைவு இல் சீர்க்
கண்ணன், நெடு மால், கடல் கடைந்த கார் ஓத
வண்ணன் படைத்த மயக்கு. 7

மயங்க, வலம்புரி வாய் வைத்து, வானத்து
இயங்கும் எறி கதிரோன்-தன்னை, முயங்கு அமருள்,
தேர் ஆழியால் மறைத்தது என் நீ, திருமாலே!—
போர் ஆழிக் கையால் பொருது? 8

பொரு கோட்டு ஓர் ஏனமாய்ப் புக்கு இடந்தாய்க்கு, அன்று உன்
ஒரு கோட்டின் மேல் கிடந்தது அன்றே—விரி தோட்ட
சேவடியை நீட்டி, திசை நடுங்க, விண் துளங்க,
மா வடிவின் நீ அளந்த மண்! 9

மண்ணும், மலையும், மறி கடலும், மாருதமும்,
விண்ணும் விழுங்கியது மெய் என்பர்: எண்ணில்,
அலகு அளவு கண்ட சீர் ஆழியாய்க்கு, அன்று இவ்
உலகு அளவும் உண்டோ உன் வாய்? 10

வாய் அவனை அல்லது வாழ்த்தாது; கை உலகம்
தாயவனை அல்லது தாம் தொழா; பேய் முலை நஞ்சு
ஊண் ஆக உண்டான் உருவொடு பேர் அல்லால்—
காணா கண், கேளா செவி. 11

செவி, வாய், கண், மூக்கு, உடல் என்று ஐம் புலனும்; செந்தீ,
புவி, கால், நீர், விண் பூதம் ஐந்தும்; அவியாத
ஞானமும், வேள்வியும், நல்லறமும் என்பரே—
ஏனமாய் நின்றாற்கு இயல்வு! 12

இயல்வு ஆக, ஈன் துழாயான் அடிக்கே செல்ல
முயல்வார் இயல் அமரர், முன்னம்; இயல்வு ஆக
நீதியால் ஓதி, நியமங்களால் பரவ
ஆதியாய் நின்றார்—அவர். 13

அவர் அவர் தாம் தாம் அறிந்தவாறு ஏத்தி,
இவர் இவர் எம் பெருமான் என்று, சுவர்மிசைச்
சார்த்தியும் வைத்தும் தொழுவர்: உலகு அளந்த
மூர்த்தி உருவே முதல். 14

முதல் ஆவார் மூவரே ; அம் மூவருள்ளும்
முதல் ஆவான் மூரி நீர் வண்ணன் ; முதல் ஆய
நல்லான் அருள் அல்லால், நாம நீர் வையகத்துப்
பல்லார் அருளும் பழுது. 15

பழுதே பல பகலும் போயின என்று அஞ்சி,
அழுதேன் ; அரவு-அணைமேல் கண்டு, தொழுதேன்—
கடல் ஓதம் கால் அலைப்பக் கண்வளரும் செங்கண்
அடல் ஓத வண்ணர் அடி. 16

அடியும் படி கடப்ப, தோள் திசைமேல் செல்ல,
முடியும் விசும்பு அளந்தது என்பர்—வடி உகிரால்
ஈர்ந்தான் இரணியனது ஆகம், இரும் சிறைப் புள்
ஊர்ந்தான், உலகு அளந்த நான்று. 17

நான்ற முலைத்தலை நஞ்சு உண்டு, உறி வெண்ணெய்
தோன்ற உண்டான், வென்றி சூழ் களிற்றை ஊன்றிப்
பொருது உடைவு கண்டானும், புள்வாய் கீண்டானும்—
மருது இடை போய் மண் அளந்த மால். 18

மாலும் கருங் கடலே! என் நோற்றாய்—வையகம் உண்டு
ஆலின் இலைத் துயின்ற ஆழியான், கோலக்
கரு மேனிச் செங்கண் மால் கண்படையுள் என்றும்
திருமேனி நீ தீண்டப்பெற்று ? 19

பெற்றார் தளை கழலப் பேர்ந்து, ஓர் குறள் உருவாய்,
செற்றார் படி கடந்த செங்கண் மால் நல் தா-
மரைமலர்ச் சேவடியை வானவர் கை கூப்பி,
நிரை மலர் கொண்டு ஏத்துவரால் நின்று. 20

நின்று, நிலம் அங்கை நீர் ஏற்று, மூவடியால்,
சென்று, திசை அளந்த செங்கண் மாற்கு என்றும்
படை ஆழி ; புள் ஊர்தி : பாம்பு-அணையான் பாதம்
அடை, ஆழி நெஞ்சே ! அறி. 21

அறியும் உலகு எல்லாம், யானேயும் அல்லேன்—
பொறி கொள் சிறை உவணம் ஊர்ந்தாய் ! வெறி கமழும்
காம்பு ஏய் மென்தோளி கடை வெண்ணெய் உண்டாயைத்
தாம்பே கொண்டு ஆர்த்த தழும்பு. 22

தழும்பு இருந்த—சார்ங்க நாண் தோய்ந்தவாம் அங்கை ;
தழும்பு இருந்த—தாள், சகடம் சாடி ; தழும்பு இருந்த—
பூங்கோதையாள் வெருவ, பொன் பெயரோன் மார்பு இடந்த
வீங்கு ஓத வண்ணர் விரல். 23

விரலோடு வாய் தோய்ந்த வெண்ணெய் கண்டு, ஆய்ச்சி
உரலோடு உறப் பிணித்த நான்று, குரல் ஓவாது
ஏங்கி, நினைந்து, அயலார் காண இருந்திலையே ?
ஓங்கு ஓத வண்ணா ! உரை. 24

உரை மேற்கொண்டு, என் உள்ளம், ஓவாது, எப்போதும்,
வரைமேல் மரதகமே போலத் திரைமேல்
கிடந்தானை, கீண்டானை, கேழலாய்ப் பூமி
இடந்தானை ஏத்தி எழும். 25

எழுவார், விடைகொள்வார், ஈன் துழாயானை
வழுவாவகை நினைந்து வைகல் தொழுவார்
வினைச் சுடரை நந்துவிக்கும் வேங்கடமே—வானோர்
மனச் சுடரைத் தூண்டும் மலை. 26

மலையால் குடை கவித்து, மா வாய் பிளந்து,
சிலையால் மராமரம் ஏழ் செற்று, கொலை யானைப்
போர்க் கோடு ஒசித்தனவும், பூங் குருந்தம் சாய்த்தனவும்—
கார்க் கோடு பற்றியான் கை. 27

கைய—வலம்புரியும் நேமியும் ; கார் வண்ணத்து
ஐய ! மலர்மகள் நின் ஆகத்தாள் ; செய்ய
மறையான் நின் உந்தியான் ; மா மதிள் மூன்று எய்த
இறையான் நின் ஆகத்து இறை. 28

இறையும், நிலனும், இரு விசும்பும், காற்றும்,
அறை புனலும், செந்தீயும் ஆவான் ; பிறை மருப்பின்
பைங்கண் மால் யானை படு துயரம் காத்து அளித்த
செங்கண் மால் கண்டாய்—தெளி. 29

தெளிது ஆக உள்ளத்தைச் செந்நிறீஇ, ஞானத்து
எளிது ஆக நன்கு உணர்வார் சிந்தை, எளிது ஆகத்
தாய் நாடு கன்றே போல், தண் துழாயான் அடிக்கே
போய் நாடிக்கொள்ளும்—புரிந்து. 30

புரி ஒரு கை பற்றி, ஓர் பொன் ஆழி ஏந்தி,
அரி உருவும் ஆள் உருவும் ஆகி, எரி உருவ
வண்ணத்தான் மார்பு இடந்த மால் அடியை அல்லால், மற்று
எண்ணத்தான் ஆமோ, இமை ? 31

இமையாத கண்ணால் இருள் அகல நோக்கி,
அமையாப் பொறி புலன்கள் ஐந்தும் நமையாமல்,
ஆகத்து அணைப்பார் அணைவரே—ஆயிர வாய்
நாகத்து அணையான் நகர். 32

நகரம் அருள்புரிந்து நான்முகற்குப் பூமேல்,
பகர மறை பயந்த பண்பன் பெயரினையே
புந்தியால் சிந்தியாது, ஓதி உரு எண்ணும்
அந்தியால் ஆம் பயன் அங்கு என் ? 33

என், ஒருவர் மெய் என்பர்—ஏழ் உலகு உண்டு, ஆல் இலையில்
முன் ஒருவன் ஆய முகில் வண்ணா ! நின் உருகிப்
பேய்த் தாய் முலை தந்தாள் பேர்ந்திலளால் ; பேர் அமர்க் கண்
ஆய்த் தாய் முலை தந்த ஆறு ? 34

ஆறிய அன்பு இல் அடியார் தம் ஆர்வத்தால்
கூறிய குற்றமாக் கொள்ளல் நீ ; தேறி,
நெடியோய் ! அடி அடைதற்கு அன்றே—ஈர்-ஐந்து
முடியான் படைத்த முரண் ? 35

முரணை வலி தொலைதற்கு ஆம் என்றே—முன்னம்
தரணி தனது ஆகத்தானே இரணியனைப்
புண் நிரந்த வள் உகிர் ஆர் பொன்ஆழிக் கையால், நீ
மண் இரந்து கொண்ட வகை ? 36

வகை அறு நுண் கேள்வி வாய்வார்கள், நாளும்,
புகை, விளக்கும், பூம் புனலும் ஏந்தி, திசைதிசையின்
வேதியர்கள் சென்று இறைஞ்சும் வேங்கடமே—வெண் சங்கம்
ஊதிய வாய் மால் உகந்த ஊர். 37

ஊரும் வரி அரவம், ஒண் குறவர் மால் யானை
பேர எறிந்த பெரு மணியைக் கார் உடைய
மின் என்று, புற்று அடையும் வேங்கடமே—மேல சுரர்
எம் என்னும் மாலது இடம். 38

இடந்தது பூமி ; எடுத்தது குன்றம் ;
கடந்தது கஞ்சனை, முன் அஞ்ச ; கிடந்ததுவும்
நீர் ஓத மா கடலே ; நின்றதுவும் வேங்கடமே—
பேர் ஓத வண்ணர், பெரிது. 39

பெரு வில் பகழிக் குறவர் கைச் செந்தீ
வெருவிப் புனம் துறந்த வேழம் இரு விசும்பில்
மீன் வீழக் கண்டு, அஞ்சும் வேங்கடமே—மேல் அசுரர்-
கோன் வீழக் கண்டு, உகந்தான் குன்று. 40

குன்று அனைய குற்றம் செயினும், குணம் கொள்ளும்,
இன்று முதலாக—என் நெஞ்சே! என்றும்,
புறன் உரையே ஆயினும், பொன் ஆழிக் கையான்
திறன் உரையே சிந்தித்திரு. 41

திருமகளும் மண்மகளும் ஆய்மகளும் சேர்ந்தால்,
திருமகட்கே தீர்ந்தவாறு என்கொல்—திருமகள்மேல்
பால் ஓதம் சிந்தப் பட நாகணைக் கிடந்த
மால் ஓத வண்ணர் மனம் ? 42

மன மாசு தீரும் ; அரு வினையும் சாரா ;
தனம் ஆய தானே கைகூடும் : புனம் மேய
பூந் துழாயான் அடிக்கே போதொடு நீர் ஏந்தி,
தாம் தொழாநிற்பார் தமர். 43

தமர் உகந்தது எவ் உருவம், அவ் உருவம் தானே ;
தமர் உகந்தது எப் பேர், மற்று அப் பேர் ; தமர் உகந்து
எவ் வண்ணம் சிந்தித்து இமையாது இருப்பரே,
அவ் வண்ணம்—ஆழியான் ஆம். 44

ஆமே அமரர்க்கு அறிய ?—அது நிற்க,
நாமே அறிகிற்போம், நல் நெஞ்சே! பூ மேய
மா தவத்தோன் தாள் பணிந்த வாள் அரக்கன் நீள் முடியை
பாதம்-அத்தால் எண்ணினான் பண்பு. 45

பண் புரிந்த நான்மறையோன் சென்னிப் பலி ஏற்ற
வெண் புரி நூல் மார்பன் வினை தீர, புண் புரிந்த
ஆகத்தான் தாள் பணிவார் கண்டீர்—அமரர்-தம்
போகத்தால் பூமி ஆள்வார். 46

வாரி சுருக்கி மதக் களிறு ஐந்தினையும்,
சேரி திரியாமல் செந்நிறீஇ, கூரிய
மெய்ஞ்ஞானத்தால் உணர்வார் காண்பரே—மேல் ஒருநாள்
கைந் நாகம் காத்தான் கழல். 47

கழல் ஒன்று எடுத்து, ஒரு கை சுற்றி, ஓர் கைமேல்
சுழலும் சுராசுரர்கள் அஞ்ச, அழலும்
செரு ஆழி ஏந்தினான் சேவடிக்கே செல்ல
மருவு, ஆழி நெஞ்சே! மகிழ். 48

மகிழ் அலகு ஒன்றே போல், மாறும் பல் யாக்கை
நெகிழ முயல்கிற்பார்க்கு அல்லால், முகிழ் விரிந்த
சோதிபோல் தோன்றும் சுடர் பொன் நெடு முடி எம்
ஆதி காண்பார்க்கும் அரிது. 49

அரிய புலன் ஐந்து அடக்கி, ஆய் மலர் கொண்டு, ஆர்வம்
புரிய பரிசினால் புல்கில், பெரியனாய்
மாற்றாது வீற்றிருந்த மாவலிபால் வண் கை நீர்
ஏற்றானைக் காண்பது எளிது. 50

எளிதில் இரண்டு அடியும் காண்பதற்கு, என் உள்ளம்!
தெளிய, தெளிந்தொழியும் செவ்வே; களியில்
பொருந்தாதவனைப் பொரல் உற்று, அரியாய்
இருந்தான் திருநாமம் எண். 51

எண்மர், பதினொருவர், ஈர்-அறுவர், ஓர் இருவர்
வண்ண மலர் ஏந்தி, வைகலும் நண்ணி,
ஒரு மாலையால் பரவி, ஓவாது, எப்போதும்,
திருமாலைக் கைதொழுவர் சென்று. 52

சென்றால் குடை ஆம்; இருந்தால் சிங்காசனம் ஆம்;
நின்றால் மரவடி ஆம்; நீள் கடலுள் என்றும்
புணை ஆம்; மணி விளக்கு ஆம்; பூம் பட்டு ஆம்; புல்கும்
அணை ஆம்—திருமாற்கு அரவு. 53

அரவம், அடல் வேழம், ஆன், குருந்தம், புள் வாய்,
குரவை, குடம், முலை, மல், குன்றம்—கரவு இன்றி,
விட்டு, இறுத்து, மேய்த்து, ஒசித்து, கீண்டு, கோத்து, ஆடி, உண்டு,
அட்டு, எடுத்த—செங்கண் அவன். 54

அவன் தமர் எவ் வினையர் ஆகிலும், எம் கோன்-
அவன் தமரே என்று ஒழிவது அல்லால், நமன் தமரால்
ஆராயப்பட்டு அறியார் கண்டீர்—அரவு-அணைமேல்
பேர் ஆயற்கு ஆட்பட்டார் பேர். 55

பேரே வரப் பிதற்றல் அல்லால், என் பெம்மானை
ஆரே அறிவார் ? அது நிற்க, நேரே
கடிக் கமலத்துள் இருந்தும் காண்கிலான்—கண்ணன்
அடிக்கமலம்-தன்னை அயன். 56

அயல் நின்ற வல் வினையை அஞ்சினேன் ; அஞ்சி,
உய, நின் திருவடியே சேர்வான், நயம் நின்ற
நல் மாலை கொண்டு, நமோ நாரணா என்னும்
சொல்-மாலை கற்றேன்—தொழுது. 57

தொழுது மலர் கொண்டு, தூபம் கை ஏந்தி,
எழுதும் ; எழு, வாழி, நெஞ்சே! பழுது இன்றி
மந்திரங்கள் கற்பனவும் மால் அடியே கைதொழுவான :
அந்தரம் ஒன்று இல்லை, அடை. 58

அடைந்த அரு வினையோடு அல்லல், நோய், பாவம்
மிடைந்தவை மீண்டு ஒழிய வேண்டில், நுடங்கு இடையை
முன் இலங்கை வைத்தான் முரண் அழிய, முன் ஒரு நாள்,
தன் வில் அங்கை வைத்தான் சரண். 59

சரணா மறை பயந்த தாமரையானோடு,
மரண் ஆய மன் உயிர்கட்கு எல்லாம் அரண் ஆய
பேர் ஆழி கொண்ட பிரான் அன்றி, மற்று அறியாது—
ஓர் ஆழி சூழ்ந்த உலகு. 60

உலகும், உலகு இறந்த ஊழியும், ஒண் கேழ்
விலகு கருங் கடலும், வெற்பும், உலகினில்
செந்தீயும், மாருதமும், வானும், திருமால்-தன்
புந்தியில் ஆய புணர்ப்பு. 61

புணர் மருதின் ஊடு போய், பூங் குருந்தம் சாய்த்து,
மணம் மருவ மால் விடை ஏழ் செற்று, கணம் வெருவ
ஏழ் உலகும் தாயினவும், எண் திசையும் போயினவும்—
சூழ் அரவப் பொங்கு அணையான் தோள். 62

தோள் அவனை அல்லால் தொழா ; என் செவி இரண்டும்
கேள்-அவனது இன் மொழியே கேட்டிருக்கும் ; நா நாளும்
கோள் நாகணையான் குரை கழலே கூறுவதே ;
நாணாமை நள்ளேன் நயம். 63

நயவேன் பிறர் பொருளை ; நள்ளேன் கீழாரோடு ;
உயவேன் உயர்ந்தவரோடு அல்லால் ; வியவேன் ;
திருமாலை அல்லது தெய்வம் என்று ஏத்தேன் ;
வரும் ஆறு என்—என்மேல் வினை ? 64

வினையால் அடர்ப்படார் ; வெம் நரகில் சேரார் ;
தினையேனும் தீக்கதிக்கண் செல்லார்—நினைதற்கு
அரியானை, சேயானை, ஆயிரம் பேர்ச் செங்கண்
கரியானைக் கைதொழுதக்கால். 65

காலை எழுந்து உலகம் கற்பனவும், கற்று உணர்ந்த
மேலைத் தலை மறையோர் வேட்பனவும், வேலைக்கண்
ஓர் ஆழியான் அடியே : ஓதுவதும், ஓர்ப்பனவும்—
பேர் ஆழி கொண்டான் பெயர். 66

பெயரும் கருங் கடலே நோக்கும்—ஆறு ; ஒண் பூ
உயரும் கதிரவனே நோக்கும் ; உயிரும்
தருமனையே நோக்கும் ; ஒண் தாமரையாள் கேள்வன்
ஒருவனையே நோக்கும்—உணர்வு. 67

உணர்வார் ஆர்—உன் பெருமை, ஊழிதோறு ஊழி ?
உணர்வார் ஆர்—உன் உருவம்-தன்னை ? உணர்வார் ஆர்—
விண்ணகத்தாய்! மண்ணகத்தாய்! வேங்கடத்தாய்! நால்வேதப்
பண்ணகத்தாய்! நீ கிடந்த பால் ? 68

பாலன்-தனது உருவாய், ஏழ் உலகு உண்டு, ஆல் இலையின்-
மேல் அன்று நீ வளர்ந்த மெய் என்பர் ; ஆல் அன்று
வேலை நீர் உள்ளதோ ? விண்ணதோ ? மண்ணதோ ?
சோலை சூழ் குன்று எடுத்தாய்! சொல்லு. 69

சொல்லும்-தனையும்—தொழுமின், விழும் உடம்பு
செல்லும்-தனையும், திருமாலை நல் இதழ்த்
தாமத்தால், வேள்வியால், தந்திரத்தால், மந்திரத்தால்—
நாமத்தால் ஏத்துதிரேல், நன்று. 70

நன்று பிணி மூப்புக் கையகற்றி, நான்கு ஊழி
நின்று நிலம் முழுதும் ஆண்டாலும், என்றும்
விடல், ஆழி நெஞ்சமே! வேண்டினேன் கண்டாய்—
அடல் ஆழி கொண்டான்மாட்டு அன்பு. 71

அன்பு ஆழியானை அணுகு என்னும் : நா அவன்-தன்
பண்பு ஆழித் தோள் பரவி ஏத்து என்னும் : முன்பு ஊழி
காணானைக் காண் என்னும் கண் : செவி கேள் என்னும்—
பூண் ஆரம் பூண்டான் புகழ். 72

புகழ்வாய், பழிப்பாய், நீ பூந் துழாயானை ;
இகழ்வாய், கருதுவாய், நெஞ்சே!—திகழ் நீர்க்
கடலும், மலையும், இரு விசும்பும், காற்றும்,
உடலும், உயிரும் ஏற்றான். 73

ஏற்றான், புள் ஊர்ந்தான் ; எயில் எரித்தான், மார்வு இடந்தான்;
நீற்றான், நிழல் மணி வண்ணத்தான் ; கூற்று ஒருபால்
மங்கையான், பூமகளான் ; வார் சடையான், நீள் முடியான் ;
கங்கையான், நீள் கழலான்—காப்பு. 74

காப்பு உன்னை உன்னக் கழியும் ; அரு வினைகள்-
ஆப்பு உன்னை உன்ன அவிழ்ந்தொழியும் ; மூப்பு உன்னைச்
சிந்திப்பார்க்கு இல்லை ; திருமாலே! நின் அடியை
வந்திப்பார் காண்பர்—வழி. 75

வழி நின்று நின்னைத் தொழுவார் வழுவா
மொழி நின்ற மூர்த்தியரே ஆவர் : பழுது ஒன்றும்
வாராதவண்ணமே விண் கொடுக்கும்—மண் அளந்த
சீரான் திருவேங்கடம். 76

வேங்கடமும், விண்ணகரும், வெஃகாவும், அஃகாத
பூங் கிடங்கின் நீள் கோவல் பொன்-நகரும், நான்கு இடத்தும்
நின்றான், இருந்தான், கிடந்தான், நடந்தானே
என்றால், கெடுமாம்—இடர். 77

இடர் ஆர் படுவார் ? எழு, நெஞ்சே! வேழம்
தொடர் வான் கொடு முதலை சூழ்ந்த படம் உடைய
பைந் நாகப் பள்ளியான் பாதமே கைதொழுதும்—
கொய்ந் நாகப் பூம் போது கொண்டு. 78

கொண்டானை அல்லால், கொடுத்தாரை யார் பழிப்பார் ?
மண் தா என இரந்து மாவலியை, ஒண் தாரை
நீர் அங்கை தோய, நிமிர்ந்திலையே—நீள் விசும்பில்
ஆரம் கை தோய, அடுத்து ? 79

அடுத்த கடும் பகைஞற்கு ஆற்றேன் என்று ஓடி,
படுத்த பெரும் பாழி சூழ்ந்த, விடத்து அரவை
வல்லாளன் கைக்கொடுத்த மா மேனி மாயவனுக்கு
அல்லாதும், ஆவரோ—ஆள் ? 80

ஆள் அமர் வென்றி அடு களத்துள் அந்நான்று,
வாள் அமர் வேண்டி, வரை நட்டு, நீள் அரவைச்
சுற்றிக் கடைந்தான் பெயர் அன்றே—தொல் நரகைப்
பற்றிக் கடத்தும் படை. 81

படை ஆரும் வாள் கண்ணார் பாரசி-நாள் பைம் பூந்
தொடையலோடு ஏந்திய தூபம், இடை இடையில்
மீன் மாய, மாசூணும் வேங்கடமே—மேல் ஒரு நாள்,
மான் மாய எய்தான் வரை. 82

வரை குடை, தோள் காம்பு ஆக, ஆ-நிரை காத்து, ஆயர்
நிரை விடை ஏழ் செற்ற ஆறு என்னே ? உரவு உடைய
நீர் ஆழியுள் கிடந்து, சேர் ஆம் நிசாசரர்மேல்
பேர் ஆழி கொண்ட பிரான் ! 83

பிரான் ! உன் பெருமை பிறர் ஆர் அறிவார் ?
உராஅய் உலகு அளந்த நான்று, வராகத்து
எயிற்று-அளவு போதா ஆறு என்கொலோ—எந்தை
அடிக்கு அளவு போந்த படி ? 84

படி கண்டு அறிதியே ? பாம்பு-அணையினான் புள்-
கொடி கண்டு அறிதியே ? கூறாய்—வடிவில்
பொறி ஐந்தும் உள் அடக்கி, போதொடு நீர் ஏந்தி,
நெறி நின்ற நெஞ்சமே ! நீ. 85

நீயும் திருமகளும் நின்றாயால்—குன்று எடுத்துப்
பாயும் பனி மறுத்த பண்பாளா !—வாசல்
கடை கழியா, உள் புகா, காமர் பூங் கோவல்
இடைகழியே பற்றி, இனி. 86

இனி, யார் புகுவார் எழு நரக வாசல் ?
முனியாது மூரித் தாள் கோமின் ; கனி சாயக்
கன்று எறிந்த தோளான் கனை கழலே காண்பதற்கு
நன்கு அறிந்த—நாவலம் சூழ் நாடு. 87

நாடிலும் நின் அடியே நாடுவன் ; நாள்தோறும்
பாடிலும் நின் புகழே பாடுவன் ; சூடிலும்
பொன் ஆழி ஏந்தினன் பொன் அடியே சூடுவேற்கு,
என் ஆகில் என்னே—எனக்கு ? 88

எனக்கு ஆவார் ஆர் ஒருவரே—எம் பெருமான்
தனக்கு ஆவான் தானே மற்று அல்லால் ? புனக் காயாம்-
பூ மேனி, காணப் பொதி அவிழும் பூவைப் பூ—
மா மேனி காட்டும், வரம். 89

வரத்தால் வலி நினைந்து, மாதவ ! நின் பாதம்
சிரத்தால் வணங்கானும் என்றே—உரத்தினால்
ஈர் அரியாய் நேர் வலியோன் ஆய இரணியனை,
ஓர் அரியாய், நீ இடந்தது ஊன் ? 90

ஊனக் குரம்பையின் உள் புக்கு, இருள் நீக்கி,
ஞானச் சுடர் கொளீஇ, நாள்தோறும், ஏனத்து
உருவாய் உலகு இடந்த ஊழியான் பாதம்
மருவாதார்க்கு உண்டாமோ—வான் ? 91

வான் ஆகி, தீ ஆய், மறி கடல் ஆய், மாருதம் ஆய்,
தேன் ஆகி, பால் ஆம் திருமாலே ! ஆன்-ஆய்ச்சி
வெண்ணெய் விழுங்க நிறையுமே—முன் ஒரு நாள்
மண்ணை உமிழ்ந்த வயிறு ? 92

வயிறு அழல, வாள் உருவி வந்தானை, அஞ்ச,
எயிறு இலக, வாய் மடுத்தது என் நீ—பொறி உகிரால்,
பூ வடிவை ஈடு அழித்த பொன் ஆழிக் கையா ! நின்
சேவடிமேல் ஈடு அழிய, செற்று ? 93

செற்று, எழுந்து தீவிழித்து, சென்ற இந்த ஏழுலகும்,
மற்று இவை, ஆ என்று வாய் அங்காந்து, முற்றும்
மறையவற்குக் காட்டிய மாயவனை அல்லால்,
இறையேனும் ஏத்தாது என் நா. 94

நா, வாயில் உண்டே ; நமோ நாரணா என்று
ஓவாது உரைக்கும் உரை உண்டே ; மூவாத
மாக் கதிக்கண் செல்லும் வகை உண்டே : என்—ஒருவர்
தீக் கதிக்கண் செல்லும் திறம் ? 95

திறம்பாது—என் நெஞ்சமே ! செங்கண் மால் கண்டாய்
அறம் பாவம் என்று இரண்டும் ஆவான் ; புறம் தான், இம்
மண் தான், மறிகடல் தான், மாருதம் தான், வான் தானே
கண்டாய்—கடைக்கண் பிடி. 96

பிடி சேர் களிறு அளித்த பேராளா ! உன்-தன்
அடி சேர்ந்து அருள் பெற்றாள் அன்றே—பொடி சேர்
அனற்கு அங்கை ஏற்றான் அவிர் சடைமேல் பாய்ந்த
புனல்-கங்கை என்னும் பேர்ப் பொன் ? 97

பொன் திகழும் மேனிப் புரி சடை அம் புண்ணியனும்,
நின்று உலகம் தாய நெடுமாலும், என்றும்
இருவர் அங்கத்தால் திரிவரேலும், ஒருவன்
ஒருவன் அங்கத்து என்றும் உளன். 98

உளன் கண்டாய், நல் நெஞ்சே ! உத்தமன் ; என்றும்
உளன் கண்டாய் ; உள்ளுவார் உள்ளத்து உளன் கண்டாய் ;
வெள்ளத்தின் உள்ளானும், வேங்கடத்து மேயானும்,
உள்ளத்தின் உள்ளான் என்று ஓர். 99

ஓர் அடியும், சாடு உதைத்த ஒண் மலர்ச் சேவடியும்,
ஈர் அடியும் காணலாம், என் நெஞ்சே !—ஓர் அடியில்
தாயவனை, கேசவனை, தண் துழாய் மாலை சேர்
மாயவனையே மனத்து வை. 100

முதல் திருவந்தாதி முற்றும்

ஸ்ரீ:

பூதத்தாழ்வார் அருளிச்செய்த

இரண்டாம் திருவந்தாதி

அன்பே தகளியா, ஆர்வமே நெய் ஆக,
இன்பு உருகு சிந்தை இடு திரியா, நன்பு உருகி,
ஞானச் சுடர்-விளக்கு ஏற்றினேன், நாரணற்கு—
ஞானத் தமிழ் புரிந்த நான். 1

ஞானத்தால் நன்கு உணர்ந்து நாரணன்-தன் நாமங்கள்,
தானத்தால் மற்று அவன் பேர் சாற்றினால், வானத்து
அணி அமரர் ஆக்குவிக்கும்-அஃது அன்றே—நங்கள்
பணி அமரர் கோமான் பரிசு. 2

பரிசு நறு மலரால் பாற்கடலான் பாதம்
புரிவார் புகப்பெறுவர் போலாம்—புரிவார்கள்
தொல் அமரர் கேள்வித் துலங்கு ஒளி சேர் தோற்றத்து
நல் அமரர் கோமான் நகர். 3

நகர் இழைத்து, நித்திலத்து நாள் மலர் கொண்டு, ஆங்கே
திகழும் மணி வயிரம் சேர்த்து, நிகர் இல்லாப்
பைங் கமலம் ஏந்திப் பணிந்தேன்—பனி மலராள்
அங்கம் வலம் கொண்டான் அடி. 4

அடி மூன்றில் இவ் உலகம் அன்று அளந்தாய் போலும்;
அடி மூன்று இரந்து அவனி கொண்டாய்: படிநின்ற
நீர் ஓத மேனி நெடுமாலே! நின் அடியை
யார் ஓத வல்லார்—அறிந்து ? 5

அறிந்து, ஐந்தும் உள் அடக்கி, ஆய் மலர் கொண்டு, ஆர்வம்
செறிந்த மனத்தராய், செவ்வே அறிந்து, அவன்-தன்
பேர் ஓதி ஏத்தும் பெருந்தவத்தோர் காண்பரே—
கார் ஓத வண்ணன் கழல். 6

கழல் எடுத்து, வாய் மடித்து, கண் சுழன்று, மாற்றார்
அழல் எடுத்த சிந்தையராய் அஞ்ச, தழல் எடுத்த
போர் ஆழி ஏந்தினான் பொன் மலர்ச் சேவடியை
ஓர்; ஆழி நெஞ்சே!—உகந்து. 7

உகந்து, உன்னை வாங்கி, ஒளி நிறம் கொள் கொங்கை,
அகம் குளிர, உண் என்றாள் ஆவி உகந்து,
முலை உண்பாய் போலே, முனிந்து உண்டாய்—நீயும்
அலை பண்பால், ஆனமையால், அன்று. 8

அன்று, அதுகண்டு அஞ்சாத ஆய்ச்சி உனக்கு இரங்கி,
நின்று முலை தந்த இந் நீர்மைக்கு, அன்று
வரன்முறையால் நீ அளந்த மா கடல் சூழ் ஞாலம்
பெரு முறையால் எய்துமோ பேர்த்து ? 9

பேர்த்தனை மா சகடம் பிள்ளையாய் ; மண் இரந்து,
காத்தனை பல் உயிரும், காவலனே! ஏத்திய
நா உடையேன் ; பூ உடையேன் ; நின் உள்ளி நின்றமையால்,
கா—அடியேன் பட்ட கடை. 10

கடை நின்று அமரர், கழல் தொழுது, நாளும்
இடைநின்ற இன்பத்தர் ஆவர்—புடைநின்ற
நீர் ஓத மேனி நெடுமாலே! நின் அடியை
ஆர் ஓத வல்லார்-அவர் ? 11

அவர் இவர் என்று இல்லை ; அரவு-அணையான் பாதம்
எவர் வணங்கி ஏத்தாதார் ? எண்ணில், பவரும்
செழும் கதிரோன், ஒண் மலரோன், கண்ணுதலோன், அன்றே—
தொழும் தகையார் நாளும் தொடர்ந்து ? 12

தொடர் எடுத்த மால் யானை சூழ் கயம் புக்கு, அஞ்சி,
படர் எடுத்த பைங் கமலம் கொண்டு, அன்று இடர் அடுக்க,
ஆழியான் பாதம் பணிந்து அன்றே—வானவர்-கோன்
பாழி-தான் எய்திற்று, பண்டு ? 13

பண்டிப் பெரும் பதியை ஆக்கி, பழி பாவம்
கொண்டு, இங்கு வாழ்வாரைக் கூறாதே, எண் திசையும்
பேர்த்த கரம் நான்கு உடையான் பேர் ஓதி, பேதைகாள்!
தீர்த்தகரர் ஆமின்—திரிந்து. 14

திரிந்தது—வெம் சமத்துத் தேர் கடவி ; அன்று
பிரிந்தது—சீதையை மான் பின் போய் ; புரிந்ததுவும்
கண் பள்ளிகொள்ள—அழகியதே நாகத்தின்
தண் பள்ளி கொள்வான்-தனக்கு ? 15

தனக்கு அடிமை பட்டது தான் அறியானேலும்,
மனத்து அடைய வைப்பது ஆம் மாலை; வனத் திடரை
ஏரி ஆம் வண்ணம் இயற்றும் இது அல்லால்,
மாரி யார் பெய்கிற்பார் மற்று ? 16

மற்று ஆர் இயல் ஆவார்—வானவர்-கோன், மா மலரோன்
சுற்றும் வணங்கும் தொழிலானை, ஒற்றைப்
பிறை இருந்த செஞ்சடையான் பின் சென்று, மாலைக்
குறை இரந்து, தான் முடித்தான் கொண்டு ? 17

கொண்டது உலகம் குறள் உருவாய் ; கோளரியாய்
ஒண் திறலோன் மார்வத்து உகிர் வைத்தது ; உண்டதுவும்
தான் கடந்த ஏழ் உலகே : தாமரைக்கண் மால், ஒரு நாள்,
வான் கடந்தான், செய்த வழக்கு. 18

வழக்கு அன்று கண்டாய், வலி சகடம் செற்றாய் ;
வழக்கு என்று நீ மதிக்க வேண்டா—குழக் கன்று
தீ விளவின் காய்க்கு எறிந்த தீமை, திருமாலே!—
பார் விளங்கச் செய்தாய் பழி. 19

பழி பாவம் கையகற்றி, பல் காலும், நின்னை
வழிவாழ்வார் வாழ்வராம் மாதோ—வழு இன்றி
நாரணன்-தன் நாமங்கள் நன்கு உணர்ந்து, நன்கு ஏத்தும்
காரணங்கள்-தாம் உடையார்-தாம். 20

தாம் உளரே ; தம் உள்ளம் உள் உளதே ; தாமரையின்
பூ உளதே ; ஏத்தும் பொழுது உண்டே ; வாமன்
திரு மருவு தாள் மருவு சென்னியரே—செவ்வே
அரு நரகம் சேர்வது அரிது. 21

அரியது எளிது ஆகும், ஆற்றலால் மாற்றிப்
பெருக முயல்வாரைப் பெற்றால் : கரியது ஓர்
வெண் கோட்டு மால் யானை வென்றி முடித்தன்றே—
தண் கோட்டு மா மலரால், தாழ்ந்து ? 22

தாழ்ந்து, வரம் கொண்டு, தக்க வகைகளால்
வாழ்ந்து கழிவாரை வாழ்விக்கும்—தாழ்ந்த
விளங் கனிக்குக் கன்று எறிந்து, வேற்று உருவாய் ஞாலம்
அளந்து, அடிக்கீழ்க் கொண்ட அவன். 23

அவன் கண்டாய், நல் நெஞ்சே! ஆர் அருளும் கேடும் ;
அவன் கண்டாய் ஐம்புலனாய் நின்றான் : அவன் கண்டாய்
காற்று, தீ, நீர், வான், கரு வரை, மண், கார் ஓதச்
சீற்றத் தீ ஆவானும்—சென்று. 24

சென்றது இலங்கைமேல் செவ்வே ; தன் சீற்றத்தால்
கொன்றது இராவணனை ; கூறுங்கால், நின்றதுவும்
வேய் ஓங்கு தண் சாரல் வேங்கடமே—விண்ணவர்-தம்
வாய் ஓங்கு தொல் புகழான் வந்து. 25

வந்தித்து அவனை—வழி நின்ற ஐம்பூதம்,
ஐந்தும் அகத்து அடக்கி—ஆர்வமாய், உந்திப்
படி அமரர் வேலையான் பண்டு-அமரர்க்கு ஈந்த—
படி-அமரர் வாழும் பதி. 26

பதி அமைந்து, நாடி, பருத்து எழுந்த சிந்தை,
மதி உரிஞ்சி, வான் முகடு நோக்கி, கதி மிகுத்து, அம்
கோல் தேடி ஓடும் கொழுந்ததே போன்றதே—
மால் தேடி ஓடும் மனம். 27

மனத்து உள்ளான்—வேங்கடத்தான், மா கடலான், மற்றும்
நினைப்பு அரிய நீள் அரங்கத்து உள்ளான், எனைப் பலரும்
தேவாதி தேவன் எனப்படுவான், முன் ஒரு நாள்
மா வாய் பிளந்த மகன். 28

மகனாகக் கொண்டு எடுத்தாள் மாண்பு ஆய கொங்கை
அகன் ஆர உண்பன் என்று உண்டு, மகனைத் தாய்
தேறாத வண்ணம் திருத்தினாய்—தென் இலங்கை
நீறு ஆக எய்து அழித்தாய் நீ! 29

நீ அன்று உலகு அளந்தாய், நீண்ட திருமாலே!
நீ அன்று உலகு இடந்தாய் என்பரால் : நீ அன்று
கார் ஓதம் முன் கடைந்து, பின் அடைத்தாய் மா கடலை—
பேர் ஓத மேனிப் பிரான்! 30

பிரான் என்றும், நாளும் பெரும் புலரி என்றும்,
குரா நல் செழும் போது கொண்டு, வராகத்து
அணி உருவன் பாதம் பணியும்-அவர் கண்டீர்
மணி உருவம் காண்பார்—மகிழ்ந்து. 31

மகிழ்ந்தது சிந்தை, திருமாலே! மற்றும்
மகிழ்ந்தது, உன் பாதமே போற்றி ; மகிழ்ந்தது
அழல் ஆழி சங்கம் அவை பாடி ; ஆடும்
தொழில் ஆகம்—சூழ்ந்து, துணிந்து. 32

துணிந்தது—சிந்தை, துழாய் அலங்கல் அங்கம்
அணிந்தவன் பேர், உள்ளத்துப் பல்கால் : பணிந்ததுவும்—
வேய் பிறங்கு சாரல் விறல் வேங்கடவனையே :
வாய்—திறங்கள் சொல்லும் வகை. 33

வகையால் அவனி இரந்து அளந்தாய் பாதம்
புகையால், நறு மலரால், முன்னே மிக வாய்ந்த
அன்பு ஆக்கி, ஏத்தி, அடிமைப்பட்டேன் உனக்கு—
என் பாக்கியத்தால், இனி. 34

இனிது என்பர் காமம் ; அதனிலும் ஆற்ற
இனிது என்பர் தண்ணீரும் ; எந்தாய்! இனிது என்று
காமம், நீர் வேளாது, நின் பெருமை வேட்பரேல்,
சேம நீர் ஆகும்—சிறிது. 35

சிறியார் பெருமை சிறிதின்கண் எய்தும் ;
அறியாரும் தாம் அறியார் ஆவர் ; அறியாமை,
மண் கொண்டு, மண் உண்டு, மண் உமிழ்ந்த மாயன் என்று
எண் கொண்டு, என் நெஞ்சே! இரு. 36

இரும் தண் கமலத்து இரு மலரின் உள்ளே,
திருந்து திசைமுகனைத் தந்தாய்! பொருந்திய நின்
பாதங்கள் ஏத்திப் பணியாவேல், பல் பிறப்பும்
ஏதங்கள்—எல்லாம், எமக்கு. 37

எமக்கு என்று இரு நிதியம் ஏமாந்து இராதே,
தமக்கு என்றும் சார்வம் அறிந்து, நமக்கு என்றும்
மாதவனே என்னும் மனம் படைத்து, மற்று அவன் பேர்
ஓதுவதே நாவினால் ஓத்து. 38

ஓத்தின் பொருள் முடிவும் இத்தனையே—உத்தமன் பேர்
ஏத்தும் திறம் : அறிமின், ஏழைகாள்! ஓத்து-அதனை
வல்லீரேல் : நன்று அதனை மாட்டீரேல், மாதவன் பேர்
சொல்லுவதே ஓத்தின் சுருக்கு. 39

சுருக்காக வாங்கி, சுலாவி நின்று, ஐயார்
நெருக்கா முன், நீர் நினைமின் கண்டீர்—திருப் பொலிந்த
ஆகத்தான் பாதம் : அறிந்தும் அறியாத
போகத்தால் இல்லை—பொருள். 40

பொருளால் அமர் உலகம் புக்கு இயலல் ஆகாது ;
அருளால் அறம் அருளும் அன்றே ; அருளாலே
மா மறையோர்க்கு ஈந்த மணிவண்ணன் பாதமே
நீ மறவேல், நெஞ்சே !—நினை. 41

நினைப்பன் திருமாலை, நீண்ட தோள் காண ;
நினைப்பார் பிறப்பு ஒன்றும் நேரார் ; மனைப்பால்
பிறந்தார் பிறந்து எய்தும் பேரின்பம் எல்லாம்
துறந்தார்—தொழுதார் அத் தோள். 42

தோள் இரண்டு எட்டு ஏழும் மூன்றும், முடி அனைத்தும்,
தாள் இரண்டும் வீழச் சரம் துரந்தான் தாள் இரண்டும்
ஆர் தொழுவார் பாதம்-அவை தொழுவது அன்றே—என்
சீர் கெழு தோள் செய்யும் சிறப்பு. 43

சிறந்தார்க்கு எழு துணையாம் செங்கண் மால் நாமம்
மறந்தாரை மானிடமா வையேன் ; அறம் தாங்கும்
மாதவனே என்னும் மனம் படைத்து, மற்று அவன் பேர்
ஓதுவதே நாவினால்—உள்ளு. 44

உளது என்று இறுமாவார் ; உண்டு, இல்லை என்று
தளர்தல்-அதன் அருகும் சாரார்—அளவு அரிய
வேதத்தான், வேங்கடத்தான், விண்ணோர் முடி தோயும்
பாதத்தான் பாதம் பயின்று. 45

பயின்றது அரங்கம், திருக்கோட்டி ; பல் நாள்
பயின்றதுவும் வேங்கடமே ; பல்நாள் பயின்றது
அணி திகழும் சோலை அணி நீர் மலையே—
மணி திகழும் வண் தடக்கை மால். 46

மாலை அரி-உருவன் பாதமலர் அணிந்து,
காலை தொழுது எழுமின், கைகோலி—ஞாலம்
அளந்து, இடந்து, உண்டு, உமிழ்ந்த அண்ணலை, மற்று அல்லால்
உளம் கிடந்த ஆற்றால் உணர்ந்து. 47

உணர்ந்தாய் மறை நான்கும்; ஓதினாய் நீதி;
மணந்தாய் மலர்-மகள் தோள்; மாலே! மணந்தாய் போய்—
வேய் இரும் சாரல், வியல் இரு ஞாலம் சூழ்,
மா இரும் சோலை மலை. 48

மலை ஏழும், மா நிலங்கள் ஏழும், அதிர—
குலை சூழ் குரை கடல்கள் ஏழும்; முலை சூழ்ந்த
நஞ்சு உரத்துப் பெண்ணை நவின்று உண்ட நாவன் என்று
அஞ்சாது, என் நெஞ்சே! அழை. 49

அழைப்பன் திருமாலை—ஆங்கு அவர்கள் சொன்ன
பிழைப்பு இல் பெரும் பெயரே பேசி, இழைப்பு அரிய
ஆயவனே! யாதவனே! என்றவனை யார் முகப்பும்
மாயவனே! என்று மதித்து. 50

மதிக் கண்டாய், நெஞ்சே! மணிவண்ணன் பாதம்;
மதிக் கண்டாய் மற்று அவன் பேர்-தன்னை; மதிக் கண்டாய்—
பேர் ஆழிநின்று பெயர்ந்து, கடல் கடைந்த
நீர்-ஆழி வண்ணன் நிறம். 51

நிறம் கரியன்; செய்ய நெடு மலராள் மார்வன்;
அறம் பெரியன்; ஆர் அது அறிவார்—மறம் புரிந்த
வாள் அரக்கன் போல்வானை வானவர்-கோன் தானத்து
நீள் இருக்கைக்கு உய்த்தான் நெறி? 52

நெறியார் குழல் கற்றை முன்நின்று பின் தாழ்ந்து
புள் நந்து உழாமே, பொரு நீர்த் திருவரங்கா! அருளாய்!
எண்ணம் துழாவுமிடத்து உளவோ—பண்டும் இன்னன்னவே? 28

தலைவி அன்னத்தை வெறுத்து, உரைத்தல்

இன்னன்ன தூது எம்மை ஆள்அற்றப்பட்டு இரந்தாள் இவள் என்று,
அன்னன்ன சொல்லா, பெடையொடும் போய்வரும்—நீலம் உண்ட
மின் அன்ன மேனிப் பெருமான் உலகில் பெண் தூது செல்லா
அன்னன்ன நீர்மைகொலோ?—குடிச் சீர்மை இல் அன்னங்களே.

தலைவி அன்னங்களையும் வண்டானங்களையும் தூது வேண்டுதல்

அன்னம் செல்வீரும், வண்டானம் செல்வீரும் தொழுது இரந்தேன்;
முன்னம் செல்வீர்கள் மறவேல்மினோ: கண்ணன் வைகுந்தனோடு
என் நெஞ்சினாரைக் கண்டால், என்னைச் சொல்லி, அவரிடை நீர்
இன்னம் செல்வீரோ?—இதுவோ தகவு? என்று இசைமின்களே.

தூது செல்லாத மேகங்களைக் குறித்துத் தலைவி இரங்குதல்

இசைமின்கள் தூது என்று இசைத்தால், இசையிலம்; என் தலைமேல்
அசைமின்கள் என்றால், அசையும் கொலாம்—அம் பொன் மா மணிகள்
திசை மின் மிளிரும் திருவேங்கடத்து வன் தாள் சிமயம்-
மிசை மின் மிளிரிய போவான், வழிக்கொண்ட மேகங்களே? 31

தலைவி போலி கண்டு உரைத்தல்

மேகங்களோ! உரையீர்—திருமால் திருமேனி ஒக்கும்
யோகங்கள் உங்களுக்கு எவ்வாறு பெற்றீர்? உயிர் அளிப்பான்,
மாகங்கள் எல்லாம் திரிந்து, நல் நீர்கள் சுமந்து, நும்-தம்
ஆகங்கள் நோவ வருத்தும் தவம் ஆம் அருள்பெற்றதே? 32

தலைவியின் ஆற்றாமை கண்ட தோழி தலைவனை வெறுத்து உரைத்தல்

அருள் ஆர் திருச் சக்கரத்தால் அகல் விசும்பும் நிலனும்
இருள் ஆர் வினை கெட, செங்கோல் நடாவுதிர்; ஈங்கு, ஓர் பெண்பால்
பொருளோ எனும் இகழ்வோ? இவற்றின் புறத்தாள் என்று எண்ணோ?
தெருளோம், அரவணையீர்! இவள் மாமை சிதைக்கின்றதே. 33

கூடலிழைத்து வருந்தும் தலைவியின் நிலையைப் பாங்கி தலைவற்கு உணர்த்தல்

சிதைக்கின்றது ஆழி என்று, ஆழியைச் சீறி, தன் சீறடியால்
உதைக்கின்ற நாயகம்-தன்னொடு, மாலே! உனது தண் தார்
ததைக்கின்ற தண் அம் துழாய் அணிவான், அதுவே மனமாய்ப்
பதைக்கின்ற மாதின்திறத்து அறியேன் செயற்பாலதுவே. 34

தலைவி மாலைக்கு ஆற்றாமல் வாடை கண்டு, இரங்குதல்

பால் வாய்ப் பிறைப் பிள்ளை ஒக்கலைக் கொண்டு, பகல் இழந்த
மேல்பால் திசைப்பெண் புலம்புறு மாலை, உலகு அளந்த
மால்பால் துழாய்க்கு மனம் உடையார்க்கு நல்கிற்றை எல்லாம்
சோல்வான் புகுந்து, இது ஓர் பனி வாடை துழாகின்றதே. 35

தோழி தலைவனது கொடுமை கூறல்

துழா நெடும் சூழ் இருள் என்று, தம் தண் தார்-அது பெயரா,
எழா நெடு ஊழி எழுந்த இக் காலத்தும், ஈங்கு இவளோ
வழா நெடுந் துன்பத்தள் என்று இரங்கார், அம்மனோ! இலங்கைக்
குழா நெடு மாடம் இடித்த பிரானார் கொடுமைகளே! 36

நற்றாய் தன் மகள் சென்ற சுரத்தின் அருமை கூறி, இரங்குதல்

கொடுங் கால் சிலையர், நிரைகோள் உழவர், கொலையில் வெய்ய
கடுங் கால் இளைஞர் துடி படும் கவ்வைத்து—அரு வினையேன்
நெடுங் காலமும் கண்ணன் நீள் மலர்ப் பாதம் பரவிப் பெற்ற,
தொடுங்கால் ஒசியும் இடை, இளமான் சென்ற சூழ் கடமே. 37

தலைவனைப் பிரிந்த தலைவி போலி கண்டு, மகிழ்தல்

கடம் ஆயினகள் கழித்து, தன் கால் வன்மையால், பல நாள்
தடம் ஆயின புக்கு, நீர் நிலைநின்ற தவம் இதுகொல்—
குடம் ஆடி, இம் மண்ணும் விண்ணும் குலுங்க உலகு அளந்து,
நடமாடிய பெருமான் உரு ஒத்தன, நீலங்களே? 38

தலைவனது உருவெளிப்பாடு கண்ட தலைவி தோழிக்குக் கூறுதல்

நீலத் தட வரைமேல் புண்டரீக நெடுந் தடங்கள்
போலப் பொலிந்து, எமக்கு எல்லா இடத்தவும்—பொங்கு முந்நீர்
ஞாலப் பிரான், விசும்புக்கும் பிரான், மற்றும் நல்லோர் பிரான்,
கோலம் கரிய பிரான், எம் பிரான், கண்ணின் கோலங்களே. 39

இருள் கண்டு இரங்கிய தலைவி தோழியர்க்கு வரைவு விருப்பு உரைத்தல்

கோலப் பகல்-களிறு ஒன்று கல் புய்ய, குழாம் விரிந்த
நீலக் கங்குல்-களிறு எல்லாம் நிரைந்தன; நேரிழையீர்!
ஞாலப் பொன் மாதின் மணாளன் துழாய் நங்கள் சூழ் குழற்கே
ஏலப் புனைந்து, என்னைமார் எம்மை நோக்குவது என்றுகொலோ?

வாடைக்கு வருந்திய தலைமகளது கூற்று

என்றும் புன் வாடை இது கண்டு அறிதும்; இவ்வாறு வெம்மை
ஒன்றும் உருவும் சுவடும் தெரியிலம்; ஓங்கு அசுரர்
பொன்றும் வகை, புள்ளை ஊர்வான் அருள் அருளாத இந் நாள்,
மன்றில் நிறை பழி தூற்றி நின்று, என்னை வன் காற்று அடுமே. 41

தலைவி தலைவனது கண்ணழகில் ஈடுபட்டு வியந்து, உரைத்தல்

வன் காற்று அறைய, ஒருங்கே மறிந்து கிடந்து, அலர்ந்த
மென் கால் கமலத் தடம்போல், பொலிந்தன—மண்ணும் விண்ணும்
என் காற்கு அளவின்மை காண்மின் என்பான் ஒத்து, வான் நிமிர்ந்த
தன் கால் பணிந்த என்பால், எம் பிரான தடங் கண்களே. 42

தலைவனது உருவெழில் உரைத்த தலைமகளது கூற்று

கண்ணும் செந்தாமரை ; கையும் அவை ; அடியோ அவையே ;
வண்ணம் கரியது ஓர் மால் வரை போன்று, மதி விகற்பால்
விண்ணும் கடந்து, உம்பர் அப்பால் மிக்கு, மற்று எப்பால் எவர்க்கும்
எண்ணும் இடத்ததுவோ—எம்பிரானது எழில் நிறமே ? 43

தலைவி தலைவனது பெருமை உரைத்தல்

நிறம் உயர் கோலமும், பேரும், உருவும் இவைஇவை என்று
அறம் முயல் ஞானச் சமயிகள் பேசிலும், அங்கு அங்கு எல்லாம்
உற உயர் ஞானச் சுடர் விளக்காய் நின்றது அன்றி, ஒன்றும்
பெற முயன்றார் இல்லையால்—எம்பிரான பெருமையையே. 44

தலைவி தலைவனது நீரிடை உதவியை நினைந்து உரைத்தல்

பெருங் கேழலார்-தம் பெருங் கண் மலர்ப் புண்டரீகம் நம்மேல்
ஒருங்கே பிறழ வைத்தார் இவ்வ காலம் ; ஒருவர் நம் போல்
வருங் கேழ்பவர் உளரே ? தொல்லை வாழியம் சூழ் பிறப்பு
மருங்கே வரப் பெறுமே ? சொல்லு ; வாழி மட நெஞ்சமே ! 45

நெஞ்சைத் தூதுவிட்ட தலைவி இரங்குதல்

மட நெஞ்சம் என்றும், தமது என்றும், ஓர் கருமம் கருதி,
விட நெஞ்சை உற்றார் விடவோ அமையும் ; அப் பொன்பெயரோன்
தட நெஞ்சம் கீண்ட பிரானார்-தமது அடிக்கீழ் விட, போய்,
திட நெஞ்சம் ஆய், எம்மை நீத்து, இன்றுதாறும் திரிகின்றதே. 46

பிரிவு ஆற்றாது வருந்தும் தலைவியின் நிலைகண்டு, செவிலி இரங்குதல்

திரிகின்றது வட மாருதம் ; திங்கள் வெம் தீ முகந்து
சொரிகின்றது ; அதுவும் அது ; கண்ணன் விண்ணூர் தொழவே,
சரிகின்றது சங்கம் ; தண் அம் துழாய்க்கு வண்ணம் பயலை
விரிகின்றது முழு மெய்யும்; என் ஆம்கொல் என் மெல்லியற்கே ? 47

நல்நிமித்தம் கண்டு தான் ஆறியிருத்தலைத் தலைவி தோழிக்குக் கூறுதல்

மெல்லியல் ஆக்கைக் கிருமிக் குருவில் மிளிர்தந்து, ஆங்கே
செல்லிய செல்கைத்து ; உலகை என் காணும் ? என்னாலும் தன்னைச்
சொல்லிய சூழல் திருமால்-அவன் கவி-ஆது கற்றேன் :
பல்லியின் சொல்லும் சொல்லாக் கொள்வதோ உண்டு, பண்டுபண்டே. 48

இருளுக்கு ஆற்றாத தலைவி தோழிக்குக் கூறுதல்

பண்டும் பலபல வீங்கு இருள் காண்டும் ; இப் பாய் இருள் போல்,
கண்டும், அறிவதும், கேட்பதும் யாம் இலம்—காள வண்ண
வண்டு உண் துழாய்ப் பெருமான், மதுசூதனன், தாமோதரன்
உண்டும் உமிழ்ந்தும் கடாய மண் நேர் அன்ன ஒள்-நுதலே! 49

தலைவன் மீண்டு வருகையில் பாகனொடு கூறுதல்

ஒள்-நுதல் மாமை ஒளி பயவாமை, விரைந்து நம் தேர்
நண்ணுதல் வேண்டும், வலவ ! கடாகின்று—தேன் நவின்ற
விண் முதல் நாயகன் நீள் முடி வெண் முத்த வாசிகைத்தாய்
மண் முதல் சேர்வுற்று அருவிசெய்யாநிற்கும் மா மலைக்கே. 50

கடலின் ஓசைக்கு ஆற்றாத தலைவி இரங்குதல்

மலை கொண்டு மத்தா, அரவால் சுழற்றிய மாயப் பிரான்
அலை கண்டு கொண்ட அமுதம் கொள்ளாது, கடல்—பரதர்
விலை கொண்டு தந்த சங்கம்-இவை, வேரித் துழாய் துணையா,
துலை கொண்டு, தாயம் கிளர்ந்து கொள்வான் ஒத்து—அழைக்கின்றதே. 51

கால மயக்கு

அழைக்கும் கருங் கடல் வெண் திரைக் கைக்கொண்டு போய், அலர்வாய்
மழைக்கண் மடந்தை அரவு-அணை ஏற, மண் மாதர் விண்வாய்
அழைத்துப் புலம்பி, முலைமலைமேல் நின்றும் ஆறுகளாய்,
மழைக் கண்ண நீர், திருமால் கொடியான் என்று, வார்கின்றதே. 52

கட்டுவிச்சி கூறுதல்

வார் ஆயின முலையாள் இவள் ; வானோர் தலைமகன் ஆம்
சீர் ஆயின தெய்வ நல் நோய் இது ; தெய்வத் தண் அம் துழாய்த்
தார் ஆயினும், தழை ஆயினும், தண் கொம்பு-அது ஆயினும், கீழ்
வேர் ஆயினும், நின்ற மண் ஆயினும், கொண்டு வீசுமினே. 53

வண்டு விடு தூது

வீசும் சிறகால் பறத்திர் ; விண் நாடு நுங்கட்கு எளிது ;
பேசும் படி அன்ன பேசியும் போவது—நெய் தொடு உண்டு,
ஏசும்படி அன்ன செய்யும் எம் ஈசர், விண்ணோர் பிரானார்
மாசு இல் மலர் அடிக்கீழ் எம்மைச் சேர்விக்கும் வண்டுகளே! 54

நலம் பாராட்டு

வண்டுகளோ ! வம்மின் ; நீர்ப் பூ, நிலப் பூ, மரத்தில் ஒண் பூ
உண்டு, களித்து, உழல்வீர்க்கு ஒன்று உரைக்கியம் ; ஏனம் ஒன்றாய்
மண் துகள்-ஆடி வைகுந்தம் அன்னாள் குழல்வாய் விரை போல்,
விண்டு கள் வாரும் மலர் உளவோ—நும் வியலிடத்தே ? 55

தலைவன் இரவிடைக் கலந்தமையைத் தலைவி தோழிக்கு உரைத்தல்

வியலிடம் உண்ட பிரானார் விடுத்த திருவருளால்
உயல் இடம் பெற்று உய்ந்தம் ; அஞ்சலம்; தோழி! ஓர் தண் தென்றல் வந்து—
அயலிடை யாரும் அறிந்திலர்—அம் பூந் துழாயின் இன் தேன்
புயலுடை நீர்மையினால் தடவிற்று என் புலன், கலனே. 56

தலைவன் பாங்கனுக்குக் கழற்றெதிர் மறுத்தல்

புலக் குண்டலப் புண்டரீகத்த போர்க் கெண்டை வல்லி ஒன்றால்
விலக்குண்டு உலாகின்று, வேல் விழிக்கின்றன ; கண்ணன் கையால்
மலக்குண்டு, அமுதம் சுரந்த மறி கடல் போன்று, அவற்றால்
கலக்குண்ட நான்று, கண்டார் எம்மை யாரும் கழறலரே. 57

தோழி தலைவன் பெருமையை உரைத்து, தலைவியை ஆற்றுதல்

கழல்-தலம் ஒன்றே நிலம் முழுது ஆயிற்று ; ஒரு கழல் போய்
நிழல் தர எல்லா விசும்பும் நிறைந்தது ; நீண்ட அண்டத்து
உழறு அலர் ஞானச் சுடர் விளக்காய், உயர்ந்தோரை இல்லா
அழறு அலர் தாமரைக் கண்ணன் என்னோ, இங்கு அளக்கின்றதே ? 58

இரவு நீடுதற்கு ஆற்றாத தலைவியைப் பற்றிச் செவிலி இரங்குதல்

அளப்பு-அரும் தன்மைய ஊழி அம் கங்குல்; அம் தண்ணம் துழாய்க்கு
உளப் பெருங் காதலின் நீளிய ஆய் உள ; ஓங்கு முந்நீர்
வளப் பெரு நாடன், மதுசூதனன் என்னும்—வல் வினையேன்
தளப் பெரு நீள் முறுவல், செய்ய வாய, தட-முலையே. 59

தலைமகளின் இளமைக்குச் செவிலி இரங்குதல்

முலையோ முழு முற்றும் போந்தில ; மொய் பூங் குழல் குறிய ;
கலையோ அரை இல்லை ; நாவோ குழறும் ; கடல் மண் எல்லாம்
விலையோ என மிளிரும் கண் ; இவள் பரமே—பெருமான்
மலையோ திருவேங்கடம் என்று கற்கின்ற வாசகமே ? 60

தோழி தலைவனது நீர்மையைத் தலைவிக்குக் கூறுதல்

வாசகம் செய்வது நம் பரமே—தொல்லை வானவர்-தம்
நாயகன், நாயகர் எல்லாம் தொழும் அவன், ஞாலம் முற்றும்,
வேய் அகம் ஆயினும் சோராவகை, இரண்டே அடியால்
தாயவன், ஆய்க் குலமாய் வந்து தோன்றிற்று நம் இறையே ? 61

தலைவியின் ஆற்றாமையைத் தோழி தலைவனுக்குக் கூறுதல்

இறையோ இரக்கினும், ஈங்கு ஓர் பெண்பால் எனவும் இரங்காது,
அறையோ என, நின்று அதிரும் கருங்கடல் ; ஈங்கு இவள்-தன்
நிறையோ இனி, உன் திரு-அருளால் அன்றி, காப்பு-அரிதால் ;
முறையோ—அரவு-அணைமேல் பள்ளி கொண்ட முகில் வண்ணனே ?

தலைவனை இயற்பழித்த தோழிக்குத் தலைவி இயற்பட மொழிதல்

வண்ணம் சிவந்துள, வான் நாடு அமரும் குளிர் விழிய,
தண் மென் கமலத் தடம் போல், பொலிந்தன தாம் இவையோ—
கண்ணன் திருமால் திருமுகம்-தன்னொடும் காதல் செய்தேற்கு
எண்ணம் புகுந்து, அடியேனொடு, இக் காலம், இருக்கின்றவே. 63

தலைவன் பேர் கூறித் தரித்திருத்தலைத் தலைவி தோழிக்குக் கூறி, இரங்கல்

இருக்கு ஆர் மொழியால், நெறி இழுக்காமை, உலகு அளந்த
திருத் தாள்-இணை நிலத்தேவர் வணங்குவர் ; யாமும் அவா
ஒருக்கா, வினையொடும் எம்மொடும் நொந்து, கனி இன்மையின்,
கருக்காய் கடிப்பவர் போல், திருநாமச் சொல் கற்றனமே. 64

தலைமகள் நோக்கில் ஈடுபட்ட தலைவன் பாங்கனொடு கூறுதல்

கற்றுப்பிணை மலர் கண்ணின் குலம் வென்று, ஒரோ கருமம்
உற்றுப் பயின்று, செவியொடு உசாவி, உலகம் எல்லாம்
முற்றும் விழுங்கி உமிழ்ந்த பிரானார் திருவடிக்கீழ்
உற்றும் உறாதும், மிளிர்ந்த கண் ஆய், எம்மை உண்கின்றவே. 65

தலைவன் பாங்கனுக்கு கழற்றெதிர் மறுத்தல்

உண்ணாது, உறங்காது, உணர்வுறும் எத்தனை யோகியர்க்கும்
எண் ஆய் மிளிரும் இயல்வின ஆம்—எரி, நீர், வளி, வான்,
மண் ஆகிய எம் பெருமான்-தனது வைகுந்தம் அன்னாள்
கண் ஆய், அருவினையேன் உயிர் ஆயின, காவிகளே. 66

தலைவன் பாங்கனுக்குத் தன் வலியழிவு உரைத்தல்

காவியும், நீலமும், வேலும், கயலும் பலபல வென்று,
ஆவியின் தன்மை அளவு அல்ல பாரிப்பு—அசுரைச் செற்ற
மா வியம் புள் வல்ல மாதவன், கோவிந்தன் வேங்கடம் சேர்
தூவி அம் பேடை அன்னாள் கண்கள் ஆய துணைமலரே. 67

கால மயக்கு

மலர்ந்தே ஒழிந்தில—மாலையும், மாலைப் பொன் வாசிகையும்
புலம் தோய் தழைப் பந்தர் தண்டு உற நாற்றி: பொரு கடல் சூழ்
நிலம் தாவிய எம் பெருமான்-தனது வைகுந்தம் அன்னாய்!
கலந்தார் வரவு எதிர் கொண்டு, வன் கொன்றைகள் கார்த்தனவே. 68

மாலைக்கு இரங்கிய தலைவியைத் தோழி ஆற்றுதல்

கார் ஏற்று இருள் செகில் ஏற்றின் சுடருக்கு உளைந்து, வெல்வான்,
போர் ஏற்று, எதிர்ந்தது புன் தலை மாலை; புவனி எல்லாம்
நீர் ஏற்று, அளந்த நெடிய பிரான் அருளா விடுமே?
வார் ஏற்று இளமுலையாய்! வருந்தேல்—உன் வளைத்திறமே. 69

இரவின் நெடுமைக்குத் தலைவி இரங்குதல்

வளை வாய்த் திருச் சக்கரத்து எங்கள் வானவனார் முடிமேல்
தளை வாய் நறுங் கண்ணித் தண் அம் துழாய்க்கு, வண்ணம் பயலை
விளைவான், மிக வந்து, நாள், திங்கள், ஆண்டு, ஊழி நிற்க, எம்மை
உளைவான் புகுந்து, இது ஓர் கங்குல்—ஆயிரம் ஊழிகளே. 70

செவிலி வெறுத்தலைத் தலைவி தோழியர்க்கு உரைத்தல்

ஊழிகள் ஆய், உலகு ஏழும் உண்டான் என்றிலம்; பழம் கண்டு,
ஆழி களாம் பழம் வண்ணம் என்றேற்கு, அஃதே கொண்டு, அன்னை
நாழ் இவளோ என்னும்; ஞாலம் உண்டான் வண்ணம் சொல்லிற்று என்னும்;
தோழிகளோ! உரையீர்—எம்மை அம்மனை சூழ்கின்றவே. 71

இருளுக்கு ஆற்றாத தலைவி இளம் பிறை கண்டு, தளர்ந்து உரைத்தல்

சூழ்கின்ற கங்குல் சுருங்கா இருளின் கருந் திணிம்பைப்
போழ்கின்ற திங்கள் அம் பிள்ளையும் போழ்க ; துழாய் மலர்க்கே
தாழ்கின்ற நெஞ்சத்து ஒரு தமியாட்டியேன் மாமைக்கு இன்று
வாழ்கின்ற ஆறு இதுவோ—வந்து தோன்றிற்று, வாலியதே ? 72

பிறையுடை மாலைக்கு ஆற்றாத தலைவியின் தளர்ச்சிக்குப் பாங்கி இரங்கல்

வால் வெண் நிலவு உலகு ஆரச் சுரக்கும் வெண் திங்கள் என்னும்
பால் விண்-சுரவி சுர முதிர் மாலை, பரிதி-வட்டம்
போலும் சுடர் அடல் ஆழிப் பிரான் பொழில் ஏழ் அளிக்கும்
சால்பின் தகைமைகொலாம்—தமியாட்டி தளர்ந்ததுவே ? 73

தலைவனது தார் மணம் கொண்டுவரும் தென்றலைத் தலைவி மகிழ்ந்து, உரைத்தல்

தளர்ந்தும் முறிந்தும் வரு திரைப் பாயல் திரு நெடுங் கண்
வளர்ந்தும், அறிவுற்றும், வையம் விழுங்கியும், மால் வரையைக்
கிளர்ந்து, மறிதர, கீண்டு, எடுத்தான் முடி சூடு துழாய்
அளைந்து உண் சிறு பசுந் தென்றல் அந்தோ வந்து உலாகின்றதே! 74

மதியுடம்படுக்கலுற்ற தலைவன் தலைவியையும் தோழியரையும் பதி வினாதல்

உலாகின்ற கெண்டை ஒளி அம்பு எம் ஆவியை ஊடுருவக்
குலாகின்ற வெஞ்சிலை வாள்-முகத்தீர்! குனி சங்கு இடறிப்
புலாகின்ற வேலைப் புணரி அம் பள்ளி அம்மான் அடியார்
நிலாகின்ற வைகுந்தமோ—வையமோ—நும் நிலையிடமே ? 75

மாலை பெறாது வருந்தும் தலைவி மதிக்கு வருந்தி, நெஞ்சொடு கூறுதல்

இடம் போய் விரிந்து, இவ் உலகு அளந்தான் எழில் ஆர் தண் துழாய்
வடம் போது இனையும் மட நெஞ்சமே! நங்கள் வெள் வளைக்கே
விடம் போல் விரிதல் இது வியப்பே—வியன் தாமரையின்
தடம் போது ஒடுங்க மெல் ஆம்பல் அலர்விக்கும் வெண் திங்களே ?

தலைவி மாலைப் பொழுது கண்டு, வருந்துதல்

திங்கள் அம் பிள்ளை புலம்ப, தன் செங்கோல் அரசு பட்ட
செங் களம் பற்றி நின்று, எள்கு புன் மாலை, தென்பால் இலங்கை
வெங் களம் செய்த நம் விண்ணோர் பிரானார் துழாய் துணையா,
நங்களை மாமை கொள்வான், வந்து தோன்றி நலிகின்றதே. 77

பிரிவு ஆற்றாத தலைவி தலைவனது ஆற்றலைக் கருதி, நெஞ்சு அழிந்து, இரங்குதல்

நலியும் நரகனை வீட்டிற்றும், வாணன் திண் தோள் துணித்த
வலியும், பெருமையும் யாம் சொல்லும் நீர்த்து அல்ல; மை வரை போல்
பொலியும் உருவின் பிரானார் புனை பூந் துழாய் மலர்க்கே
மெலியும் மட நெஞ்சினார் தந்து போயின வேதனையே. 78

தலைவனைப் பிரியாத மகளிரது சிறப்பைக் கூறி, தலைவி இரங்குதல்

வேதனை, வெண் புரி நூலனை, விண்ணோர் பரவ நின்ற
நாதனை, ஞாலம் விழுங்கும் அநாதனை, ஞாலம் தத்தும்
பாதனை, பாற்கடல் பாம்பு-அணைமேல் பள்ளிகொண்டருளும்
சீதனையே தொழுவார்—விண்ணுளாரிலும் சீரியரே. 79

பிரிவு ஆற்றாத தலைவி மாலைப் பொழுது கண்டு, இரங்குதல்

சீர் அரசு ஆண்டு, தன் செங்கோல் சில நாள் செலீஇக் கழிந்த
பார் அரசு ஒத்து, மறைந்தது நாயிறு; பார் அளந்த
பேர் அரசே! எம் விசும்பு அரசே! எம்மை நீத்து வஞ்சித்த
ஓர் அரசே! அருளாய்—இருளாய் வந்து உறுகின்றதே. 80

வெறி விலக்குவிக்க நினைந்த தோழி இரங்குதல்

உறுகின்ற கன்மங்கள் மேலன, ஓர்ப்பிலராய்—இவளைப்
பெறுகின்ற தாயர் மெய்ந் நொந்து பெறார்கொல்?—துழாய் குழல்வாய்த்
துறுகின்றிலர்; தொல்லை வேங்கடம் ஆட்டவும் சூழ்கின்றிலர்;
இறுகின்றதால் இவள் ஆகம், மெல் ஆவி எரி கொள்ளவே. 81

உருவெளிப்பாடு கண்ட தலைவி தலைவனது கண்ணின் அழகுக்கு இரங்குதல்

எரி கொள் செந் நாயிறு இரண்டு உடனே உதய மலைவாய்
விரிகின்ற வண்ணத்த எம் பெருமான் கண்கள்; மீண்டு அவற்றுள்
எரி கொள் செந் தீ வீழ் அசுரரைப் போல, எம் போலியர்க்கும்
விரிவ; சொல்லீர்—இதுவோ வையம் முற்றும் விளரியதே? 82

அன்றிலின் குரலுக்கு ஆற்றாத தலைவியின் தளர்ச்சி கண்டு, தோழி இரங்குதல்

விளரிக் குரல் அன்றில் மென் பெடை மேகின்ற முன்றில் பெண்ணை
முளரிக் குரம்பை இதுஇதுவாக, முகில் வண்ணன் பேர்
கிளரிக் கிளரிப் பிதற்றும் மெல் ஆவியும், நைவும், எல்லாம்
தளரின் கொலோ—அறியேன், உய்யல் ஆவது இத் தையலுக்கே? 83

தலைவி தலைவனைக் காண விரைதல்

தையல் நல்லார்கள் குழாங்கள் குழிய குழுவினுள்ளும்,
ஐய நல்லார்கள் குழிய விழவினும், அங்கு அங்கு எல்லாம்
கைய பொன் ஆழி வெண் சங்கொடும் காண்பான் அவாவுவன் நான்—
மைய வண்ணா ! மணியே ! முத்தமே ! என்-தன் மாணிக்கமே ! 84

மாலைப் பொழுது கண்டு வருந்திய தலைவி இரங்குதல்

மாணிக்கம் கொண்டு குரங்கு எறிவு ஒத்து, இருளோடு முட்டி,
ஆணிப்பொன் அன்ன சுடர் படும் மாலை ; உலகு அளந்த
மாணிக்கமே ! என் மரதகமே ! மற்று ஒப்பாரை இல்லா
ஆணிப்பொன்னே ! அடியேன் அடி ஆவி அடைக்கலமே. 85

தலைவனைப் பிரிந்த தலைவி இரங்குதல்

அடைக் கலத்து ஒங்கு கமலத்து அலர் அயன் சென்னி என்னும்
முடைக் கலத்து ஊண் முன் அரனுக்கு நீக்கியை, ஆழி சங்கம்
படைக்கலம் ஏந்தியை, வெண்ணெய்க்கு அன்று ஆய்ச்சி வன் தாம்புகளால்
புடைக்கலந்தானை, எம்மானை—என் சொல்லிப் புலம்புவனே ? 86

அன்றிலுக்கும் ஆழிக்கும் ஆற்றாத தலைவிக்குத் தோழி இரங்குதல்

புலம்பும் கன குரல் போழ் வாய அன்றிலும், பூங் கழி பாய்ந்து
அலம்பும் கன குரல் சூழ் திரை ஆழியும், ஆங்கு அவை, நின்
வலம் புள்ளது நலம் பாடும் இது குற்றமாக, வையம்
சிலம்பும்படி செய்வதே—திருமால் ! இத் திருவினையே. 87

போலிகண்டு அழிகிற தலைவி ஆற்றாமைக்கு இரங்குதல்

திருமால் உரு ஒக்கும் மேரு ; அம் மேருவில் செஞ்சுடரோன்
திருமால் திருக்கைத் திருச் சக்கரம் ஒக்கும் ; அன்ன கண்டும்,
திருமால் உருவோடு அவன் சின்னமே பிதற்றா நிற்பது ஓர்
திரு மால் தலைக்கொண்ட நங்கட்கு எங்கே வரும்—தீவினையே ? 88

தலைவனது கலவிக்கு விரைகிற தலைவி இரங்குதல்

தீவினைக்கு ஆரு நஞ்சை, நல் வினைக்கு இன் அமுதத்தினை,
பூவினை மேவிய தேவி மணாளனை, புன்மை எள்காது
ஆவினை மேய்க்கும் வல் ஆயனை, அன்று உலகு ஈர் அடியால்
தாவின ஏற்றை, எம்மானை, எஞ்ஞான்று தலைப்பெய்வனே ? 89

தலைவனைப் பிரிந்த தலைவி காலத்தின் நீட்டிப்புக்கு ஆற்றாது உரைத்தல்

தலைப்பெய்து யான் உன் திருவடி சூடும் தகைமையினால்,
நிலைப்பு எய்த ஆக்கைக்கு நோற்ற இம் மாயமும், மாயம் செவ்வே
நிலைப்பு எய்திலாத நிலைமையும், காண்தோறு அசுரர் குழாம்
தொலைப் பெய்த நேமி எந்தாய் ! தொல்லை ஊழி சுருங்கலதே. 90

தோழிக்குத் தலைவி தன் கற்பு உணர்த்தி, அறத்தொடு நிற்றல்

சுருங்கு உறி வெண்ணெய் தொடு உண்ட கள்வனை, வையம் முற்றும்
ஒருங்குற உண்ட பெரு வயிற்றாளனை, மாவலிமாட்டு
இருங் குறள் ஆகி இசைய ஓர் மூவடி வேண்டிச் சென்ற
பெருங் கிறியானை அல்லால், அடியேன் நெஞ்சம் பேணலதே. 91

வேந்தற்கு உற்றுழிப் பிரிவில் தலைவனைக் குறித்துத் தலைவி இரங்குதல்

பேண் நலம் இல்லா அரக்கர் முந்நீர பெரும் பதிவாய்
நீள் நகர் நீள் எரி வைத்தருளாய் என்று, நின்னை விண்ணோர்,
தாள் நிலம் தோய்ந்து, தொழுவர்—நின் மூர்த்தி பல் கூற்றில் ஒன்று
காணலும் ஆம்கொல் என்றே ?—வைகல் மாலையும் காலையுமே. 92

இருள் கண்டு அஞ்சுகிற தலைவி தோழியையும் செவிலியரையும் வெறுத்தல்

காலை, வெய்யோற்கு முன் ஓட்டுக்கொடுத்த கங்குல்-குறும்பர்
மாலை, வெய்யோன் பட வையகம் பாவுவர் ; அன்ன கண்டும்,
காலை நல் ஞானத் துறை படிந்து ஆடி, கண் போது செய்து,
மாலை நல் நாவில் கொள்ளார் ; நினையார் அவன் மைப் படியே. 93

தலைவியைக் கண்ட பாங்கன் தலைவனை அடுத்து, வியந்து கூறுதல்

மைப் படி மேனியும் செந்தாமரைக் கண்ணும் வைதிகரே
மெய்ப்படியால் உன் திருவடி சூடும் தகைமையினார் ;
எப்படி ஊர் ஆ மிலைக்கக் குருட்டு ஆ மிலைக்கும் என்னும்
அப்படி யானும் சொன்னேன் ; அடியேன் மற்று யாது என்பனே? 94

தலைவி அறத்தொடு நிற்கத் துணிதல்

யாதானும் ஓர் ஆக்கையில் புக்கு, அங்கு ஆப்புண்டும், ஆப்பு அவிழ்ந்தும்,
மூது ஆவியில் தடுமாறும் உயிர், முன்னமே ; அதனால்,
யாதானும் பற்றி, நீங்கும் விரதத்தை நல் வீடுசெய்யும்
மாதாவினை, பிதுவை, திருமாலை, வணங்குவனே. 95

தலைவி வெறி விலக்குவிக்க நினைத்தல்

வணங்கும் துறைகள் பல பல ஆக்கி, மதி விகற்பால்
பிணங்கும் சமயம் பல பல ஆக்கி, அவைஅவைதோறு
அணங்கும் பல பல ஆக்கி, நின் மூர்த்தி பரப்பி வைத்தாய்;
இணங்கும் நின்னோரை இல்லாய்! நின்கண் வேட்கை எழுவிப்பனே. 96

தலைவன் பிரிவில் துயில் கொள்ளாத தலைவி இரங்குதல்

எழுவதும், மீண்டே படுவதும், பட்டு, எனை ஊழிகள் போய்க்
கழிவதும், கண்டு கண்டு எள்கல் அல்லால், இமையோர்கள் குழாம்
தொழுவதும் சூழ்வதும் செய் தொல்லை மாலைக் கண்ணாரக் கண்டு,
கழிவது ஓர் காதல் உற்றார்க்கும் உண்டோ—கண்கள் துஞ்சுதலே? 97

தலைவனது அருமை நினைந்து கவல்கிற தலைவிக்குத் தோழி கூறுதல்

துஞ்சா முனிவரும் அல்லாதவரும் தொடர நின்ற,
எஞ்சாப் பிறவி இடர் கடிவான், இமையோர்-தமக்கும்,
தன் சார்வு இலாத தனிப் பெரு மூர்த்தி-தன் மாயம் செவ்வே
நெஞ்சால் நினைப்பு-அரிதால்—வெண்ணெய் ஊண் என்னும் ஈனச் சொல்லே. 98

தலைவனிடத்துள்ள அன்பின் உறுதியைத் தலைவி தோழிக்குக் கூறுதல்

ஈனச் சொல் ஆயினும் ஆக: எறி திரை வையம் முற்றும்
ஏனத்து உருவாய் இடந்த பிரான், இருங் கற்பகம் சேர்
வானத்தவர்க்கும், அல்லாதவர்க்கும், மற்று எல்லா எவர்க்கும்
ஞானப் பிரானை அல்லால், இல்லை—நான் கண்ட நல்லதுவே. 99

நூற்பயன்

நல்லார் நவில் குருகூர் நகரான், திருமால் திருப் பேர்
வல்லார் அடிக் கண்ணி சூடிய மாறன், விண்ணப்பம் செய்த
சொல் ஆர் தொடையல் இந் நூறும் வல்லார் அழுந்தார்—பிறப்பு ஆம்
பொல்லா அருவினை மாய வன் சேற்று அள்ளல் பொய்ந் நிலத்தே. 100

திருவிருத்தம் முற்றும்

ஸ்ரீ:

சடகோபர் அருளிச்செய்த

திருவாசிரியம்

செக்கர் மா முகில் உடுத்து, மிக்க
செஞ் சுடர்ப் பரிதி சூடி,
அம் சுடர் மதியம் பூண்டு,
பல சுடர் புனைந்த பவளச் செவ்வாய்
திகழ் பசுஞ் சோதி மரதகக் குன்றம்
கடலோன் கைம்மிசைக் கண்வளர்வது போல்,
பீதக ஆடை, முடி, பூண் முதலா
மேதகு பல் கலன் அணிந்து, சோதி
வாயவும் கண்ணவும் சிவப்ப, மீதிட்டுப்
பச்சை மேனி மிகப் பகைப்ப,
நச்சு வினைக் கவர்தலை அரவின் அமளி ஏறி,
எறி கடல் நடுவுள் அறி துயில் அமர்ந்து,
சிவன், அயன், இந்திரன் இவர் முதல் அனைத்தோர்
தெய்வக் குழாங்கள் கைதொழ, கிடந்த
தாமரை உந்தித் தனிப் பெரு நாயக!
மூவுலகு அளந்த சேவடியோயே! 1

உலகு படைத்து உண்ட எந்தை அறை கழல்
சுடர்ப் பூந் தாமரை சூடுதற்கு அவாவு
ஆர்-உயிர் உருகி உக்க நேரிய
காதல் அன்பில் இன்பு ஈன் தேறல்
அமுத வெள்ளத்தான் ஆம் சிறப்பு விட்டு,
ஒரு பொருட்கு அசைவோர் அசைக:
திருவொடு மருவிய
இயற்கை மாயாப் பெரு விறல் உலகம்
மூன்றினொடு நல் வீடு பெறினும்,
கொள்வது எண்ணுமோ—தெள்ளியோர் குறிப்பே? 2

குறிப்பில் கொண்டு நெறிப்பட உலகம்
மூன்று உடன் வணங்கு தோன்று புகழ் ஆணை
மெய் பெற நடாய தெய்வம் மூவரில்
முதல்வன் ஆகி, சுடர் விளங்கு அகலத்து
வரை புரை திரை பொர, பெரு வரை வெருவர,
உரும் முரல் ஒலி மலி நளிர் கடல் பட அரவு-
அரசு உடல் தட வரை சுழற்றிய
தனி மாத் தெய்வத்து அடியவர்க்கு இனி நாம்
ஆளாகவே,
இசையுங்கொல்—ஊழிதோறு ஊழி, ஓவாதே? 3

ஊழிதோறு ஊழி, ஓவாது, வாழிய
என்று, யாம் தொழ, இசையுங்கொல்—யாவகை
உலகமும் யாவரும் இல்லா மேல் வரும்
பெரும்பாழ்க் காலத்து இரும் பொருட்கு எல்லாம்
அரும் பெறல் தனி வித்து ஒரு தான் ஆகி,
தெய்வ நான்முகக் கொழு முளை ஈன்று,
முக்கண் ஈசனொடு தேவு பல நுதலி,
மூவுலகம் விளைத்த உந்தி
மாயக் கடவுள் மா முதல் அடியே? 4

மா முதல் அடிப் போது ஒன்று கவிழ்த்து அலர்த்தி,
மண் முழுதும் அகப்படுத்து,
ஒண் சுடர் அடிப் போது ஒன்று விண் செலீஇ,
நான்முகப் புத்தேள் நாடு வியந்து உவப்ப,
வானவர் முறைமுறை வழிபட நெறீஇ,
தாமரைக் காடு மலர்க் கண்ணொடு
கனி வாய் உடையதும் ஆய், இரு நாயிறு
ஆயிரம் மலர்ந்தன்ன,
கற்பகக் காவு பற்பல அன்ன,
முடி, தோள் ஆயிரம் தழைத்த
நெடியோய்க்கு அல்லது, அடியதோ உலகே? 5

ஓஓ! உலகினது இயல்வே!—
ஈன்றோள் இருக்க, மணை நீராட்டி,
படைத்து, இடந்து,
உண்டு, உமிழ்ந்து, அளந்து தேளர்ந்து, உலகு அளிக்கும்
முதல் பெருங் கடவுள் நிற்ப, புடைப் பல
தான் அறி தெய்வம் பேணுதல்; தனது
புல்லறிவாண்மை பொருந்தக் காட்டி,
கொல்வன முதலா அல்லன முயலும்
இனைய செய்கை; இன்பு துன்பு அளி
தொல் மா மாயப் பிறவியுள் நீங்காப்
பல் மா மாயத்து அழுந்துமாம், நளிர்ந்தே! 6

நளிர் மதிச் சடையனும், நான்முகக் கடவுளும்,
தளிர் ஒளி இமையவர் தலைவனும், முதலா
யாவகை உலகமும், யாவரும், அகப்பட;
நிலம், நீர், தீ, கால், சுடர், இரு விசும்பும்,
மலர் சுடர் பிறவும், சிறிது உடன் மயங்க;
ஒரு பொருள் புறப்பாடு இன்றி, முழுவதும்
அகப்படக் கரந்து, ஓர் ஆல் இலைச் சேர்ந்த எம்
பெரு மா மாயனை அல்லது,
ஒரு மா தெய்வம் மற்று உடையமோ யாமே? 7

திருவாசிரியம் முற்றும்

ஸ்ரீ :

சடகோபர் அருளிச்செய்த

பெரிய திருவந்தாதி

முயற்றி சுமந்து, எழுந்து, முந்துற்ற நெஞ்சே!
இயற்றுவாய் எம்மொடு நீ கூடி ; நயப்பு உடைய
நா ஈன் தொடைக் கிளவியுள் பொதிவோம்—நல் பூவைப்
பூ ஈன்ற வண்ணன் புகழ். 1

புகழ்வோம் பழிப்போம் ; புகழோம் பழியோம் ;
இகழ்வோம் மதிப்போம் ; மதியோம் இகழோம் ; மற்று
எங்கள் மால் ! செங்கண் மால் ! சீறல் நீ ; தீவினையோம்
எங்கள் மால் கண்டாய் இவை. 2

இவை அன்றே நல்ல ; இவை அன்றே தீய ;
இவை என்று இவை அறிவனேலும், இவை எல்லாம்
என்னால் அடைப்பு, நீக்கு ஒண்ணாது ; இறையவனே !
என்னால் செயற்பாலது என் ? 3

என்னின் மிகு புகழார் யாவரே ? பின்னையும், மற்று
எண் இல் மிகு புகழேன் யான் அல்லால்—என்ன
கருஞ் சோதிக் கண்ணன் கடல் புரையும் சீலப்
பெருஞ்சோதிக்கு என் நெஞ்சு ஆட்பெற்று. 4

பெற்ற தாய் நீயே, பிறப்பித்த தந்தை நீ,
மற்றையார் ஆவாரும் நீ, பேசில் : எற்றேயோ—
மாய ! மா மாயவளை மாய, முலை வாய் வைத்த
நீ அம்மா ! காட்டும் நெறி ? 5

நெறி காட்டி நீக்குதியோ ? நின்பால் கரு மா
முறி மேனி காட்டுதியோ ? மேல் நாள் அறியோமை
என் செய்வான் எண்ணினாய் ? கண்ணனே! ஈது உரையாய்—
என் செய்தால், என் படோம் யாம் ? 6

யாமே அருவினையோம், சேயோம் : என் நெஞ்சினார்-
தாமே அணுக்கராய்ச் சார்ந்தொழிந்தார்—பூ மேய
செம்மாதை நின் மார்வில் சேர்வித்துப் பார் இடந்த
அம்மா!—நின் பாதத்து அருகு. 7

அருகும் சுவடும் தெரிவு உணரோம் ; அன்பே
பெருகும் மிக : இது என் ? பேசீர்—பருகலாம்
பண்புடையீர்! பார் அளந்தீர்! பாவியெம் கண் காண்பு-அரிய
நுண்பு உடையீர்!—நும்மை, நுமக்கு. 8

நுமக்கு அடியோம் என்று என்று, நொந்து உரைத்து என்? மாலார்-
தமக்கு அவர்-தாம் சார்வு-அரியர் ஆனால், எமக்கு இனி
யாதானும் ஆகிடு காண், நெஞ்சே! அவர்திறத்தே
யாதானும் சிந்தித்து இரு. 9

இரு நால்வர், ஈரைந்தின் மேல் ஒருவர் ; எட்டோடு
ஒரு நால்வர் ; ஓர் இருவர் அல்லால், திருமாற்கு
யாம் ஆர் ? வணக்கம் ஆர் ? ஏ பாவம்! நல் நெஞ்சே!
நாமா மிக உடையோம் நாழ். 10

நாழால் அமர் முயன்ற வல் அரக்கன் இன் உயிரை
வாழாவகை வலிதல் நின் வலியே ?—ஆழாத
பாரும் நீ ; வானும் நீ ; காலும் நீ ; தீயும் நீ ;
நீரும் நீ ; ஆய் நின்ற நீ. 11

நீ அன்றே ஆழ் துயரில் வீழ்விப்பான் நின்று உழன்றாய் ;
போய் ஒன்று சொல்லி என் ? போ, நெஞ்சே ! நீ என்றும்
காழ்த்து உபதேசம் தரினும், கைக்கொள்ளாய்—கண்ணன்தாள்
வாழ்த்துவதே கண்டாய் வழக்கு. 12

வழக்கொடு மாறுகோள் அன்று ; அடியார் வேண்ட,
இழக்கவும் காண்டும், இறைவ ! இழப்பு உண்டே ?
எம் ஆட்கொண்டு ஆகிலும், யான் வேண்ட, என் கண்கள்-
தம்மால் காட்டு—உன் மேனிச் சாய். 13

சாயால் கரியானை உள் அறியாராய், நெஞ்சே !
பேயார் முலைகொடுத்தார் பேயர் ஆய் ; நீ யார் ? போய்த்
தேம்பு ஊண் சுவைத்து, ஊன் அறிந்து அறிந்தும், தீவினை ஆம்
பாம்பார் வாய்க் கைந் நீட்டல் பார்த்து. 14

பார்த்து ஓர் எதிரிதா, நெஞ்சே ! படு துயரம்
பேர்த்து ஓதப் பீடு அழிவு ஆம் பேச்சு இல்லை ; ஆர்த்து ஓதம்
தம் மேனித் தாள் தடவ, தாம் கிடந்து, தம்முடைய
செம்மேனிக் கண்வளர்வார் சீர். 15

சீரால் பிறந்து, சிறப்பால் வளராது,
பேர் வாமன் ஆகாக்கால், பேராளா ! மார்பு ஆரப்
புல்கி, நீ உண்டு, உமிழ்ந்த பூமி நீர் ஏற்பு-அரிதே ?—
சொல்லு நீ, யாம் அறிய, சூழ்ந்து. 16

சூழ்ந்து அடியார் வேண்டினக்கால், தோன்றாது விட்டாலும்,
வாழ்ந்திடுவர் ; பின்னும், தம் வாய்திறவார்—சூழ்ந்து எங்கும்,
வாள் வரைகள் போல், அரக்கன் வன் தலைகள் தாம் இடிய,
தாள் வரை வில் ஏந்தினார் தாம். 17

தாம்பால் ஆப்புண்டாலும், அத் தழும்பு தான் இளகப்
பாம்பால் ஆப்புண்டு பாடு உற்றாலும், சோம்பாது, இப்
பல் உருவை எல்லாம் படர்வித்த வித்தா ! உன்
தொல் உருவை யார் அறிவார் ? சொல்லு. 18

சொல்லில் குறை இல்லை, சூது அறியா நெஞ்சமே !
எல்லி, பகல் என்னாது, எப்போதும், தொல்லைக்கண்
மாத் தானைக்கு எல்லாம் ஓர் ஐவரையே மாறு ஆகக்
காத்தானைக் காண்டும் ; நீ காண். 19

காணப்புகில், அறிவு கைக்கொண்ட நல் நெஞ்சம் !
நாணப்படும் அன்றே, நாம் பேசில் !—மாணி
உரு ஆகிக்கொண்டு, உலகம் நீர் ஏற்ற சீரான்
திரு ஆகம் தீண்டிற்றுச் சென்று. 20

சென்று அங்கு வெம் நரகில் சேராமல் காப்பதற்கு
இன்று இங்கு என் நெஞ்சால் இடுக்குண்ட—அன்று அங்குப்
பார் உருவும், பார் வளைத்த நீர் உருவும் கண் புதையக்
கார் உருவன்-தான் நிமிர்த்த கால். 21

காலே பொதத் திரிந்து, கத்துவராம் இனநாள்—
மாலார் குடிபுகுந்தார் என் மனத்தே—மேலால்,
தருக்கும் இடம்பாட்டினொடும் வல்வினையார் தாம் வீற்று-
இருக்கும் இடம் காணாது, இளைத்து. 22

இளைப்பாய், இளையாப்பாய்; நெஞ்சமே! சொன்னேன் :
இளைக்க நமன் தமர்கள் பற்றி, இளைப்பு எய்த
நாய் தந்து மோதாமல் நல்குவான், நல்காப்பான்—
தாய் தந்தை எவ் உயிர்க்கும் தான். 23

தானே தனித் தோன்றல்; தன் அளப்பு ஒன்று இல்லாதான் ;
தானே பிறர்கட்கும் தன் தோன்றல் ; தானே
இணைக்கில் பார் கீழ் மேல் ஆம்; மீண்டு அமைப்பான் ஆனால்,
அளக்கிற்பார் பாரின்மேல் ஆர் ? 24

ஆரானும் ஆதானும் செய்ய ; அகலிடத்தை
ஆராய்ந்து, அது திருத்தல் ஆவதே ? சீர் ஆர்
மனத்தலை வன் துன்பத்தை மாற்றினேன்—வானோர்
இனத் தலைவன் கண்ணனால், யான். 25

யானும், என் நெஞ்சும் இசைந்தொழிந்தோம், வல்வினையைக்
கானும் மலையும் புகக் கடிவான்—தான் ஓர்
இருள் அன்ன மா மேனி எம் இறையார் தந்த
அருள் என்னும் தண்டால் அடித்து. 26

அடியால் படி கடந்த முத்தோ ? அது அன்றேல்
முடியால் விசும்பு அளந்த முத்தோ ?—நெடியாய் !
செறி கழல் கொள் தாள் நிமிர்த்துச் சென்று, உலகம் எல்லாம்
அறிகிலமால், நீ அளந்த அன்று. 27

அன்றே, நம் கண் காணும் ஆழியான் கார் உருவம் ;
இன்றே, நாம் காணாது இருப்பதுவும்—என்றேனும்,
கட்கண்ணால் காணாத அவ் உருவை நெஞ்சு என்னும்
உட்கண்ணேல் காணும் உணர்ந்து. 28

உணர ஒருவர்க்கு எளியனே—செவ்வே
இணரும் துழாய் அலங்கல் எந்தை ? உணரத்
தனக்கு எளியர் எவ் அளவர், அவ் அளவன் ஆனால்,
எனக்கு எளியன் எம் பெருமான், இங்கு. 29

இங்கு, இல்லை பண்டுபோல் வீற்றிருத்தல்; என்னுடைய
செங்கண் மால் சீர்க்கும் சிறிது உள்ளம் ! அங்கே,
மடி அடக்கி நிற்பதனில், வல்வினையார்-தாம் ஈண்டு
அடி எடுப்பது அன்றோ அழகு ? 30

அழகும் அறிவோமாய், வல்வினையைத் தீர்ப்பான்,
நிழலும் அடி தாறும் ஆனோம்—சுழலக்
குடங்கள் தலைமீது எடுத்துக் கொண்டு ஆடி, அன்று அத்
தடங் கடலை மேயார்-தமக்கு. 31

தமக்கு அடிமை வேண்டுவார் தாமோதரனார்-
தமக்கு அடிமை செய் என்றால் செய்யாது, எமக்கு என்று
தாம் செய்யும் தீவினைக்கே தாழ்வுறுவர்—நெஞ்சினார் :
யாம் செய்வது இவ்விடத்து இங்கு யாது ? 32

யாதானும் ஒன்று அறியில், தன் உகக்கில், என் கொலோ—
யாதானும் நேர்ந்து, அணுகா ஆறு-தான்—யாதானும்
தேறுமா செய்யா அசுரர்களை நேமியால்
பாறுபாறு ஆக்கினான்பால் ? 33

பால் ஆழி நீ கிடக்கும் பண்பை யாம் கேட்டேயும்,
கால் ஆழும் ; நெஞ்சு அழியும் ; கண் சுழலும்—நீல் ஆழிச்
சோதியாய் ! ஆதியாய் ! தொல்வினை எம்பால் கடியும்
நீதியாய் ! நின் சார்ந்து நின்று. 34

நின்றும், இருந்தும், கிடந்தும், திரிதந்தும்,
ஒன்றும் ஓவாற்றான் ; என் நெஞ்சு அகலான்—அன்று அம் கை
வன் புடையால் பொன்பெயரோன் வாய் தகர்த்து, மார்வு இடந்தான்
அன்புடையன் அன்றே அவன் ? 35

அவன் ஆம் ? இவன் ஆம் ? உவன் ஆம் ? மற்று உம்பர்-
அவன் ஆம் ? அவன் என்று இராதே, அவன் ஆம்
அவனே எனத் தெளிந்து, கண்ணனுக்கே தீர்ந்தால்,
அவனே எவனேலும் ஆம். 36

ஆம் ஆறு அறிவுடையார் ஆவது அரிது அன்றே ?
நாமே அது உடையோம், நல் நெஞ்சே ! பூ மேய்
மதுகரம் மே தண் துழாய் மாலாரை வாழ்த்து ஆம்-
அது கரமே அன்பால் அமை. 37

அமைக்கும் பொழுது உண்டே—ஆராயில், நெஞ்சே !
இமைக்கும் பொழுதும் ? இடைச்சி குமைத்திறங்கள்
ஏசியே ஆயினும், ஈன் துழாய் மாயனையே
பேசியே போக்காய் பிழை. 38

பிழைக்க முயன்றோமோ, நெஞ்சமே ! பேசாய் ?
தழைக்கும் துழாய் மார்வன்-தன்னை அழைத்து, ஒருகால்
போய், உபகாரம் பொலியக் கொள்ளாது, அவன் புகழே
வாய் உபகாரம் கொண்ட வாய்ப்பு. 39

வாய்ப்போ இது ஒப்ப மற்று இல்லை ; வா, நெஞ்சே !
போய்ப் போஒய் வெம் நரகில் பூவியேல் ; தீப் பால
பேய்த் தாய் உயிர் கலாய்ப் பால் உண்டு, அவள் உயிரை
மாய்த்தானை வாழ்த்தே வலி. 40

வலியம் என நினைந்து, வந்து எதிர்ந்த மல்லர்
வலிய முடி இடிய வாங்கி, வலிய நின்
பொன் ஆழிக் கையால் புடைத்திடுதி ; கீளாதே,
பல் நாளும் நிற்கும் இப் பார். 41

பார் உண்டான்; பார் உமிழ்ந்தான்; பார் இடந்தான்; பார் அளந்தான்;
பார்-இடம் முன் படைத்தான் என்பரால்; பார்-இடம்
ஆவானும் தான் ஆனால், ஆர் இடமே? மற்றொருவர்க்கு
ஆவான் புகாவால் அவை. 42

அவையம் என நினைந்து வந்த சுரர்பாலே
நவையை நளிர்விப்பான்-தன்னை, கவை இல்
மனத்து உயர வைத்திருந்து, வாழ்த்தாதார்க்கு உண்டோ—
மனத் துயரை மாய்க்கும் வகை ? 43

வகை சேர்ந்த நல் நெஞ்சும், நா உடைய வாயும்,
மிக வாய்ந்து வீழா எனிலும், மிக ஆய்ந்து,
மாலைத் தாம் வாழ்த்தாது இருப்பர் ; இது அன்றே
மேலைத் தாம் செய்யும் வினை ? 44

வினையார் தர முயலும் வெம்மையை அஞ்சி,
தினையாம் சிறிதளவும் செல்ல நினையாது,
வாசகத்தால் ஏத்தினேன்—வானோர் தொழுது இறைஞ்சும்
நாயகத்தான் பொன் அடிக்கள் நான். 45

நான் கூறும் கூற்றாவது இத்தனையே—நாள்நாளும்
தேங்கு ஓத நீர் உருவன், செங்கண் மால், நீங்காத
மா கதி ஆம்; வெம் நரகில் சேராமல் காப்பதற்கு,
நீ, கதி ஆம், நெஞ்சே ! நினை. 46

நினைத்து, இறைஞ்சி, மானிடவர் ஒன்று இரப்பர் என்றே
நினைத்திடவும் வேண்டா நீ ; நேரே நினைத்து இறைஞ்ச
எவ் அளவர் ? எவ் இடத்தோர் ? மாலே ! அது-தானும்
எவ் அளவும் உண்டோ—எமக்கு ? 47

எமக்கு யாம் விண் நாட்டுக்கு உச்சமது ஆம் வீட்டை
அமைத்திருந்தோம் ; அஃது அன்றே ஆம் ஆறு?—அமைப் பொலிந்த
மென் தோளி காரணமா, வெம் கோட்டு ஏறு ஏழ் உடனே
கொன்றானையே மனத்துக் கொண்டு. 48

கொண்டல்-தான், மால் வரை-தான், மா கடல்-தான், கூர் இருள்-தான்
வண்டு அறாப் பூவை-தான், மற்றுத்தான் கண்ட நாள்,
கார் உருவம் காண்தோறும் நெஞ்சு ஓடும்—கண்ணனார்
பேர் உரு என்று, எம்மைப் பிரிந்து. 49

பிரிந்து, ஒன்று நோக்காது, தம்முடைய பின்னே
திரிந்து உழலும் சிந்தனையார்-தம்மை, புரிந்து ஒருகால்,
ஆஆ! என இரங்கார், அந்தோ! வலிதேகொல்—
மா வாய் பிளந்தார் மனம் ? 50

மனம் ஆளும் ஓர் ஐவர் வன் குறும்பர்-தம்மைச்
சினம் மாள்வித்து, ஓர் இடத்தே சேர்த்து, புனம் மேய
தண் துழாயான் அடியைத் தாம் காணும்-அஃது அன்றே—
வண் துழாம் சீரார்க்கு மாண்பு ? 51

மாண் பாவித்து அஞ்ஞான்று மண் இரந்தான், மாயவள் நஞ்சு
ஊண் பாவித்து உண்டானது ஓர் உருவம் காண்பான், நம்
கண் அவா ; மற்று ஒன்று காண் உறா ; சீர் பரவாது
உண்ண, வாய்-தான் உறுமோ ஒன்று ? 52

ஒன்று உண்டு, செங்கண்மால்! யான் உரைப்பது ; உன் அடியார்க்கு
என் செய்வன் என்றே இருத்தி நீ; நின் புகழில்
வைகும் தம் சிந்தையிலும் மற்று இனிதோ—நீ அவர்க்கு
வைகுந்தம் என்று அருளும் வான் ? 53

வானோ, மறி கடலோ, மாருதமோ, தீயகமோ,
கானோ ஒருங்கிற்று? கண்டிலமால்—ஆன் ஈன்ற
கன்று உயர, தாம் எறிந்து, காய் உதிர்த்தார் தாள் பணிந்தோம்—
வன் துயரை, ஆஆ! மருங்கு. 54

மருங்கு ஓதம் மோதும் மணி நாகணையார்
மருங்கே வர அரியரேலும், ஒருங்கே
எமக்கு அவரைக் காணலாம், எப்பொழுதும் ; உள்ளால்
மனக் கவலை தீர்ப்பார் வரவு. 55

வரவு ஆறு ஒன்று இல்லையால்; வாழ்வு இனிதால்; எல்லே!—
ஒரு ஆறு ஒருவன் புகாவாறு உரு மாறும்
ஆயவர்-தாம், சேய்வர்-தாம், அன்று உலகம் தாயவர்-தாம்,
மாயவர்-தாம், காட்டும் வழி. 56

வழித் தங்கு வல்வினையை மாற்றானோ? நெஞ்சே!—
தழீஇக்கொண்டு போர் அவுணன்-தன்னை, சுழித்து எங்கும்,
தாழ்வு இடங்கள் பற்றி, புலால்-வெள்ளம்-தான் உகள,
வாழ்வு அடங்க, மார்வு இடந்த மால். 57

மாலே! படிச் சோதி! மாற்றேல் இனி; உனது
பாலே போல் சீரில் பழுத்தொழிந்தேன்: மேலால்,
பிறப்பு இன்மை பெற்று, அடிக்கீழ்க் குற்றேவல் அன்று;
மறப்பு இன்மை யான் வேண்டும் மாடு. 58

மாடே வரப்பெறுவராம் என்றே, வல்வினையார்
காடானும் ஆதானும் கைக்கொள்ளார்—ஊடே போய்ப்
பேர் ஓதம் சிந்து திரைக் கண்வளரும் பேராளன்
பேர் ஓத, சிந்திக்க, பேர்ந்து? 59

பேர்ந்து ஒன்று நோக்காது, பின் நிற்பாய், நில்லாப்பாய்—
ஈர்ந் துழாய் மாயனையே; என் நெஞ்சே! பேர்ந்து எங்கும்
தொல்லை மா வெம் நரகில் சேராமல் காப்பதற்கு
இல்லை காண் மற்றோர் இறை. 60

இறை முறையான் சேவடிமேல் மண் அளந்த அந் நாள்
மறை முறையால் வான் நாடர் கூடி, முறைமுறையின்
தாது இலகு பூத் தெளித்தால் ஒவ்வாதே—தாழ் விசும்பின்-
மீது இலகித் தான் கிடக்கும் மீன்? 61

மீன் என்னும் கம்பில் வெறி என்னும் வெள்ளி வேய்,
வான் என்னும் கேடு இலா வான் குடைக்குத் தான் ஓர்
மணிக் காம்பு போல் நிமிர்ந்து, மண் அளந்தான் நங்கள்
பிணிக்கு ஆம் பெரு மருந்து, பின். 62

பின் துரக்கும் காற்று இழந்த சூல் கொண்டல் பேர்ந்தும் போய்,
வன் திரைக்கண் வந்து அணைந்த வாய்மைத்தே—அன்று,
திருச் செய்ய நேமியான் தீ அரக்கி மூக்கும்
பருச் செவியும் ஈர்ந்த பரன். 63

பரன் ஆம் அவன் ஆதல் பாவிப்பர் ஆகில்,
உரனால், ஒரு மூன்று போதும், மரம் ஏழ் அன்று
எய்தானை, புள்ளின் வாய் கீண்டானையே—அமரர்
கைதான் தொழாவே, கலந்து? 64

கலந்து நலியும் கடுந் துயரை, நெஞ்சே!
மலங்க அடித்து மடிப்பான், விலங்கல் போல்
தொல் மாலை, கேசவனை, நாரணனை, மாதவனை,
சொல்-மாலை எப்பொழுதும் சூட்டு. 65

சூட்டாய நேமியான், தொல் அரக்கன் இன் உயிரை
மாட்டே துயர் இழைத்த மாயவனை, ஈட்ட
வெறி கொண்ட தண் துழாய் வேதியனை, நெஞ்சே!
அறி கண்டாய்: சொன்னேன் அது. 66

அதுவோ நன்று என்று, அங்கு அமர் உலகோ வேண்டில்,
அதுவோ பொருள் இல்லை அன்றே? அது ஒழிந்து,
மண் நின்று ஆள்வேன் எனிலும் கூடும்; மட நெஞ்சே!
கண்ணன் தாள் வாழ்த்துவதே கல். 67

கல்லும், கனை கடலும், வைகுந்த வான் நாடும்
புல் என்று ஒழிந்தனகொல்? ஏ பாவம்! வெல்ல
நெடியான், நிறம் கரியான், உள்புகுந்து நீங்கான்—
அடியேனது உள்ளத்து அகம். 68

அகம் சிவந்த கண்ணினர் ஆய், வல்வினையர் ஆவார்
முகம் சிதைவராம் அன்றே, முக்கி—மிகும் திருமால்
சீர்க் கடலை உள் பொதிந்த சிந்தனையேன்-தன்னை
ஆர்க்கு அடல் ஆம், செவ்வே அடர்த்து? 69

அடர் பொன் முடியானை, ஆயிரம் பேரானை,
சுடர் கொள் சுடர் ஆழியானை, இடர் கடியும்
மாதா பிதுவாக வைத்தேன் எனது உள்ளே—
யாது ஆகில் யாதே இனி? 70

இனி நின்று, நின் பெருமை யான் உரைப்பது என்னே?
தனி நின்ற சார்வு இலா மூர்த்தி! பனி நீர்
அகத்து உலவு செஞ்சடையான் ஆகத்தான்; நான்கு
முகத்தான் நின் உந்தி முதல். 71

முதல் ஆம் திரு உருவம் மூன்று என்பர்; ஒன்றே
முதல் ஆகும் மூன்றுக்கும் என்பர்; முதல்வா!
நிகர் இலகு கார் உருவா! நின் அகத்தது அன்றே—
புகர் இலகு தாமரையின் பூ? 72

பூவையும், காயாவும், நீலமும், பூக்கின்ற
காவி மலர் என்றும் காண்தோறும், பாவியேன்
மெல் ஆவி, மெய் மிகவே பூரிக்கும்—அவ்வவை
எல்லாம் பிரான் உருவே என்று. 73

என்றும் ஒருநாள் ஒழியாமை யான் இரந்தால்,
ஒன்றும் இரங்கார்; உருக் காட்டார்—குன்று
குடை ஆக ஆ காத்த கோவலனார்: நெஞ்சே!
புடை தான் பெரிதே புவி. 74

புவியும், இரு விசும்பும் நின் அகத்த; நீ என்
செவியின் வழி புகுந்து, என் உள்ளாய்; அவிவு இன்றி
யான் பெரியன், நீ பெரியை என்பதனை யார் அறிவார்?
ஊன் பருகு நேமியாய்! உள்ளு. 75

உள்ளிலும் உள்ளம் தடிக்கும்; வினைப் படலம்
விள்ள விழித்து, உன்னை மெய் உற்றால், உள்ள
உலகு அளவும் யானும் உளன் ஆவன்; என்கொல்?—
உலகு அளந்த மூர்த்தி! உரை. 76

உரைக்கில் ஓர் சுற்றத்தார் உற்றார் என்று ஆரே?
இரைக்கும் கடல் கிடந்த எந்தாய்! உரைப்பு எல்லாம்
நின் அன்றி மற்று இலேன் கண்டாய்—எனது உயிர்க்கு ஓர்
சொல் நன்றி ஆகும் துணை. 77

துணை, நாள், பெருங் கிளையும், தொல் குலமும், சுற்றத்து
இணை, நாளும் இன்பு உடைத்தாமேலும், கணை நாணில்
ஓவாத் தொழில் சார்ங்கன் தொல் சீரை, நல் நெஞ்சே!
ஓவாத ஊணாக உண். 78

உள் நாட்டுத் தேசு அன்றே? ஊழ்வினையை அஞ்சுமே?
விண் நாட்டை ஒன்று ஆக மெச்சுமே?—மண் நாட்டில்
ஆர் ஆகி எவ் இழிவிற்று ஆனாலும், ஆழி அங்கைப்
பேர் ஆயற்கு ஆள் ஆம் பிறப்பு. 79

பிறப்பு இறப்பு மூப்புப் பிணி துறந்து, பின்னும்
இறக்கவும் இன்பு உடைத்தாமேலும், மறப்பு எல்லாம்
ஏதமே என்று அல்லால் எண்ணுவனே—மண் அளந்தான்
பாதமே ஏத்தாப் பகல்? 80

பகல் இரா என்பதுவும் பாவியாது, எம்மை
இகல் செய்து, இரு பொழுதும் ஆள்வர்; தகவாத்
தொழும்பர் இவர், சீர்க்கும் துணை இலர் என்று ஓரார்—
செழும் பரவை மேயார், தெரிந்து. 81

தெரிந்துணர்வு ஒன்று இன்மையால், தீவினையேன் வாளா
இருந்தொழிந்தேன், கீழ் நாள்கள் எல்லாம்—கரந்துருவின்
அம் மானை அந்நான்று பின் தொடர்ந்த ஆழி அங்கை
அம்மானை ஏத்தாது அயர்த்து. 82

அயர்ப்பாய், அயராப்பாய், நெஞ்சமே! சொன்னேன்—
உயப்போம் நெறி இதுவே கண்டாய்; செயற்பால
அல்லவே செய்கிறுதி, நெஞ்சமே! அஞ்சினேன்;
மல்லர் நாள் வவ்வினனை வாழ்த்து. 83

வாழ்த்தி, அவன் அடியைப் பூப் புனைந்து, நின் தலையைத்
தாழ்த்து, இரு கை கூப்பு என்றால், கூப்பாத—பாழ்த்த விதி!
எங்கு உற்றாய் என்று அவனை ஏத்தாது—என் நெஞ்சமே!
தங்கத்தான் ஆமேலும் தங்கு. 84

தங்கா முயற்றிய ஆய், தாழ் விசும்பின்-மீது பாய்ந்து,
எங்கே புக்கு, எத் தவம் செய்திட்டனகொல்—பொங்கு ஓதத்
தண் அம் பால்-வேலைவாய்க் கண்வளரும் என்னுடைய
கண்ணன்பால் நல் நிறம் கொள் கார்? 85

கார் கலந்த மேனியான், கை கலந்த ஆழியான்,
பார் கலந்த வல் வயிற்றான், பாம்பு-அணையான் சீர் கலந்த
சொல் நினைந்து போக்காரேல், சூழ்வினையின் ஆழ் துயரை
என் நினைந்து, போக்குவர் இப்போது? 86

இப்போதும், இன்னும் இனிச் சிறிது நின்றாலும்,
எப்போதும் ஈதே சொல், என் நெஞ்சே! எப்போதும்
கை கழலா நேமியான் நம்மேல் வினை கடிவான்,
மொய் கழலே ஏத்த முயல். 87

பெரிய திருவந்தாதி முற்றும்

2672

ஸ்ரீ:

திருமங்கை ஆழ்வார் அருளிச்செய்த

திரு எழுகூற்றிருக்கை

ஒரு பேர் உந்தி இரு மலர்த் தவிசில்
ஒருமுறை அயனை ஈன்றனை; ஒருமுறை,
இரு சுடர் மீதினில் இயங்கா மும் மதிள்-
இலங்கை இரு கால் வளைய, ஒரு சிலை
ஒன்றிய ஈர் எயிற்று அழல் வாய் வாளியில்
அட்டனை; மூவடி நானிலம் வேண்டி,
முப்புரி நூலொடு மான் உரி இலங்கு
மார்வினில் இரு பிறப்பு ஒரு மாண் ஆகி,
ஒருமுறை ஈர் அடி மூவுலகு அளந்தனை;
நால் திசை நடுங்க அம் சிறைப் பறவை
ஏறி, நால் வாய் மும் மதத்து இரு செவி
ஒரு தனி வேழத்து அரந்தையை ஒருநாள்
இரு நீர் மடுவுள் தீர்த்தனை; முத் தீ,
நான்மறை, ஐ வகை வேள்வி, அறு தொழில்
அந்தணர் வணங்கும் தன்மையை; ஐம் புலன்
அகத்தினுள் செறித்து, நான்கு உடன் அடக்கி,
முக் குணத்து இரண்டு-அவை அகற்றி, ஒன்றினில்
ஒன்றி நின்று, ஆங்கு இரு பிறப்பு அறுப்போர்
அறியும் தன்மையை; முக் கண், நால் தோள்,
ஐ வாய் அரவோடு ஆறு பொதி சடையோன்
அறிவு-அரும் தன்மைப் பெருமையுள் நின்றனை;
ஏழ் உலகு எயிற்றினில் கொண்டனை; கூறிய
அறு சுவைப் பயனும் ஆயினை; சுடர் விடும்
ஐம் படை அங்கையுள் அமர்ந்தனை; சுந்தர
நால் தோள் முந்நீர் வண்ண! நின் ஈர் அடி
ஒன்றிய மனத்தால் ஒரு மதி முகத்து
மங்கையர் இருவரும் மலர்அன அங்கையில்
முப்பொழுதும் வருட, அறிதுயில் அமர்ந்தனை;
நெறி முறை நால் வகை வருணமும் ஆயினை;
மேதகும் ஐம் பெரும் பூதமும் நீயே!

அறுபதம் முரலும் கூந்தல் காரணம்
ஏழ் விடை அடங்கச் செற்றனை;
அறு வகைச் சமயமும் அறிவு-அரு நிலையினை;
ஐம்பால் ஓதியை ஆகத்து இருத்தினை;
அறம் முதல் நான்கு-அவை ஆய்,
மூர்த்தி மூன்று ஆய், இரு வகைப் பயன் ஆய்,
ஒன்று ஆய் விரிந்து நின்றனை; குன்றா
மது மலர்ச் சோலை வண் கொடிப் படப்பை
வரு புனல் பொன்னி மா மணி அலைக்கும்
செந்நெல் ஒண் கழனித் திகழ் வனம் உடுத்த
கற்போர் புரிசைக் கனக மாளிகை
நிமிர் கொடி விசும்பில் இளம் பிறை துவக்கும்,
செல்வம் மல்கு, தென் திருக் குடந்தை
அந்தணர் மந்திர மொழியுடன் வணங்க,
ஆடு அரவு அமளியில் அறிதுயில் அமர்ந்த
பரம! நின் அடி-இணை பணிவன்,
வரும் இடர் அகல—மாற்றோ வினையே.

திரு எழுகூற்றிருக்கை முற்றும்

ஸ்ரீ :

திருமங்கை ஆழ்வார் அருளிச்செய்த

சிறுத் திருமடல்

கார் ஆர் வரைக் கொங்கை, கண் ஆர் கடல் உடுக்கை,
சீர் ஆர் சுடர்ச் சுட்டி, செங்கலுழிப் பேர் ஆற்றுப்
பேர் ஆர மார்வில், பெரு மா மழைக் கூந்தல்,
நீர் ஆர வேலி நிலமங்கை என்னும் இப்
பாரோர் சொலப்பட்ட மூன்று அன்றே—அம் மூன்றும் 1
ஆராயில், தானே அறம், பொருள், இன்பம் என்று :
ஆர் ஆர் இவற்றினிடை அதனை எய்துவார்
சீர் ஆர் இரு கலையும் எய்துவர்—சிக்கென மற்று 2
ஆரானும் உண்டு என்பார் ; என்பது-தான் அதுவும்
ஓராமை அன்றே உலகத்தார் சொல்லும் சொல் ;
ஓராமை ஆம் ஆறு அது உரைக்கேன் ; கேளாமே :
கார் ஆர் புரவி ஏழ் பூண்ட தனி ஆழி
தேர் ஆர் நிறை கதிரோன் மண்டலத்தைக் கீண்டு புக்கு,
ஆரா அமுதம் அங்கு எய்தி—அதில் நின்றும் 3
வாராது ஒழிவது ஒன்று உண்டே? அது நிற்க,
ஏர் ஆர் முயல் விட்டுக் காக்கைப் பின் போவதே !
ஏர் ஆர் இளமுலையீர் ! என்-தனக்கு உற்றது-தான்
கார் ஆர் குழல் எடுத்துக் கட்டி—கதிர் முலையை 4
வார் ஆர வீக்கி, மணி மேகலை திருத்தி,
ஆர் ஆர் அயில் வேல்-கண் அஞ்சனத்தின் நீறு அணிந்து,
சீர் ஆர் செழும் பந்து கொண்டு அடியா நின்றேன் நான் :
நீர் ஆர் கமலம் போல் செங்கண் மால் என்று ஒருவன்
பாரோர்கள் எல்லாம் மகிழ, பறை கறங்க,
சீர் ஆர் குடம் இரண்டு ஏந்தி—செழுந் தெருவே 5
ஆர், ஆர் எனச் சொல்லி, ஆடும்-அது கண்டு,
ஏர் ஆர் இளமுலையார், அன்னையரும், எல்லாரும்,
வாராயோ என்றார்க்குச் சென்றேன், என் வல்வினையால் ;
கார் ஆர் மணி நிறமும், கை வளையும் காணேன் நான் ;
ஆரானும் சொல்லிற்றும் கொள்ளேன்—அறிவு அழிந்து, 6
தீரா உடம்பொடு பேதுறுவேன் கண்டு இரங்கி,
ஏர் ஆர் கிளிக் கிளவி எம் அனை-தான் வந்து, என்னைச்
சீர் ஆர் செழும் புழுதிக் காப்பிட்டு—செங் குறிஞ்சித் 7

தார் ஆர் நறு மாலைச் சாத்தற்குத் தான் பின்னும்
நேராதன ஒன்று நேர்ந்தாள்—அதனாலும் 8
தீராது என் சிந்தை நோய்; தீராது என் பேதுறவு;
வாராது மாமை: அது கண்டு, மற்று ஆங்கே
ஆரானும் மூது அறியும் அம்மனைமார் சொல்லுவார்:
பாரோர் சொலப்படும் கட்டுப்படுத்திரேல்,
ஆரானும் மெய்ப்படுவன் என்றார்—அது கேட்டு, 9
கார் ஆர் குழல்-கொண்டை கட்டுவிச்சி கட்டேறி,
சீர் ஆர் சுளகில் சில நெல் பிடித்து, எறியா,
வேரா, விதிர்விதிரா, மெய் சிலிரா, கை மோவா,
பேர் ஆயிரம் உடையான் என்றாள்—பெயர்த்தேயும், 10
கார் ஆர் திருமேனி காட்டினாள்; கையதுவும்
சீர் ஆர் வலம்புரியே என்றாள்—திருத் துழாய்த் 11
தார் ஆர் நறு மாலை கட்டுரைத்தாள்; கட்டுரையா,
நீர் ஏதும் அஞ்சேல்மின்; நும் மகளை நோய் செய்தான்
ஆரானும் அல்லன்; அறிந்தேன் அவனை நான்;
கூர் ஆர் வேல் கண்ணீர்! உமக்கு அறியக் கூறுகேனோ?
ஆரால் இவ் வையம் அடி அளப்புண்டது-தான்;
ஆரால் இலங்கை பொடி பொடியா வீழ்ந்தது; மற்று
ஆராலே கல் மாரி காத்தது-தான்—ஆழி நீர் 12
ஆரால் கடைந்திடப்பட்டது; அவன் காண்மின்
ஊர் ஆ-நிரை மேய்த்து, உலகு எல்லாம் உண்டு உமிழ்ந்தும்,
ஆராத தன்மையனாய், ஆங்கு ஒருநாள், ஆய்ப்பாடி
சீர் ஆர் கலை அல்குல் சீர்அடிச் செந்துவர் வாய்
வார் ஆர் வனமுலையாள் மத்து ஆரப் பற்றிக்கொண்டு,
ஏர் ஆர் இடை நோவ, எத்தனையோர் போதும் ஆய்,
சீர் ஆர் தயிர் கடைந்து, வெண்ணெய் திரண்டதனை
வேர் ஆர் நுதல் மடவாள் வேறு ஓர் கலத்து இட்டு,
நார் ஆர் உறி ஏற்றி, நன்கு அமைய வைத்ததனைப்
போர் ஆர் வேல் கண் மடவாள் போந்தனையும் பொய் உறக்கம்
ஓராதவன் போல் உறங்கி, அறிவு உற்று,
தார் ஆர் தடம் தோள்கள் உள் அளவும் கைந் நீட்டி,
ஆராத வெண்ணெய் விழுங்கி—அருகு இருந்த 13
மோர் ஆர் குடம் உருட்டி, முன் கிடந்த தானத்தே
ஓராதவன் போல் கிடந்தானைக் கண்டு, அவளும்
வாராத் தான் வைத்தது காணாள்—வயிறு அடித்து, இங்கு 14
ஆர் ஆர் புகுதுவார் ஐயர் இவர் அல்லால்;

நீர் ஆம் இது செய்தீர் என்று ஓர் நெடுங் கயிற்றால்,
ஊரார்கள் எல்லாரும் காண, உரலோடே
தீரா வெகுளியள் ஆய், சிக்கென ஆர்த்து அடிப்ப,
ஆரா வயிற்றினோடு ஆற்றாதான்—அன்றியும், 15
நீர் ஆர் நெடுங் கயத்தைச் சென்று, அலைக்க நின்று, உரப்பி,
ஓர் ஆயிரம் பண வெம் கோ இயல் நாகத்தை
வாராய் எனக்கு என்று, மற்று அதன் மத்தகத்து
சீர் ஆர் திருவடியால் பாய்ந்தான்—தன் சீதைக்கு 16
நேர் ஆவன் என்று, ஓர் நிசாசரி-தான் வந்தாளை
கூர் ஆர்ந்த வாளால் கொடி மூக்கும், காது இரண்டும்
ஈரா விடுத்து, அவட்கு மூத்தோனை—வெம் நரகம் 17
சேரா வகையே சிலை குனித்தான்; செந்துவர் வாய்
வார் ஆர் வனமுலையாள் வைதேவி காரணமா,
ஏர் ஆர் தடந் தோள் இராவணனை—ஈர் ஐந்து 18
சீர் ஆர் சிரம் அறுத்து, செற்று, உகந்த செங்கண் மால்,
போர் ஆர் நெடு வேலோன் பொன்பெயரோன் ஆகத்தை
கூர் ஆர்ந்த வள் உகிரால் கீண்டு—குடல் மாலை 19
சீர் ஆர் திரு மார்பின்மேல் கட்டி, செங் குருதி
சோராக் கிடந்தானைக் குங்குமத் தோள் கொட்டி,
ஆரா எழுந்தான் அரி உருவாய்—அன்றியும், 20
பேர் வாமன் ஆகிய காலத்து மூவடி மண்
தாராய் எனக்கு என்று வேண்டி, சலத்தினால்
நீர் ஏற்று, உலகு எல்லாம் நின்று அளந்தான் மாவலியை;
ஆராத போரில் அசுரர்களும் தானுமாய்
கார் ஆர் வரை நட்டு, நாகம் கயிறு ஆக,
பேராமல் தாங்கிக் கடைந்தான்—திருத் துழாய்த் 21
தார் ஆர்ந்த மார்வன்; தட மால் வரை போலும்
போர் ஆனை பொய்கைவாய்க் கோட்பட்டு நின்று அலறி,
நீர் ஆர் மலர்க் கமலம் கொண்டு ஓர் நெடுங் கையால்
நாராயணா! ஓ! மணிவண்ணா! நாகணையாய்!
வாராய்; என் ஆர் இடரை நீக்காய்—என, வெகுண்டு, 22
தீராத சீற்றத்தால் சென்று, இரண்டு கூறு ஆக
ஈரா, அதனை இடர் கடிந்தான், எம் பெருமான்,
பேர் ஆயிரம் உடையான், பேய்ப் பெண்டீர்! நும் மகளைத்
தீரா நோய் செய்தான் என உரைத்தாள்—சிக்கென மற்று 23
ஆரானும் அல்லாமை கேட்டு, எங்கள் அம்மனையும்
போர் ஆர் வேல் கண்ணீர்! அவன் ஆகில் பூந் துழாய்

தாராது ஒழியுமே; தன் அடிச்சி அல்லளே; மற்று,
ஆரானும் அல்லனே என்று ஒழிந்தாள்—நான் அவனைக் 24
கார் ஆர் திருமேனி கண்டதுவே காரணமா,
பேரா, பிதற்றா, திரிதருவன்—பின்னையும் 25
ஈராப் புகுதலும், இவ் உடலைத் தண் வாடை
சோரா மறுக்கும் வகை அறியேன்—சூழ் குழலார் 26
ஆரானும் ஏசுவர் என்னும் அதன் பழியை
வாராமல் காப்பதற்கு வாளா இருந்தொழிந்தேன்:
வாராய், மட நெஞ்சே! வந்து—மணிவண்ணன் 27
சீர் ஆர் திருத் துழாய் மாலை நமக்கு அருளி,
தாரான், தரும், என்று இரண்டத்தில் ஒன்று-அதனை,
ஆரானும் ஒன்றாதார் கேளாமே, சொன்னக்கால்,
ஆராயுமேலும்; பணி கேட்டு அது அன்று எனிலும்;
போராது ஒழியாதே போந்திடு நீ என்றேற்கு,
கார் ஆர் கடல் வண்ணன் பின் போன நெஞ்சமும்
வாராதே என்னை மறந்தது-தான்—வல்வினையேன் 28
ஊரார் உகப்பதே ஆயினேன்—மற்று எனக்கு இங்கு 29
ஆராய்வார் இல்லை; அழல்வாய் மெழுகு போல்,
நீராய் உருகும் என் ஆவி—நெடுங் கண்கள், 30
ஊரார் உறங்கிலும், தான் உறங்கா; உத்தமன்-தன்
பேர் ஆயினவே பிதற்றுவன்—பின்னையும், 31
கார் ஆர் கடல் போலும் காமத்தர் ஆயினார்
ஆரே பொல்லாமை அறிவார்? அது நிற்க,
ஆரானும் ஆதானும் அல்லள் அவள் காணீர்:
வார் ஆர் வனமுலை வாசவதத்தை என்று
ஆரானும் சொல்லப்படுவாள்—அவளும், தன் 32
பேர் ஆயம் எல்லாம் ஒழிய, பெருந் தெருவே
தார் ஆர் தடந்தோள் தளைக் காலன் பின் போனாள்
ஊரார் இகழ்ந்திடப்பட்டாளே?—மற்று எனக்கு இங்கு 33
ஆரானும் கற்பிப்பார் நாயகரே? நான் அவனைக்
கார் ஆர் திருமேனி காணும் அளவும் போய்,
சீர் ஆர் திருவேங்கடமே, திருக்கோவ-
லூரே, மதிள் கச்சி ஊரகமே, பேரகமே,
பேரா மருது இறுத்தான் வெள்ளறையே, வெஃகாவே,
பேர் ஆலி, தண்கால், நறையூர், திருப்புலியூர்,
ஆராமம் சூழ்ந்த அரங்கம்—கணமங்கை, 34
கார் ஆர் மணி நிறக் கண்ணனூர், விண்ணகரம்,

சீர் ஆர் கணபுரம், சேறை, திருவழுந்தூர்,
கார் ஆர் குடந்தை, கடிகை, கடல்மல்லை,
ஏர் ஆர் பொழில் சூழ் இடவெந்தை, நீர்மலை,
சீர் ஆரும் மாலிருஞ்சோலை, திருமோகூர்— 35
பாரோர் புகழும் வதரி, வடமதுரை,
ஊர் ஆய எல்லாம் ஒழியாமே, நான் அவனை
ஓர் ஆனை கொம்பு ஒசித்து, ஓர் ஆனை கோள்விடுத்த
சீரானை, செங்கண் நெடியானை, தேன் துழாய்த்
தாரானை, தாமரை போல் கண்ணனை—எண்-அருஞ் சீர் 36
பேர் ஆயிரமும் பிதற்றி—பெருந் தெருவே 37
ஊரார் இகழிலும், ஊராது ஒழியேன் நான்,
வார் ஆர் பூம் பெண்ணை மடல். 38

சிறுத் திருமடல் முற்றும்

ஸ்ரீ :

திருமங்கை ஆழ்வார் அருளிச்செய்த

பெரிய திருமடல்

மன்னிய! பல் பொறி சேர் ஆயிர வாய் வாள் அரவின்
சென்னி மணிக் குடுமித் தெய்வச் சுடர் நடுவுள்,
மன்னி, அந் நாகத்து அணைமேல் ஓர் மா மலை போல்,
மின்னும் மணி மகர குண்டலங்கள் வில் வீச,
துன்னிய தாரகையின் பேர் ஒளி சேர் ஆகாசம்
என்னும் விதானத்தின் கீழால்—இரு சுடரை 1
மன்னும் விளக்கு ஆக ஏற்றி, மறி கடலும்
பன்னு திரைக் கவரி வீச—நிலமங்கை- 2
தன்னை முன நாள் அளவிட்ட தாமரை போல்
மன்னிய சேவடியை : வான் இயங்கு தாரகை மீன்
என்னும் மலர்ப் பிணையல் ஏய்ந்த—மழைக் கூந்தல், 3
தென்னன் உயர் பொருப்பும், தெய்வ வடமலையும்,
என்னும் இவையே முலையா, வடிவு அமைந்த
அன்ன நடைய அணங்கே—அடி-இணையைத் 4
தன்னுடைய அங்கைகளால் தான் தடவ, தான் கிடந்து ஓர்
உன்னிய யோகத்து உறக்கம் தலைக்கொண்ட
பின்னை, தன் நாபி வலயத்துப் பேர் ஒளி சேர்
மன்னிய தாமரை மா மலர் பூத்து, அம் மலர்மேல்
முன்னம் திசைமுகனைத் தான் படைக்க, மற்று அவனும்
முன்னம் படைத்தனன் நான்மறைகள்—அம் மறை-தான் 5
மன்னும் அறம், பொருள், இன்பம், வீடு என்று, உலகில்
நல் நெறி மேம்பட்டன நான்கு அன்றே ?—நான்கினிலும், 6
பின்னையது பின்னைப் பெயர்தரும் என்பது ; ஓர்
தொல் நெறியை வேண்டுவார் வீழ் கனியும், ஊழ் இலையும்
என்னும் இவையே நுகர்ந்து, உடலம்-தாம் வருந்தி,
துன்னும் இலைக் குரம்பைத் துஞ்சியும்—வெம் சுடரோன் 7
மன்னும் அழல் நுகர்ந்தும், வண் தடத்தினுள் கிடந்தும்,
இன்னது ஓர் தன்மையராய், ஈங்கு உடலம் விட்டு எழுந்து,
தொல் நெறிக்கண் சென்றார் எனப்படும் சொல் அல்லால்,
இன்னது ஓர் காலத்து இனையார் இது பெற்றார்
என்னவும் கேட்டு அறிவது இல்லை—உளது என்னில், 8
மன்னும் கடுங் கதிரோன் மண்டலத்தின் நல் நடுவுள்
அன்னது ஓர் இல்லியின் ஊடு போய்—வீடு என்னும் 9

தொல் நெறிக்கண் சென்றாரைச் சொல்லுமின்கள் : சொல்லாதே
அன்னதே பேசும் அறிவு இல் சிறு மனத்து, ஆங்கு,
அன்னவரைக் கற்பிப்போம் யாமே—அது நிற்க, 10
முன்னம் நான் சொன்ன அறத்தின் வழி முயன்ற
அன்னவர்-தாம் கண்டீர்கள் ஆயிரக் கண் வானவர்-கோன்
பொன்-நகரம் புக்கு, அமரர் போற்றி செய்ப—பொங்கு ஒளி சேர் 11
கொல் நவிலும் கோள் அரிமாத் தான் சுமந்த கோலம் சேர்
மன்னிய சிங்காசனத்தின்மேல்—வாள் நெடுங் கண் 12
கன்னியரால் இட்ட கவரிப் பொதி அவிழ்ந்து, ஆங்கு
இன் இளம் பூந் தென்றல் இயங்க—மருங்கு இருந்த 13
மின் அனைய நுண் மருங்குல் மெல் இயலார் வெண் முறுவல்
முன்னம் முகிழ்த்த முகிழ் நிலா வந்து அரும்ப,
அன்னவர்-தம் மான் நோக்கம் உண்டு, ஆங்கு அணி மலர் சேர்
பொன் இயல் கற்பகத்தின் காடு உடுத்த மாடு எல்லாம்
மன்னிய மந்தாரம் பூத்த மதுத் திவலை
இன் இசை வண்டு அமரும் சோலைவாய் மாலை சேர்
மன்னிய மா மயில் போல் கூந்தல்—மழைத் தடங் கண் 14
மின் இடையாரோடும் விளையாடி, வேண்டு இடத்து
மன்னும் மணித் தலத்து, மாணிக்க மஞ்சரியின்,
மின்னின் ஒளி சேர் பளிங்கு விளிம்பு அடுத்த,
மன்னும் பவளக் கால் செம் பொன் செய் மண்டபத்துள்
அன்ன நடைய அரம்பையர்-தம் கை வளர்த்த
இன் இசை யாழ்ப் பாடல் கேட்டு, இன்புற்று—இரு விசும்பில் 15
மன்னும் மழை தவழும், வாள் நிலா நீள் மதி தோய்,
மின்னின் ஒளி சேர், விசும்பு ஊரும் மாளிகைமேல்
மன்னும் மணி விளக்கை மாட்டி—மழைக் கண்ணார் 16
பன்னு விசித்திரமாப் பாப்படுத்த பள்ளிமேல்
துன்னிய சாலேகம் சூழ் கதவம் தாள் திறப்ப,
அன்னம் உழக்க நெரிந்து உக்க வாள் நீலச்
சின்ன நறுந் தாது சூடி—ஓர் மந்தாரம் 17
துன்னு நறு மலரால் தோள் கொட்டி, கற்பகத்தின்
மன்னு மலர்வாய் மணி வண்டு பின்தொடர
இன் இளம் பூந் தென்றல் புகுந்து, ஈங்கு இள முலைமேல்
நல் நறும் சந்தனச் சேறு உலர்த்த—தாங்கு அரும் சீர் 18
மின் இடைமேல் கை வைத்து இருந்து, ஏந்து இள முலைமேல்
பொன் அரும்பு ஆரம் புலம்ப—அகம் குழைந்து, ஆங்கு, 19
இன்ன உருவின் இமையாத் தடங் கண்ணார்

அன்னவர்-தம் மான் நோக்கம் உண்டு, ஆங்கு, அணி முறுவல்
இன் அமுதம் மாந்தி இருப்பர்—இது அன்றே 20
அன்ன அறத்தின் பயன் ஆவது : ஒண் பொருளும்
அன்ன திறத்ததே : ஆதலால்—காமத்தின் 21
மன்னும் வழிமுறையே நிற்றும் நாம் : மான் நோக்கின்
அன்ன நடையார் அலர் ஏச, ஆடவர்மேல்
மன்னும் மடல் ஊரார் என்பது ஓர் வாசகமும்
தென் உரையில் கேட்டு அறிவது உண்டு—அதனை யாம் தெளியோம்; 22
மன்னும் வட நெறியே வேண்டினோம் ; வேண்டாதார்,
தென்னன் பொதியில் செழுஞ் சந்தனக் குழம்பின்
அன்னது ஓர் தன்மை அறியாதார்—ஆயன் வேய் 23
இன் இசை ஓசைக்கு இரங்காதார், மால் விடையின்
மன்னும் மணி புலம்ப வாடாதார்—பெண்ணைமேல் 24
பின்னும் அவ் அன்றில் பெடை வாய்ச் சிறு குரலுக்கு
உன்னி, உடல் உருகி, நையாதார்—உம்பர்வாய்த் 25
துன்னும் மதி உகுத்த தூ நிலா நீள் நெருப்பில்
தம் உடலம் வேவத் தளராதார்—காமவேள் 26
மன்னும் சிலைவாய் மலர் வாளி கோத்து எய்ய,
பொன் நெடு வீதி புகாதார்—தம் பூ-அணைமேல் 27
சின்ன மலர்க் குழலும், அல்குலும், மென் முலையும்
இன் இளவாடை தடவ, தாம் கண் துயிலும்
பொன் அனையார் பின்னும் திரு உறுக—போர் வேந்தன் 28
தன்னுடைய தாதை பணியால் அரசு ஒழிந்து,
பொன் நகரம் பின்னே புலம்ப, வலம்கொண்டு,
மன்னும் வளநாடு கைவிட்டு—மாதிரங்கள் 29
மின் உருவில் விண் தேர் திரிந்து, வெளிப்பட்டு,
கல் நிரைந்து, தீய்ந்து, கழை உடைந்து, கால் சுழன்று,
பின்னும் திரை வயிற்றுப் பேயே திரிந்து உலவா,
கொல் நவிலும், வெம் கானத்தூடு—கொடும் கதிரோன் 30
துன்னு வெயில் வறுத்த வெம் பரல்மேல் பஞ்சு அடியால்
மன்னன் இராமன் பின் வைதேவி என்று உரைக்கும்
அன்ன நடைய அணங்கு நடந்திலளே ?— 31
பின்னும், கரு நெடுங் கண், செவ் வாய், பிணை நோக்கின்,
மின் அனைய நுண் மருங்குல் வேகவதி என்று உரைக்கும்
கன்னி தன் இன் உயிராம் காதலனைக் காணாது,
தன்னுடைய முன் தோன்றல் கொண்டு ஏக, தான் சென்று, ஆங்கு,
அன்னவனை நோக்காது, அழித்து உரப்பி—வாள் அமருள் 32

கல் நவில் தோள் காளையைக் கைப்பிடித்து, மீண்டும் போய்
பொன் நவிலும் ஆகம் புணர்ந்திலளே ?—பூங் கங்கை 33
முன்னம் புனல் பரக்கும் நல் நாடன் ; மின் ஆடும்,
கொல் நவிலும், நீள் வேல் குருக்கள் குல மதலை ;
தன் நிகர் ஒன்று இல்லாத வென்றித் தனஞ்சயனை
பன்னாகராயன் மடப் பாவை—பாவை-தன் 34
மன்னிய நாண், அச்சம், மடம் என்று இவை அகல,
தன்னுடைய கொங்கை முகம் நெரிய—தான் அவன்-தன் 35
பொன் வரை ஆகம் தழீஇக் கொண்டு, போய்த் தனது
நல் நகரம் புக்கு, நயந்து, இனிது வாழ்ந்ததுவும்,
முன் உரையில் கேட்டு அறிவது இல்லையே ?—சூழ் கடலுள் 36
பொன் நகரம் செற்ற புரந்தரனோடு ஏர் ஒக்கும்
மன்னவன் வாணன், அவுணர்க்கு வாள் வேந்தன்,
தன்னுடைய பாவை, உலகத்துத் தன் ஒக்கும்
கன்னியரை இல்லாத காட்சியாள்—தன்னுடைய 37
இன் உயிர்த் தோழியால் எம் பெருமான் ஈன் துழாய்
மன்னு மணி வரைத் தோள் மாயவன்—பாவியேன் 38
என்னை இது விளைத்த ஈர் இரண்டு மால் வரைத் தோள்
மன்னவன்-தன் காதலனை மாயத்தால் கொண்டுபோய்,
கன்னி-தன்பால் வைக்க, மற்றவனோடு எத்தனை ஓர்
மன்னிய பேர் இன்பம் எய்தினாள்—மற்று இவை-தான் 39
என்னாலே கேட்டீரே, ஏழைகாள் ! என் உரைக்கேன் ?
மன்னு மலை-அரையன் பொன்-பாவை—வாள் நிலா 40
மின்னும் அணி முறுவல், செவ் வாய் உமை என்னும்
அன்ன நடைய அணங்கு, நுடங்கு இடை சேர்
பொன் உடம்பு வாட, புலன் ஐந்தும் நொந்து அகல,
தன்னுடைய கூழைச் சடாபாரம் தான் தரித்து, ஆங்கு,
அன்ன அருந் தவத்தின் ஊடு போய்—ஆயிரம் தோள் 41
மன்னு கரதலங்கள் மட்டித்து, மாதிரங்கள்
மின்னி எரி வீச, மேல் எடுத்த சூழ் கழல்-கால்
பொன்-உலகம் ஏழும் கடந்து உம்பர் மேல் சிலும்ப,
மன்னு குல வரையும் மாருதமும் தாரகையும்
தன்னின் உடனே சுழல, சுழன்று ஆடும்
கொல் நவிலும் மூவிலை வேல் கூத்தன், பொடி ஆடி,
அன்னவன்-தன் பொன் அகலம் சென்று ஆங்கு அணைந்திலளே ?
பன்னி உரைக்குங்கால், பாரதம் ஆம்—பாவியேற்கு : 42
என் உறு நோய் யான் உரைப்பக் கேள்மின்: இரும் பொழில் சூழ்

மன்னும் மறையோர் திருநறையூர் மா மலை போல்,
பொன் இயலும், மாடக் கவாடம் கடந்து புக்கு,
என்னுடைய கண் களிப்ப, நோக்கினேன்—நோக்குதலும், 43
மன்னன் திரு மார்பும், வாயும், அடி-இணையும்,
பன்னு கரதலமும், கண்களும்—பங்கயத்தின் 44
பொன் இயல் காடு ஓர் மணிவரைமேல் பூத்ததுபோல்,
மின்னி ஒளி படைப்ப, வீழ் நாணும், தோள் வளையும்,
மன்னிய குண்டலமும், ஆரமும், நீள் முடியும்,
துன்னு வெயில் விரித்த சூளாமணி இமைப்ப,
மன்னு மரதகக் குன்றின் மருங்கே—ஓர் 45
இன் இள வஞ்சிக்கொடி ஒன்று நின்றதுதான்;
அன்னம் ஆய், மான் ஆய், அணி மயில் ஆய், ஆங்கு இடையே
மின் ஆய், இள வேய் இரண்டு ஆய், இணைச் செப்பு ஆய்,
முன் ஆய தொண்டை ஆய், கெண்டைக் குலம் இரண்டு ஆய்,
அன்ன திரு உருவம் நின்றது அறியாதே,
என்னுடைய நெஞ்சும், அறிவும், இன வளையும்,
பொன் இயலும் மேகலையும் ஆங்கு ஒழியப் போந்தேற்கு,
மன்னு மறி கடலும் ஆர்க்கும்—மதி உகுத்த 46
இன் நிலாவின் கதிரும் என்-தனக்கே வெய்து ஆகும்;
தன்னுடைய தன்மை தவிர, தான் என்கொலோ?
தென்னன் பொதியில், செழும் சந்தின் தாது அளைந்து,
மன் இவ் உலகை, மனம் களிப்ப வந்து, இயங்கும்
இன் இளம் பூந் தென்றலும் வீசும் எரி எனக்கே;
முன்னிய பெண்ணைமேல் முள் முளரிக் கூட்டகத்து,
பின்னும் அவ் அன்றில் பெடை வாய்ச் சிறு குரலும்
என்னுடைய நெஞ்சுக்கு ஓர் ஈர் வாளாம்: என் செய்கேன்?
கல் நவில் தோள் காமன் கருப்புச் சிலை வளைய,
கொல் நவிலும் பூங் கணைகள் கோத்து, பொத அணைந்து,
தன்னுடைய தோள் கழிய வாங்கி—தமியேன்மேல் 47
என்னுடைய நெஞ்சே இலக்காக எய்கின்றான்;
பின் இதனைக் காப்பீர்-தாம் இல்லையே—பேதையேன்! 48
கல் நவிலும் காட்டகத்து ஓர் வல்லிக் கடி மலரின்
நல் நறு வாசம் மற்று ஆரானும் எய்தாமே,
மன்னும் வறு நிலத்து வாளாங்கு உகுத்தது போல்,
என்னுடைய பெண்மையும், என் நலனும், என் முலையும்,
மன்னும் மலர்-மங்கை மைந்தன்—கணபுரத்து, 49
பொன்மலை போல், நின்றவன்-தன் பொன் அகலம் தோயாவேல்,

என் இவைதான் வாளா ? எனக்கே பொறை ஆகி,
முன் இருந்து, மூக்கின்று : மூவாமைக் காப்பது ஓர்
மன்னும் மருந்து அறிவீர் இல்லையே ?—மால் விடையின் 50
துன்னு பிடர் எருத்துத் தூக்குண்டு, வன் தொடரால்
கன்னியர் கண் மிளிரக் கட்டுண்டு—மாலைவாய்த் 51
தன்னுடைய நா ஒழியாது ஆடும் தனி மணியின்
இன் இசை ஓசையும் வந்து, என் செவி-தனக்கே
கொல் நவிலும் எஃகில் கொடிது ஆய், நெடிது ஆகும் ;
என் இதனைக் காக்குமா ? சொல்லீர்—இது விளைத்த 52
மன்னன், நறும் துழாய் வாழ் மார்பன், மா மதிகோள்
முன்னம் விடுத்த முகில் வண்ணன்—காயாவின் 53
சின்ன நறும் பூந் திகழ் வண்ணன், வண்ணம் போல்
அன்ன கடலை மலை இட்டு, அணை கட்டி,
மன்னன் இராவணனை மா மண்டு வெம் சமத்துப்
பொன் முடிகள் பத்தும் புரள, சரம் துரந்து,
தென் உலகம் ஏற்றுவித்த சேவகனை—ஆயிரக் கண் 54
மன்னவன் வானமும் வானவர்-தம் பொன்-உலகும்
தன்னுடைய தோள் வலியால் கைக்கொண்ட தானவனை,
பின் ஓர் அரி-உருவம் ஆகி, எரி விழித்து,
கொல் நவிலும் வெம் சமத்துக் கொல்லாதே—வல்லாளன் 55
மன்னு மணிக் குஞ்சி பற்றி, வர ஈர்த்து,
தன்னுடைய தாள்மேல் கிடாத்தி—அவனுடைய 56
பொன் அகலம் வள் உகிரால் போழ்ந்து, புகழ்படைத்த
மின் இலங்கு ஆழிப் படைத் தடக் கை வீரனை,
மன்னு இவ் அகல் இடத்தை மா முது நீர்-தான் விழுங்க,
பின்னும் ஓர் ஏனமாய்ப் புக்கு, வளை மருப்பில்
கொல் நவிலும் கூர் நுதி வேல் வைத்து எடுத்த கூத்தனை,
மன்னும் வட மலையை மத்தாக, மாசுணத்தால்
மின்னும் இரு சுடரும் விண்ணும், பிறங்கு ஒளியும்,
தன்னினுடனே சுழல, மலை திரித்து, ஆங்கு,
இன் அமுதம் வானவரை ஊட்டி, அவருடைய
மன்னும் துயர் கடிந்த வள்ளலை—மற்று அன்றியும், 57
தன் உருவம் ஆரும் அறியாமல், தான் அங்கு ஓர்
மன்னும் குறள் உருவில் மாணியாய்—மாவலி-தன் 58
பொன் இயலும் வேள்விக்கண் புக்கு இருந்து, போர் வேந்தர்
மன்னை மனம் கொள்ள வஞ்சித்து, நெஞ்சு உருக்கி,
என்னுடைய பாதத்தால் யான் அளப்ப, மூவடி மண்

மன்னா, தருக! என்று வாய் திறப்ப—மற்று அவனும் 59
என்னால் தரப்பட்டது என்றலுமே, அத்துணைக்கண்
மின் ஆர் மணி முடி போய் விண் தடவ—மேல் எடுத்த 60
பொன் ஆர் கனை கழல்-கால் ஏழ் உலகும் போய்க் கடந்து, அங்கு,
ஒன்றா அசுரர் துளங்க, செல நீட்டி,
மன் இவ் அகல் இடத்தை மாவலியை வஞ்சித்து,
தன் உலகம் ஆக்குவித்த தாளானை—தாமரைமேல் 61
மின் இடையாள் நாயகனை, விண்-நகருள் பொன் மலையை,
பொன்னி மணி கொழிக்கும் பூங் குடந்தைப் போர் விடையை,
தென்னன் குறுங்குடியுள் செம் பவளக் குன்றினை,
மன்னிய தண் சேறை வள்ளலை—மா மலர்மேல் 62
அன்னம் துயிலும் அணி நீர் வயல் ஆலி
என்னுடைய இன் அமுதை, எவ்வுள் பெரு மலையை,
கன்னி மதிள் சூழ் கணமங்கைக் கற்பகத்தை,
மின்னை, இரு சுடரை, வெள்ளறையுள் கல் அறைமேல்
பொன்னை, மரதகத்தை, புட்குழி எம் போர் ஏற்றை,
மன்னும் அரங்கத்து எம் மா மணியை—வல்லவாழ்ப் 63
பின்னை மணாளனை, பேரில் பிறப்பிலியை,
தொல் நீர்க் கடல் கிடந்த தோளா மணிச் சுடரை,
என் மனத்து மாலை, இடவெந்தை ஈசனை,
மன்னும் கடல்மல்லை மாயவனை—வானவர்-தம் 64
சென்னி மணிச் சுடரை, தண்கால் திறல் வலியை,
தன்னைப் பிறர் அறியாத் தத்துவத்தை, முத்தினை,
அன்னத்தை, மீனை, அரியை, அரு மறையை,
முன் இவ் உலகு உண்ட மூர்த்தியை—கோவலூர் 65
மன்னும் இடைகழி எம் மாயவனை, பேய் அலறப்
பின்னும் முலை உண்ட பிள்ளையை—அள்ளல்வாய் 66
அன்னம் இரை தேர் அழுந்தூர் எழும் சுடரை,
தென் தில்லைச் சித்திரகூடத்து என் செல்வனை— 67
மின்னி மழை தவழும் வேங்கடத்து எம் வித்தகனை,
மன்னனை, மாலிருஞ்சோலை மணாளனை,
கொல் நவிலும் ஆழிப் படையானை—கோட்டியூர் 68
அன்ன உருவின் அரியை, திருமெய்யத்து
இன் அமுத வெள்ளத்தை, இந்தளூர் அந்தணனை,
மன்னு மதிள் கச்சி வேளுக்கை ஆள் அரியை,
மன்னிய பாடகத்து எம் மைந்தனை—வெஃகாவில் 69
உன்னிய யோகத்து உறக்கத்தை, ஊரகத்துள்

அன்னவனை, அட்ட புயகரத்து எம்மான் ஏற்றை,
என்னை மனம் கவர்ந்த ஈசனை—வானவர்-தம் 70
முன்னவனை, மூழிக்களத்து விளக்கினை,
அன்னவனை, ஆதனூர் ஆண்டு அளக்கும் ஐயனை,
நென்னலை, இன்றினை, நாளையை—நீர்மலைமேல் 71
மன்னும் மறை நான்கும் ஆனானை, புல்லாணித்
தென்னன் தமிழை, வடமொழியை—நாங்கூரில் 72
மன்னும் மணிமாடக்கோயில் மணாளனை,
நல் நீர் தலைச்சங்க நாள் மதியை—நான் வணங்கும் 73
கண்ணனை, கண்ணபுரத்தானை, தென் நறையூர்
மன்னும் மணிமாடக்கோயில் மணாளனை,
கல் நவில் தோள் காளையைக் கண்டு, ஆங்குக் கைதொழுது,
என் நிலைமை எல்லாம் அறிவித்தால், எம் பெருமான்
தன் அருளும் ஆகமும் தாரானேல்—தன்னை நான் 74
மின் இடையார் சேரியிலும், வேதியர்கள் வாழ்விடத்தும்,
தன் அடியார் முன்பும், தரணி முழுது ஆளும்
கொல் நவிலும் வேல் வேந்தர் கூட்டத்தும், நாட்டகத்தும்,
தன் நிலைமை எல்லாம் அறிவிப்பன்—தான் முன நாள் 75
மின் இடை ஆய்ச்சியர்-தம் சேரிக் களவின்கண்
துன்னு படல் திறந்து புக்கு—தயிர் வெண்ணெய் 76
தன் வயிறு ஆர விழுங்க, கொழுங் கயல்-கண்
மன்னு மடவோர்கள் பற்றி, ஓர் வான் கயிற்றால்
பின்னும் உரலோடு கட்டுண்ட பெற்றிமையும்,
அன்னது ஓர் பூதமாய், ஆயர் விழவின்கண்,
துன்னு சகடத்தால் புக்க பெருஞ் சோற்றை
முன் இருந்து, முற்ற, தான் துற்றிய தெற்றெனவும்,
மன்னர் பெருஞ் சவையுள் வாழ் வேந்தர் தூதனாய்த்
தன்னை இகழ்ந்து உரைப்ப, தான் முன நாள் சென்றதுவும்,
மன்னு பறை கறங்க, மங்கையர்-தம் கண் களிப்ப,
கொல் நவிலும் கூத்தனாய், பேர்த்தும் குடம் ஆடி,
என் இவன் என்னப்படுகின்ற ஈடறவும்,
தென் இலங்கையாட்டி, அரக்கர் குலப் பாவை,
மன்னன் இராவணன்-தன் நல் தங்கை—வாள் எயிற்றுத் 77
துன்னு சுடு சினத்துச் சூர்ப்பணகா சோர்வு எய்தி,
பொன் நிறம் கொண்டு, புலர்ந்து எழுந்த காமத்தால்
தன்னை நயந்தாளைத் தான் முனிந்து, மூக்கு அரிந்து
மன்னிய திண்ணெனவும், வாய்த்த மலை போலும்,

தன் நிகர் ஒன்று இல்லாத தாடகையை—மா முனிக்கா, 78
தென் உலகம் ஏற்றுவித்த திண் திறலும்—மற்று இவைதான் 79
உன்னி உலவா : உலகு அறிய ஊர்வன் நான்,
முன்னி முளைத்து எழுந்து ஓங்கி ஒளி பரந்த,
மன்னிய பூம் பெண்ணை மடல். 80

பெரிய திருமடல் முற்றும்

ஸ்ரீ:

திருவரங்கத்தமுதனார் அருளிச்செய்த

இராமாநுச நூற்றந்தாதி

பூ மன்னு மாது பொருந்திய மார்பன் புகழ் மலிந்த
பா மன்னு மாறன் அடி பணிந்து உய்ந்தவன், பல் கலையோர்
தாம் மன்ன வந்த இராமாநுசன் சரணாரவிந்தம்
நாம் மன்னி வாழ, நெஞ்சே! சொல்லுவோம், அவன் நாமங்களே. 1

கள் ஆர் பொழில் தென் அரங்கன் கமலப் பதங்கள் நெஞ்சில்
கொள்ளா மனிசரை நீங்கி, குறையல் பிரான் அடிக்கீழ்
விள்ளாத அன்பன் இராமாநுசன் மிக்க சீலம் அல்லால்,
உள்ளாது என் நெஞ்சு; ஒன்று அறியேன், எனக்கு உற்ற பேர் இயல்வே. 2

பேர் இயல் நெஞ்சே! அடி பணிந்தேன், உன்னை—பேய்ப் பிறவிப்
பூரியரோடு உள்ள சுற்றம் புலர்த்தி, பொருவு-அரும் சீர்
ஆரியன், செம்மை இராமாநுசமுனிக்கு அன்பு செய்யும்
சீரிய பேறு உடையார் அடிக்கீழ் என்னைச் சேர்த்ததற்கே. 3

என்னைப் புவியில் ஒரு பொருள் ஆக்கி, மருள் சுரந்த
முன்னைப் பழவினை வேர் அறுத்து, ஊழி முதல்வனையே
பன்னப் பணித்த இராமாநுசன் பரன் பாதமும் என்
சென்னித் தரிக்க வைத்தான்—எனக்கு ஏதும் சிதைவு இல்லையே. 4

எனக்கு உற்ற செல்வம் இராமாநுசன் என்று, இசையகில்லா
மனக் குற்ற மாந்தர் பழிக்கில், புகழ்; அவன் மன்னிய சீர்-
தனக்கு உற்ற அன்பர் அவன் திருநாமங்கள் சாற்றும் என் பா-
இனக் குற்றம் காணகில்லார்—பத்தி ஏய்ந்த இயல் இது என்றே. 5

இயலும் பொருளும் இசையத் தொடுத்து, ஈன் கவிகள் அன்பால்
மயல் கொண்டு வாழ்த்தும் இராமாநுசனை, மதி இன்மையால்,
பயிலும் கவிகளில் பத்தி இல்லாத என் பாவி நெஞ்சால்
முயல்கின்றனன்—அவன்-தன் பெருங் கீர்த்தி மொழிந்திடவே. 6

மொழியைக் கடக்கும் பெரும் புகழான், வஞ்ச முக்குறும்பு ஆம்
குழியைக் கடக்கும் நம் கூரத்தாழ்வான் சரண் கூடியபின்,
பழியைக் கடத்தும் இராமாநுசன் புகழ் பாடி, அல்லா
வழியைக் கடத்தல் எனக்கு இனி யாதும் வருத்தம் அன்றே. 7

வருத்தும் புற இருள் மாற்ற, எம் பொய்கைப் பிரான் மறையின்
குருத்தின் பொருளையும் செந்தமிழ்-தன்னையும் கூட்டி, ஒன்றத்
திரித்து, அன்று, எரித்த திருவிளக்கைத் தன் திருவுளத்தே
இருத்தும் பரமன், இராமாநுசன், எம் இறையவனே. 8

இறைவனைக் காணும் இதயத்து இருள் கெட, ஞானம் என்னும்
நிறை விளக்கு ஏற்றிய பூதத் திருவடி தாள்கள் நெஞ்சத்து
உறைய வைத்து ஆளும் இராமாநுசன் புகழ் ஓதும் நல்லோர்
மறையினைக் காத்து, இந்த மண்ணகத்தே மன்ன வைப்பவரே. 9

மன்னிய பேர் இருள் மாண்டபின், கோவலுள் மா மலராள்-
தன்னொடும் ஆயனைக் கண்டமை காட்டும் தமிழ்த் தலைவன்
பொன் அடி போற்றும் இராமாநுசற்கு அன்பு பூண்டவர் தாள்
சென்னியில் சூடும் திருவுடையார் என்றும் சீரியரே. 10

சீரிய நான்மறைச் செம்பொருள் செந்தமிழால் அளித்த
பார் இயலும் புகழ்ப் பாண்பெருமாள் சரண் ஆம் பதுமத்
தார் இயல் சென்னி இராமாநுசன்-தன்னைச் சார்ந்தவர்-தம்
கார் இயல் வண்மை என்னால் சொல்லொணாது—இக் கடல்-இடத்தே. 11

இடம் கொண்ட கீர்த்தி மழிசைக்கு இறைவன் இணை-அடிப்போது
அடங்கும் இதயத்து இராமாநுசன் அம் பொன் பாதம், என்றும்,
கடம் கொண்டு இறைஞ்சும் திரு முனிவர்க்கு அன்றி, காதல் செய்யாத்
திடம் கொண்ட ஞானியர்க்கே அடியேன் அன்பு செய்வதுவே. 12

செய்யும் பசுந் துளபத் தொழில் மாலையும், செந்தமிழில்
பெய்யும் மறைத் தமிழ்-மாலையும், பேராத சீர் அரங்கத்து
ஐயன் கழற்கு அணியும் பரன் தாள் அன்றி, ஆதரியா
மெய்யன் இராமாநுசன் சரணே கதி—வேறு எனக்கே. 13

கதிக்குப் பதறி, வெம் கானமும் கல்லும் கடலும் எல்லாம்
கொதிக்கத் தவம் செய்யும் கொள்கை அற்றேன்—கொல்லி காவலன் சொல்
பதிக்கும் கலைக் கவி பாடும் பெரியவர் பாதங்களே
துதிக்கும் பரமன் இராமாநுசன் என்னைச் சோர்விலனே. 14

சோராத காதல் பெருஞ் சுழிப்பால் தொல்லை மாலை ஒன்றும்
பாராது, அவனைப் பல்லாண்டு என்று காப்பிடும் பான்மையன் தாள்
பேராத உள்ளத்து இராமாநுசன்-தன் பிறங்கிய சீர்
சாரா மனிசரைச் சேரேன்—எனக்கு என்ன தாழ்வு இனியே? 15

தாழ்வு ஒன்று இல்லா மறை தாழ்ந்து, தலம் முழுதும் கலியே
ஆள்கின்ற நாள் வந்து அளித்தவன் காண்மின்—அரங்கர் மௌலி
சூழ்கின்ற மாலையைச் சூடிக் கொடுத்தவள் தொல் அருளால்
வாழ்கின்ற வள்ளல் இராமாநுசன் என்னும் மா முனியே. 16

முனியார், துயரங்கள் முந்திலும்; இன்பங்கள் மொய்த்திடினும்
கனியார் மனம்—கண்ணமங்கை நின்றானை, கலை பரவும்
தனி ஆனையை, தண் தமிழ் செய்த நீலன்-தனக்கு உலகில்
இனியானை, எங்கள் இராமாநுசனை, வந்து எய்தினரே. 17

எய்தற்கு அரிய மறைகளை ஆயிரம் இன் தமிழால்
செய்தற்கு உலகில் வரும் சடகோபனைச் சிந்தையுள்ளே
பெய்தற்கு இசையும் பெரியவர் சீரை, உயிர்கள் எல்லாம்
உய்தற்கு, உதவும் இராமாநுசன் எம் உறு துணையே. 18

உறு பெருஞ் செல்வமும், தந்தையும், தாயும், உயர் குருவும்,
வெறி தரு பூமகள் நாதனும், மாறன் விளங்கிய சீர்
நெறி தரும் செந்தமிழ் ஆரணமே என்று, இந் நீள் நிலத்தோர்
அறிதர நின்ற இராமாநுசன் எனக்கு ஆர்-அமுதே. 19

ஆரப் பொழில் தென் குருகைப்பிரான் அமுதத் திருவாய்
ஈரத் தமிழின் இசை உணர்ந்தோர்கட்கு இனியவர்-தம்
சீரைப் பயின்று, உய்யும் சீலம்கொள் நாதமுனியை நெஞ்சால்
வாரிப் பருகும் இராமாநுசன் என்-தன் மா நிதியே. 20

நிதியைப் பொழியும் முகில் என்று, நீசர்-தம் வாசல் பற்றி,
துதி கற்று, உலகில் துவள்கின்றிலேன் இனி—தூய் நெறி சேர்
எதிகட்கு இறைவன், யமுனைத்துறைவன் இணை-அடியாம்
கதி பெற்றுடைய இராமாநுசன் என்னைக் காத்தனனே. 21

கார்த்திகையானும், கரிமுகத்தானும், கனலும், முக்கண்-
மூர்த்தியும், மோடியும், வெப்பும் முதுகிட்டு, மூவுலகும்
பூத்தவனே! என்று போற்றிட, வாணன் பிழை பொறுத்த
தீர்த்தனை ஏத்தும் இராமாநுசன் என்-தன் சேம வைப்பே. 22

வைப்பு ஆய வான் பொருள் என்று, நல் அன்பர் மனத்தகத்தே
எப்போதும் வைக்கும் இராமாநுசனை இரு நிலத்தில்
ஒப்பார் இலாத உறு வினையேன் வஞ்ச நெஞ்சில் வைத்து,
முப்போதும் வாழ்த்துவன்—என் ஆம் இது, அவன் மொய் புகழ்க்கே? 23

மொய்த்த வெம் தீவினையால், பல் உடல்தொறும், மூத்து, அதனால்
எய்த்து ஒழிந்தேன் முனை நாள்கள் எல்லாம்; இன்று கண்டு உயர்ந்தேன்—
பொய்த் தவம் போற்றும் புலைச் சமயங்கள் நிலத்து அவியக்
கைத்த மெய்ஞ்ஞானத்து இராமாநுசன் என்னும் கார்-தன்னையே. 24

கார் ஏய் கருணை இராமாநுச! இக் கடலிடத்தில்
ஆரே அறிபவர் நின் அருளின் தன்மை? அல்லலுக்கு
நேரே உறைவிடம் நான்; வந்து நீ என்னை உய்த்தபின், உன்
சீரே உயிர்க்கு உயிராய் அடியேற்கு இன்று தித்திக்குமே. 25

திக்கு உற்ற கீர்த்தி இராமாநுசனை, என் செய் வினை ஆம்
மெய்க் குற்றம் நீக்கி விளங்கிய மேகத்தை, மேவும் நல்லோர்
எக் குற்றவாளர், எது பிறப்பு, ஏது இயல்வு ஆக நின்றோர்,
அக் குற்றம், அப் பிறப்பு, அவ் இயல்வே—நம்மை ஆட்கொள்ளுமே. 26

கொள்ளக் குறைவு அற்று இலங்கி, கொழுந்து விட்டு ஓங்கிய உன்
வள்ளல்-தனத்தினால் வல்வினையேன் மனம் நீ புகுந்தாய்;
வெள்ளைச் சுடர் விடும் உன் பெரு மேன்மைக்கு இழுக்கு இது என்று,
தள்ளுற்று இரங்கும், இராமாநுச! என் தனி நெஞ்சமே. 27

நெஞ்சில் கறை கொண்ட கஞ்சனைக் காய்ந்த நிமலன், நங்கள்
பஞ்சித் திருவடிப் பின்னை-தன் காதலன், பாதம் நண்ணா
வஞ்சர்க்கு அரிய இராமாநுசன் புகழ் அன்றி, என் வாய்
கொஞ்சிப் பரவகில்லாது; என்ன வாழ்வு இன்று கூடியதே! 28

கூட்டும் விதி என்று கூடுங்கொலோ—தென் குருகைப்பிரான்
பாட்டு என்னும் வேதப் பசுந்தமிழ்-தன்னை, தன் பத்தி என்னும்
வீட்டின் கண் வைத்த இராமாநுசன் புகழ் மெய் உணர்ந்தோர்
ஈட்டங்கள்-தன்னை என் நாட்டங்கள் கண்டு, இன்பம் எய்திடவே? 29

இன்பம் தரு பெரு வீடு வந்து எய்தில் என்? எண் இறந்த
துன்பம் தரு நிரயம் பல சூழில் என்?—தொல் உலகில்
மன் பல் உயிர்கட்கு இறையவன் மாயன் என மொழிந்த
அன்பன், அனகன், இராமாநுசன் என்னை ஆண்டனனே! 30

ஆண்டுகள், நாள், திங்கள் ஆய், நிகழ் காலம் எல்லாம், மனமே!
ஈண்டு பல் யோனிகள்தோறு உழல்வோம் இன்று ஓர் எண் இன்றியே,
காண் தகு தோள் அண்ணல் தென் அத்தி ஊரர் கழல்-இணைக்கீழ்ப்
பூண்ட அன்பாளன் இராமாநுசனைப் பொருந்தினமே. 31

பொருந்திய தேசும், பொறையும், திறலும், புகழும், நல்ல
திருந்திய ஞானமும், செல்வமும் சேரும்—செறு கலியால்
வருந்திய ஞாலத்தை வண்மையினால் வந்து எடுத்து அளித்த
அருந் தவன் எங்கள் இராமாநுசனை அடைபவர்க்கே. 32

அடை ஆர் கமலத்து அலர்மகள் கேள்வன் கை ஆழி என்னும்
படையோடு நாந்தகமும், படர் தண்டும், ஒண் சார்ங்க வில்லும்
புடை ஆர் புரி சங்கமும், இந்தப் பூதலம் காப்பதற்கு என்று
இடையே இராமாநுசமுனி ஆயின—இந் நிலத்தே! 33

நிலத்தைச் செறுத்து உண்ணும் நீசக் கலியை நினைப்பு-அரிய
பெலத்தைச் செறுத்தும் பிறங்கியது இல்லை; என் பெய் வினை தென்-
புலத்தில் பொறித்த அப் புத்தகச் சும்மை பொறுக்கிய பின்,
நலத்தைப் பொறுத்தது—இராமாநுசன்-தன் நயப் புகழே. 34

நயவேன் ஒரு தெய்வம்; நானிலத்தே சில மானிடத்தைப்
புயலே எனக் கவி போற்றி செய்யேன்; பொன் அரங்கம் என்னில்,
மயலே பெருகும் இராமாநுசன் மன்னு மா மலர்த்தாள்
அயரேன்; அருவினை என்னை எவ்வாறு இன்று அடர்ப்பதுவே? 35

அடல் கொண்ட நேமியன், ஆர் உயிர் நாதன், அன்று, ஆரணச் சொல்-
கடல் கொண்ட ஒண் பொருள் கண்டு அளிப்ப, பின்னும் காசினியோர்
இடரின்கண் வீழ்ந்திடத் தானும் அவ் ஒண்பொருள் கொண்டு, அவர் பின்
படரும் குணன்: எம் இராமாநுசன்-தன் படி இதுவே. 36

படி கொண்ட கீர்த்தி இராமாயணம் என்னும் பத்தி வெள்ளம்
குடி கொண்ட கோயில் இராமாநுசன் குணம் கூறும் அன்பர்
கடி கொண்ட மா மலர்த் தாள் கலந்து உள்ளம் கனியும் நல்லோர்
அடி கண்டு கொண்டு உகந்து, என்னையும் ஆள் அவர்க்கு ஆக்கினரே. 37

ஆக்கி அடிமை நிலைப்பித்தனை என்னை இன்று; அவமே
போக்கிப் புறத்திட்டது என் பொருளா, முன்பு? புண்ணியர்-தம்
வாக்கில் பிரியா இராமாநுச! நின் அருளின் வண்ணம்
நோக்கில், தெரிவு அரிதால்; உரையாய், இந்த நுண் பொருளே. 38

பொருளும், புதல்வரும், பூமியும், பூங்குழலாரும் என்றே
மருள் கொண்டு இளைக்கும் நமக்கு, நெஞ்சே! மற்று உளார் தரமோ—
இருள் கொண்ட வெம் துயர் மாற்றி, தன் ஈறு இல் பெரும் புகழே
தெருளும் தெருள் தந்து, இராமாநுசன் செய்யும் சேமங்களே? 39

சேம நல் வீடும், பொருளும், தருமமும், சீரிய நல்
காமமும் என்று இவை நான்கு என்பர்: நான்கினும் கண்ணனுக்கே
ஆம் அது காமம்; அறம், பொருள், வீடு இதற்கு என்று உரைத்தான்—
வாமனன் சீலன் இராமாநுசன் இந்த மண்மிசையே. 40

மண்மிசை யோனிகள்தோறும் பிறந்து, எங்கள் மாதவனே
கண் உற நிற்கிலும், காணகில்லா உலகோர்கள் எல்லாம்,
அண்ணல் இராமாநுசன் வந்து தோன்றிய அப் பொழுதே,
நண்ணரும் ஞானம் தலைக்கொண்டு நாரணற்கு ஆயினரே. 41

ஆயிழையார் கொங்கை தங்கும் அக் காதல் அளற்று அழுந்தி,
மாயும் என் ஆவியை வந்து எடுத்தான் இன்று—மா மலராள்
நாயகன், எல்லா உயிர்கட்கும் நாதன் அரங்கன் என்னும்
தூயவன், தீது இல் இராமாநுசன், தொல் அருள் சுரந்தே. 42

சுரக்கும் திருவும் உணர்வும்; சொலப்புகில், வாய் அமுதம்
பரக்கும்; இரு வினை பற்று அற ஓடும்—படியில் உள்ளீர்!
உரைக்கின்றனன் உமக்கு யான்; அறம் சீறும் உறு கலியைத்
துரக்கும் பெருமை இராமாநுசன் என்று சொல்லுமினே. 43

சொல் ஆர் தமிழ் ஒரு மூன்றும், சுருதிகள் நான்கும், எல்லை
இல்லா அறநெறி யாவும் தெரிந்தவன், எண்-அரும் சீர்
நல்லார் பரவும் இராமாநுசன் திருநாமம் நம்பி,
கல்லார் அகல் இடத்தோர்; எது பேறு என்று காமிப்பரே! 44

பேறு ஒன்று மற்று இல்லை, நின் சரண் அன்றி; அப் பேறு அளித்தற்கு
ஆறு ஒன்றும் இல்லை, மற்று அச் சரண் அன்றி—என்று இப் பொருளைத்
தேறும்-அவர்க்கும், எனக்கும் உனைத் தந்த செம்மை சொல்லால்
கூறும் பரம் அன்று, இராமாநுச! மெய்ம்மை கூறிடிலே. 45

கூறும் சமயங்கள் ஆறும் குலைய, குவலயத்தே
மாறன் பணித்த மறை உணர்ந்தோனை, மதியிலியேன்
தேறும்படி என் மனம் புகுந்தானை, திசை அனைத்தும்
ஏறும் குணனை, இராமாநுசனை—இறைஞ்சினமே. 46

இறைஞ்சப் படும் பரன், ஈசன் அரங்கன் என்று, இவ் உலகத்து
அறம் செப்பும் அண்ணல் இராமாநுசன் என் அருவினையின்
திறம் செற்று, இரவும் பகலும் விடாது, என்-தன் சிந்தையுள்ளே
நிறைந்து, ஒப்பு அற இருந்தான்; எனக்கு ஆரும் நிகர் இல்லையே! 47

நிகர் இன்றி நின்ற என் நீசதைக்கு, உன் அருளின்கண் அன்றி,
புகல் ஒன்றும் இல்லை ; அருட்கும் அஃதே புகல் ; புன்மையிலோர்
பகரும் பெருமை இராமாநுச ! இனி நாம் பழுதே
அகலும் பொருள் என்—பயன் இருவோமுக்கும் ஆன பின்னே ? 48

ஆனது செம்மை அறநெறி ; பொய்ம்மை அறு சமயம்
போனது பொன்றி ; இறந்தது வெம் கலி—பூங் கமலத்
தேன் நதி பாய் வயல் தென் அரங்கன் கழல் சென்னி வைத்துத்
தான் அதில் மன்னும் இராமாநுசன் இத் தலத்து உதித்தே. 49

உதிப்பன உத்தமர் சிந்தையுள் : ஒன்னலர் நெஞ்சம் அஞ்சி,
கொதித்திட மாறி நடப்பன ; கொள்ளை வன் குற்றம் எல்லாம்
பதித்த என் புன் கவிப் பா-இனம் பூண்டன—பாவு தொல் சீர்
எதித் தலை நாதன் இராமாநுசன்-தன் இணை-அடியே. 50

அடியைத் தொடர்ந்து எழும் ஐவர்கட்காய், அன்று, பாரதப் போர்
முடியப் பரி நெடுந் தேர் விடும் கோனை முழுது உணர்ந்த
அடியர்க்கு அமுதம், இராமாநுசன்—என்னை ஆள—வந்து இப்
படியில் பிறந்தது : மற்று இல்லை காரணம், பார்த்திடிலே. 51

பார்த்தான் அறு சமயங்கள் பதைப்ப ; இப் பார் முழுதும்
போர்த்தான் புகழ்கொண்டு ; புன்மையினேனிடைத் தான் புகுந்து,
தீர்த்தான் இரு வினை ; தீர்த்து அரங்கன் செய்ய தாள்-இணையோடு
ஆர்த்தான்—இவை எம் இராமாநுசன் செய்யும் அற்புதமே. 52

அற்புதன், செம்மை, இராமாநுசன்—என்னை ஆள வந்த
கற்பகம், கற்றவர் காமுறு சீலன்—கருது-அரிய
பற்பல் உயிர்களும், பல் உலகு யாவும், பரனது என்னும்
நற்பொருள்-தன்னை இந் நானிலத்தே வந்து நாட்டினனே. 53

நாட்டிய நீசச் சமயங்கள் மாண்டன ; நாரணனைக்
காட்டிய வேதம் களிப்புற்றது ; தென் குருகை வள்ளல்
வாட்டம் இலா வண் தமிழ் மறை வாழ்ந்தது—மண்ணுலகில்
ஈட்டிய சீலத்து இராமாநுசன்-தன் இயல்வு கண்டே. 54

கண்டவர் சிந்தை கவரும் கடி பொழில் தென் அரங்கன்
தொண்டர் குலாவும் இராமாநுசனை, தொகை இறந்த
பண் தரு வேதங்கள் பார்மேல் நிலவிடப் பார்த்தருளும்
கொண்டலை, மேவித் தொழும் குடி ஆம்—எங்கள் கோக்குடியே. 55

கோக் குல மன்னரை மூவெழு கால் ஒரு கூர் மழுவால்
போக்கிய தேவனைப் போற்றும் புனிதன், புவனம் எங்கும்
ஆக்கிய கீர்த்தி இராமாநுசனை அடைந்தபின், என்
வாக்கு உரையாது, என் மனம் நினையாது—இனி மற்று ஒன்றையே.

மற்று ஒரு பேறு மதியாது, அரங்கன் மலர் அடிக்கு ஆள்
உற்றவரே தனக்கு உற்றவராய்க் கொள்ளும் உத்தமனை,
நல் தவர் போற்றும் இராமாநுசனை இந் நானிலத்தே
பெற்றனன்: பெற்றபின், மற்று அறியேன்—ஒரு பேதைமையே. 57

பேதையர் வேதப் பொருள் இது என்று உன்னி, பிரமம் நன்று என்று
ஓதி, மற்று எல்லா உயிரும் அஃது என்று, உயிர்கள் மெய்விட்டு
ஆதிப் பரனோடு ஒன்று ஆம் என்று சொல்லும் அவ் அல்லல் எல்லாம்
வாதில் வென்றான்—எம் இராமாநுசன், மெய்ம் மதிக்கடலே. 58

கடல் அளவு ஆய திசை எட்டினுள்ளும் கலி இருளே
மிடைதரு காலத்து, இராமாநுசன் மிக்க நான்மறையின்
சுடர் ஒளியால் அவ் இருளைத் துரந்திலனேல், உயிரை
உடையவன் நாரணன் என்று அறிவார் இல்லை, உற்று உணர்ந்தே. 59

உணர்ந்த மெய்ஞ்ஞானியர் யோகம்தொறும், திருவாய்மொழியின்
மணம் தரும் இன் இசை மன்னும் இடம்தொறும், மா மலராள்
புணர்ந்த பொன் மார்பன் பொருந்தும் பதிதொறும், புக்கு நிற்கும்—
குணம் திகழ் கொண்டல் இராமாநுசன், எம் குலக் கொழுந்தே. 60

கொழுந்துவிட்டு ஓடிப் படரும் வெம் கோள் வினையால் நிரயத்து
அழுந்தியிட்டேனை வந்து ஆட்கொண்ட பின்னும், அரு முனிவர்
தொழும் தவத்தோன் எம் இராமாநுசன் தொல் புகழ் சுடர் மிக்கு
எழுந்தது ; அத்தால் நல் அதிசயம் கண்டது இருநிலமே. 61

இருந்தேன், இரு வினைப் பாசம் கழற்றி இன்று ; யான் இறையும்
வருந்தேன்—இனி எம் இராமாநுசன் மன்னு மா மலர்த் தாள்
பொருந்தா நிலை உடைப் புன்மையினோர்க்கு ஒன்றும் நன்மை செய்யாப்
பெருந் தேவரைப் பரவும் பெரியோர்-தம் கழல் பிடித்தே. 62

பிடியைத் தொடரும் களிறு என்ன, யான் உன் பிறங்கிய சீர்
அடியைத் தொடரும்படி நல்க வேண்டும்—அறு சமயச்
செடியைத் தொடரும் மருள் செறிந்தோர் சிதைந்து ஓட வந்து, இப்
படியைத் தொடரும் இராமாநுச ! மிக்க பண்டிதனே ! 63

பண் தரு மாறன் பசுந் தமிழ் ஆனந்தம் பாய் மதமாய்
விண்டிட, எங்கள் இராமாநுசமுனி வேழம் மெய்ம்மை
கொண்ட நல் வேதக் கொழுந் தண்டம் ஏந்தி, குவலயத்தே
மண்டி வந்து என்றது; வாதியர்காள்! உங்கள் வாழ்வு அற்றதே. 64

வாழ்வு அற்றது தொல்லை வாதியர்க்கு; என்றும் மறையவர்-தம்
தாழ்வு அற்றது; தவம் தாரணி பெற்றது; தத்துவ நூல்
கூழ் அற்றது; குற்றம் எல்லாம் பதித்த குணத்தினர்க்கு அந்
நாழ் அற்றது—நம் இராமாநுசன் தந்த ஞானத்திலே. 65

ஞானம் கனிந்த நலம் கொண்டு, நாள்தொறும் நைபவர்க்கு—
வானம் கொடுப்பது மாதவன்: வல்வினையேன் மனத்தில்
ஈனம் கடிந்த இராமாநுசன் தன்னை எய்தினர்க்கு அத்
தானம் கொடுப்பது—தன் தகவு என்னும் சரண் கொடுத்தே. 66

சரணம் அடைந்த தருமனுக்காப் பண்டு நூற்றுவரை
மரணம் அடைவித்த மாயவன், தன்னை வணங்க வைத்த
கரணம் இவை உமக்கு அன்று என்று இராமாநுசன் உயிர்கட்கு
அரண் அங்கு அமைத்திலனேல், அரண் ஆர்—மற்று இவ் ஆர் உயிர்க்கே?

ஆர் எனக்கு இன்று நிகர், சொல்லில்?—மாயன் அன்று ஐவர் தெய்வத்
தேரினில் செப்பிய கீதையின் செம்மைப் பொருள் தெரிய,
பாரினில் சொன்ன இராமாநுசனைப் பணியும் நல்லோர்
சீரினில் சென்று பணிந்தது, என் ஆவியும் சிந்தையுமே. 68

சிந்தையினோடு கரணங்கள் யாவும் சிதைந்து, முன் நாள்
அந்தம் உற்று ஆழ்ந்தது கண்டு, அவை என்-தனக்கு, அன்று, அருளால்
தந்த அரங்கனும் தன் சரண் தந்திலன்; தான் அது தந்து,
எந்தை இராமாநுசன் வந்து எடுத்தனன்—இன்று என்னையே. 69

என்னையும் பார்த்து, என் இயல்வையும் பார்த்து, எண் இல் பல் குணத்த
உன்னையும் பார்க்கில், அருள் செய்வதே நலம்; அன்றி, என்பால்
பின்னையும் பார்க்கில், நலம் உளதே? உன் பெருங் கருணை-
தன்னை என் பார்ப்பர்—இராமாநுச! உன்னைச் சார்ந்தவரே? 70

சார்ந்தது என் சிந்தை, உன் தாள்-இணைக்கீழ்; அன்பு-தான் மிகவும்
கூர்ந்தது, அத் தாமரைத் தாள்களுக்கு; உன்-தன் குணங்களுக்கே
தீர்ந்தது, என் செய்கை; முன் செய்வினை நீ செய்வினை-அதனால்
பேர்ந்தது—வண்மை இராமாநுச! எம் பெருந்தகையே! 71

கைத்தனன், தீய சமயக் கலகரை ; காசினிக்கே
உய்த்தனன், தூய மறைநெறி-தன்னை—என்று உன்னி, உள்ளம்
நெய்த்த அன்போடு இருந்து எத்தும் நிறை புகழோருடனே
வைத்தனன் என்னை—இராமாநுசன் மிக்க வண்மை செய்தே. 72

வண்மையினாலும், தன் மா தகவாலும், மதி புரையும்
தண்மையினாலும், இத் தாரணியோர்கட்குத் தான் சரணாய்
உண்மை நல் ஞானம் உரைத்த இராமாநுசனை உன்னும்
திண்மை அல்லால், எனக்கு இல்லை—மற்று ஓர் நிலை தேர்ந்திடிலே. 73

தேரார் மறையின் திறம் என்று, மாயவன் தீயவரைக்
கூர் ஆழி கொண்டு குறைப்பது : கொண்டல் அனைய வண்மை
ஏர் ஆர் குணத்து எம் இராமாநுசன் அவ் எழில் மறையில்
சேராதவரைச் சிதைப்பது—அப்போது ஒரு சிந்தைசெய்தே. 74

செய்த்தலைச் சங்கம் செழு முத்தம் ஈனும் திரு அரங்கர்
கைத்தலத்து ஆழியும் சங்கமும் ஏந்தி, நம் கண்முகப்பே
மொய்த்து அலைத்து உன்னை விடேன் என்று இருக்கினும், நின் புகழே
மொய்த்து அலைக்கும் வந்து—இராமாநுச! என்னை முற்றும் நின்றே. 75

நின்ற வண் கீர்த்தியும் நீள் புனலும் நிறை வேங்கடப் பொன்
குன்றமும், வைகுந்த நாடும், குலவிய பாற்கடலும்
உன்-தனக்கு எத்தனை இன்பம் தரும்—உன் இணைமலர்த் தாள்
என்-தனக்கும் அது ; இராமாநுச ! இவை ஈய்ந்து அருளே. 76

ஈய்ந்தனன், ஈயாத இன்னருள் ; எண் இல் மறைக் குறும்பைப்
பாய்ந்தனன், அம் மறைப் பல் பொருளால் ; இப் படி அனைத்தும்
ஏய்ந்தனன், கீர்த்தியினால் ; என் வினைகளை வேர் பறியக்
காய்ந்தனன்—வண்மை இராமாநுசற்கு என் கருத்து இனியே ? 77

கருத்தில் புகுந்து, உள்ளில் கள்ளம் கழற்றி, கருது-அரிய
வருத்தத்தினால் மிக வஞ்சித்து, நீ இந்த மண்ணகத்தே
திருத்தித் திருமகள் கேள்வனுக்கு ஆக்கிய பின், என் நெஞ்சில்
பொருத்தப்படாது, எம் இராமாநுச! மற்று ஓர் பொய்ப்பொருளே. 78

பொய்யைச் சுரக்கும் பொருளைத் துரந்து இந்தப் பூதலத்தே
மெய்யைப் புரக்கும் இராமாநுசன் நிற்க, வேறு நம்மை
உய்யக் கொள்ள வல்ல தெய்வம் இங்கு யாது என்று உலர்ந்து, அவமே
ஐயப்படா நிற்பர், வையத்துள்ளோர்—நல் அறிவு இழந்தே. 79

நல்லார் பரவும் இராமாநுசன் திருநாமம் நம்ப-
வல்லார் திறத்தை மறவாதவர்கள் எவர், அவர்க்கே
எல்லா இடத்திலும், என்றும், எப்போதிலும், எத் தொழும்பும்
சொல்லால், மனத்தால், கருமத்தினால், செய்வன்—சோர்வு இன்றியே. 80

சோர்வு இன்றி உன்-தன் துணை-அடிக்கீழ்த் தொண்டுபட்டவர்பால்
சார்வு இன்றி நின்ற எனக்கு அரங்கன் செய்ய தாள்-இணைகள்
பேர்வு இன்றி, இன்று பெறுத்தும் இராமாநுச! இனி உன்
சீர் ஒன்றிய கருணைக்கு இல்லை, மாறு—தெரிவுறிலே. 81

தெரிவு உற்ற ஞானம் செறியப் பெறாது, வெம் தீவினையால்
உரு அற்ற ஞானத்து உழல்கின்ற என்னை, ஒரு பொழுதில்,
பொரு அற்ற கேள்வியன் ஆக்கி நின்றான்; என்ன புண்ணியனோ—
தெரிவு உற்ற கீர்த்தி இராமாநுசன் என்னும் சீர் முகிலே? 82

சீர் கொண்டு பேர் அறம் செய்து, நல் வீடு செறிதும் என்னும்
பார் கொண்ட மேன்மையர் கூட்டன் அல்லேன்; உன் பத யுகம் ஆம்
ஏர் கொண்ட வீட்டை எளிதினில் எய்துவன்; உன்னுடைய
கார் கொண்ட வண்மை, இராமாநுச! இது: கண்டு கொள்ளே. 83

கண்டுகொண்டேன், எம் இராமாநுசன்- தன்னை; காண்டலுமே,
தொண்டுகொண்டேன், அவன் தொண்டர் பொன் தாளில்; என் தொல்லை வெம்
விண்டுகொண்டேன்; அவன் சீர் வெள்ள வாரியை வாய்மடுத்து, இன்று [நோய்
உண்டுகொண்டேன்; இன்னம் உற்றன ஓதில், உலப்பு இல்லையே. 84

ஓதிய வேதத்தின் உட்பொருளாய், அதன் உச்சி மிக்க
சோதியை, நாதன் என அறியாது உழல்கின்ற தொண்டர்
பேதைமை தீர்த்த இராமாநுசனைத் தொழும் பெரியோர்
பாதம் அல்லால், என்-தன் ஆர்-உயிர்க்கு யாதொன்றும் பற்று இல்லையே. 85

பற்று மனிசரைப் பற்றி, அப் பற்று விடாதவரே
உற்றார் என உழன்று ஓடி, நையேன் இனி; ஒள்ளிய நூல்
கற்றார் பரவும் இராமாநுசனைக் கருதும் உள்ளம்
பெற்றார் எவர், அவர் எம்மை நின்று ஆளும் பெரியவரே. 86

பெரியவர் பேசிலும், பேதையர் பேசிலும், தன் குணங்கட்கு
உரியசொல் என்றும் உடையவன் என்று என்று, உணர்வில் மிக்கோர்
தெரியும் வண் கீர்த்தி இராமாநுசன் மறை தேர்ந்து, உலகில்
புரியும் நல் ஞானம் பொருந்ாதவரை—பொரும் கலியே. 87

கலி மிக்க செந்நெல் கழனிக் குறையல் கலைப் பெருமான்
ஒலி மிக்க பாடலை உண்டு, தன் உள்ளம் தடித்து, அதனால்
வலி மிக்க சீயம் இராமாநுசன் மறைவாதியர் ஆம்
புலி மிக்கது என்று இப் புவனத்தில் வந்தமை போற்றுவனே. 88

போற்று-அரும் சீலத்து இராமாநுச! நின் புகழ் தெரிந்து
சாற்றுவனேல், அது தாழ்வு ; அது தீரில், உன் சீர் தனக்கு ஓர்
ஏற்றம் என்றே கொண்டு இருக்கிலும், என் மனம் ஏத்தி அன்றி,
ஆற்றகில்லாது : இதற்கு என் நினைவாய் என்றிட்டு அஞ்சுவனே. 89

நினையார், பிறவியை நீக்கும் பிரானை, இந் நீள் நிலத்தே
எனை ஆள வந்த இராமாநுசனை ; இருங் கவிகள்
புனையார் : புனையும் பெரியவர் தாள்களில் பூந்தொடையல்
வனையார் : பிறப்பில் வருந்துவர் மாந்தர்—மருள் சுரந்தே. 90

மருள் சுரந்து ஆகமவாதியர் கூறும் அவப் பொருள் ஆம்
இருள் சுரந்து எய்த்த உலகு இருள் நீங்கத் தன் ஈண்டிய சீர்
அருள் சுரந்து, எல்லா உயிர்கட்கும் நாதன் அரங்கன் என்னும்
பொருள் சுரந்தான்—எம் இராமாநுசன், மிக்க புண்ணியனே. 91

புண்ணிய நோன்பு புரிந்தும் இலேன் ; அடி போற்றி செய்யும்
நுண்-அரும் கேள்வி நுவன்றும் இலேன் ; செம்மை நூல் புலவர்க்கு
எண் அரும் கீர்த்தி இராமாநுச! இன்று நீ புகுந்து, என்
கண்ணுள்ளும் நெஞ்சுள்ளும் நின்ற இக் காரணம் கட்டுரையே. 92

கட்டப் பொருளை மறைப் பொருள் என்று கயவர் சொல்லும்
பெட்டைக் கெடுக்கும் பிரான் அல்லனே—என் பெரு வினையை,
கிட்டி, கிழங்கொடு, தன் அருள் என்னும் ஒள் வாள் உருவி,
வெட்டிக் களைந்த இராமாநுசன் என்னும் மெய்த்தவனே ? 93

தவம் தரும் ; செல்வும் தகவும் தரும் ; சலியாப் பிறவிப்
பவம் தரும் தீவினை பாற்றித் தரும் ; பரந் தாமம் என்னும்
திவம் தரும்—தீது இல் இராமாநுசன் தன்னைச் சார்ந்தவர்கட்கு :
உவந்து அருந்தேன்—அவன் சீர் அன்றி, யான் ஒன்றும் உள் மகிழ்ந்தே. 94

உள் நின்று உயிர்களுக்கு உற்றனவே செய்து, அவர்க்கு உயவே
பண்ணும் பரனும் பரிவிலன் ஆம்படி, பல் உயிர்க்கும்,
விண்ணின்தலை நின்று, வீடு அளிப்பான், எம் இராமாநுசன்
மண்ணின் தலத்து உதித்து, உய்மறை நாலும் வளர்த்தனனே. 95

வளரும் பிணிகொண்ட வல்வினையால் மிக்க நல்வினையில்
கிளரும் துணிவு கிடைத்தறியாது, முடைத்தலை ஊன்
தளரும் அளவும் தரித்தும் விழுந்தும் தனி திரிவேற்கு
உளர்—எம் இறைவர், இராமாநுசன்-தன்னை உற்றவரே. 96

தன்னை உற்று ஆட்செய்யும் தன்மையினோர் மன்னு தாமரைத் தாள்—
தன்னை உற்று ஆட்செய்ய என்னை உற்றான், இன்று தன் தகவால்—
தன்னை உற்றார் அன்றி, தன்மை உற்றார் இல்லை என்று அறிந்து,
தன்னை உற்றாரை—இராமாநுசன், குணம் சாற்றிடுமே. 97

இடுமே, இனிய சுவர்க்கத்தில்? இன்னும் நரகில் இட்டுச்
சுடுமே? அவற்றைத் தொடர் தரு தொல்லைச் சுழல் பிறப்பில்
நடுமே? இனி நம் இராமாநுசன் நம்மை நம் வசத்தே
விடுமே? சரணம் என்றால், மனமே! நையல்—மேவுதற்கே. 98

தற்கச் சமணரும், சாக்கியப் பேய்களும், தாழ்சடையோன்
சொல் கற்ற சோம்பரும், சூனியவாதரும், நான்மறையும்
நிற்கக் குறும்பு செய் நீசரும் மாண்டனர்—நீள் நிலத்தே
பொன் கற்பகம் எம் இராமாநுச முனி போந்த பின்னே. 99

போந்தது, என் நெஞ்சு என்னும் பொன் வண்டு, உனது அடிப்போதில் ஒண் சீர்
ஆம் தெளி தேன் உண்டு அமர்ந்திட வேண்டி நின்பால்; அதுவே
ஈந்திட வேண்டும்; இராமாநுச! இது அன்றி, ஒன்றும்
மாந்தகில்லாது; இனி, மற்று ஒன்று காட்டி மயக்கிடலே. 100

மயக்கும் இரு வினை வல்லியில் பூண்டு, மதி மயங்கித்
துயக்கும் பிறவியில் தோன்றிய என்னை, துயர் அகற்றி
உயக்கொண்டு நல்கும் இராமாநுச! என்றது உன்னை உன்னி
நயக்கும் அவர்க்கு இது இழுக்கு என்பர் நல்லவர்—என்றும் நைந்தே. 101

நையும் மனம் உன் குணங்களை உன்னி; என் நா இருந்து எம்
ஐயன் இராமாநுசன் என்று அழைக்கும்; அருவினையேன்
கையும் தொழும்; கண் கருதிடும் காண; கடல் புடை சூழ்
வையம்-இதனில் உன் வண்மை என்பால் என் வளர்ந்ததுவே? 102

வளர்ந்த வெம் கோப மடங்கல் ஒன்று ஆய், அன்று வாள் அவுணன்
கிளர்ந்த பொன் ஆகம் கிழித்தவன் கீர்த்திப் பயிர் எழுந்து
விளைந்திடும் சிந்தை இராமாநுசன் என்-தன் மெய்வினை நோய்
களைந்து, நல் ஞானம் அளித்தனன்—கையில் கனி என்னவே. 103

கையில் கனி என்னக் கண்ணனைக் காட்டித் தரிலும், உன்-தன்
மெய்யில் பிறங்கிய சீர் அன்றி வேண்டிலன் யான் ; நிரயத்
தொய்யில் கிடக்கினும், சோதி விண் சேரினும், இவ் அருள் நீ
செய்யில் தரிப்பன், இராமாநுச! என் செழுங் கொண்டலே! 104

செழுந்திரைப் பாற்கடல் கண் துயில் மாயன் திருவடிக்கீழ்
விழுந்திருப்பார் நெஞ்சில் மேவு நல் ஞானி, நல் வேதியர்கள்
தொழும் திருப் பாதன் இராமாநுசனைத் தொழும் பெரியோர்
எழுந்து, இரைத்து, ஆடும் இடம்—அடியேனுக்கு இருப்பிடமே. 105

இருப்பிடம்—வைகுந்தம், வேங்கடம், மாலிருஞ்சோலை என்னும்
பொருப்பிடம்—மாயனுக்கு என்பர் நல்லோர்; அவை-தம்மொடும் வந்து
இருப்பிடம், மாயன் இராமாநுசன் மனத்து ; இன்று அவன் வந்து
இருப்பிடம் என்-தன் இதயத்துள்ளே, தனக்கு இன்புறவே. 106

இன்பு உற்ற சீலத்து இராமாநுச! என்றும், எவ்விடத்தும்,
என்பு உற்ற நோய் உடல்தோறும் பிறந்து, இறந்து, எண்-அரிய
துன்பு உற்று வீயினும், சொல்லுவது ஒன்று உண்டு: உன் தொண்டர்கட்கே
அன்பு உற்று இருக்கும்படி என்னை ஆக்கி, அங்கு ஆட்படுத்தே. 107

அம் கயல் பாய் வயல் தென் அரங்கன் அணி ஆகம் மன்னும்
பங்கய மா மலர்ப் பாவையைப் போற்றுதும்—பத்தி எல்லாம்
தங்கியது என்னத் தழைத்து, நெஞ்சே! நம் தலைமிசையே
பொங்கிய கீர்த்தி இராமாநுசன் அடிப் பூ மன்னவே. 108

இராமாநுச நூற்றந்தாதி முற்றும்

இயற்பா முற்றும்

ஸ்ரீ:

பாட ரூப பேதங்கள்

2082 தகளியாய்
சூட்டினன்
சூட்டினேன்
2083 படைத்து
அடைத்து
2084 பார் அடியும் ஓர்
பார் உடுத்து
சூர் உருவில்
பேய் அளவும்
2085 போர்க் கதவும்
2087 வண்ணனை யாம்
என்று மறப்பனோ
இன்று மறப்
பேனோ
2088 கருமங்கட்கு
2089 எரி கதிரோன்
தன்னை
2090 இன்று உன்
கிடந்த அன்றே
கிடந்தது என்னே
விரி கோட்ட
மா வடிவில்
மா வடியில்
மா வடியின்
2091 விண்ணில் அலகு
சீர் ஆழியார்க்கு
2092 தான் தொழா
2094 இயல்பு ஆக
ஈர்ந் துழாயான்
இயல்பு ஆக நீதி
யால்
2095 சாத்தியும்
2096 முதல் ஆவார்
மூவர்
மூதுநீர் வண்ணன்
வையத்து
2097 வண்ணன் அடி
2098 விசும்பு அளந்தது
என்பார்
அடி உகிரால்
உலகு அளந்த
ஞான்று
2099 நான்று முலைத்
தலை
பொருது இடைவு
புள்ளின் வாய்
2101 ஏத்துவராம்
நின்று
ஏத்துவார் நின்று
2103 ஊர்ந்தாயை
2105 விரலொடு
ஞான்று
2106 மரகதமே
2107 நைந்து வைக்கும்
வேங்கடமே
2109 கையில் வலம்புரி
யும்
மலர்மகள் ஆகத்
தாள்
மா மதில்
நின் ஆகத்தான்
நின் ஆகத்தால்
2110 பிறை மருப்பில்
2111 உள்ளத்து
சென்று அறி
தண் துழாயான்
அடியே
2112 பற்றி பொன் ஆழி
மால் அடியே
2114 அருள்புரிந்த
நான்முகர்க்கு
2115 ஏழ் உலகும்உண்டு
முகில்வண்ண
நின்று உருகி
நின் உருவில்
2116 குற்றமாய்க்
கொள்ளில்
தேறின்
அடைதற்கு
என்னே
அடைதற்கு
என்றே
2117 முரண வலி
ஆம் அன்றே
வள் உகிரால்
2118 வாழ்வார்கள்
ஆய்வார்கள்
2119 என் என்ற
எம் என்ற
என் என்னும்
2120 கஞ்சன் முன்
அஞ்ச
2121 கன்று உகந்தான்
2122 குற்றம் செயினும்
2123 திருமுகமே
அணைக் கிடந்தார்
2124 தாமே கைகூடும்
2125 தமர் உகந்தது
எவ்வண்ணம்
இருப்பரேல்
2127 பண்புரிந்த ஆகத்
தான்
போகத்தார்
2128 செந்நெறீ
செந்நிறீ
காண்பரோ
2129 செவ்வடிக்கே
2130 மாறும் பல்ஆக்கை
2131 புரிந்த பரிசினல்
2133 நண்ணில்
கைதொழுவார்
2134 சிங்காதனம் ஆம்
அணிவிளக்கு ஆம்
2136 ஆகினும்
ஆயினும்
பேர் ஆயர்க்கு

2137 பிதற்றில் அல்லால்
எம் பெம்மானை
காண்கிலார்
2138 நயன் என்று நல்மாலை
2139 மால் அடியைக்
2140 தன்னில் அங்கை
2141 சரணாய்
தாமரையானோடும்
முரண் ஆய
அரண் ஆய மன்
2142 விலகும்
இலகு கருங் கடலும்
2143 ஏழ் உலகம்
தாயனவும்
போயனவும்
2144 தொழாது என்
கேளவன் தேன்மொழியே
கூறும் அதே
நள்ளேல்
2145 நம்மேல் வினை
எம்மேல் வினை
2146 செய்யானை
2147 ஓதுவதுவும்
2150 ஏழ் உலகும்
நீ வளர்ந்தது மெய் என்பர்
நீ விளைந்தது மெய்
நீ கிடந்த மெய்
நீ கிடந்தாய் மெய்
மெய் என்பார்
சொல்
2156 இருவினைகள்
2157 பழுது ஒன்றி
2158 பூங்கிடங்கும்
2159 படம் உடைப்
பன்னகப் பள்ளியான்
கைதொழுது
கொன்னகப்

2160 கொண்டாரை
நிவர்ந்திலையே
தோய மடுத்து
2161 பகைஞர்க்கு
2162 அடுகளத்து
அஞ்ஞான்று
2164 ஆயன் நிரை விடை
என் நீ
உருவு உடைய
நேரார் நிசாசரர்
2165 ஞான்று
எயிற்று அளவும்
2166 படிகொண்டு
கொடிகொண்டு
படிவில்
நீர் ஏந்தும்
2167 பனி மறைத்த
காமரு
2168 தாள்கொள்மின்
2171 வணங்கானும் அன்றே
நேர் அரியோன் ஆய
இடந்த தூண்
2172 குரம்பையில்
2174 எயிறு இலகு
வாய் மடித்தது
ஈடு இழியச்
2175 சென்ற விந்தை
மறையவர்க்கு
2176 உரைக்கும் முறை
செல்லும் அவை உண்டே
2177 கடைக்கைப் பிடி
2179 திரிவரேனும்
ஒருவர் அங்கத்து
2180 வேங்கடத்தின் மேயானும்
2181 ஓர் அடியின்
2182 தகளியாய்
இடு திரியாய்
ஞாலச் சுடர்
ஞாலத் தமிழ்

2183 ஞானத்தான்
தானத்தான்
2184 பார்க் கடலான்
புரிவர்
2185 ஆங்கே திகழ
சேர்த்தி
அங்கமலம்கொண்டான்
2187 உள் ஒடுக்கி
காண்பரேல்
வண்ணர் கழல்
2188 வாய் மடுத்து
கண் சுழன்ற
சேவடியே
2189 முலை உண்டாய்
அலை பண்பாய்
2190 பெரு மறையால்
2191 பிள்ளையா
நின் உள்ளே நின்றமையால்
2192 இன்பத்தார் ஆவர்
2193 பலரும்
கண்ணுதலோன் என்றே
தொழும் தகையான்
2194 தொடர் எடுத்து
இடர் எடுக்க
2195 பண்டு இப் பெரும்பதியை
2196 திரிந்ததும்
அழகிதே
2197 அடிமைப்பட்டது
தான் அறியானேனும்
2198 பிறை அணிந்த
2199 மார்பத்து
தான் கிடந்த
வான் கிடந்தான்
2200 மதிக்க வேண்டாம்
2201 தாரணங்கள்
2203 பெற்றால் கரிதாகும்

வென்று
தண்தோட்டு
2204 வலம் கொண்டு
2208 பரித்து எழுந்த
கதிர் மிகுத்து அம்
2209 நினைப்பு அரியன்
எனப் பலரும்
எனப் புகலும்
2213 மகிழ்ந்தது நின்
பாதமே
2214 பணிந்துலவும்
2217 அறிவாரும் தாம்
அறிவார்
2218 திருந்தத்
2219 இரு நிதியும்
சார்வும் அறிந்து
சார்பும் அறிந்து
சார்வு என்று
அறிந்து
2220 முடிவும்
அத்தனையே
2222 புக்குஇயலல்
ஆகா
அருளான் அறம்
அறம் அருளும்
என்றே
மாமறையோன்
ஈந்த
மாமறையோர்க்கு
2223 பிறப்பு என்றும்
2225 மானிடமாய்
நாவினல் உள்
2226 அதன் நரகம்
அரு நரகம்
அரு நரகும்
2228 அணி உருவன்
மற்று எல்லாம்
உளன் கிடந்த
2229 வியன் இரு
ஞாலம்
2231 ஆங்கு அவர்
சொன்ன
2233 ஆர் அது
அறிவான்
ஆர் அன்று
அறிவார்
2234 நிறையார் குழல்
தாழ்ந்த
இளங் கரி
பூங் கொடிகள்
யான் விரும்பும்
2235 நீர் மதிக்கும்
2238 கடைப்படுமின்
கேட்டிரோ
கேட்டீரோ
2239 பாடு என்னும்
பாடு என்றும்
2240 காண்குற்ற
போது
இருள் இரிந்து
இருள் திரைந்து
இருள் தெரிந்து
இருள் தெளிந்து
உன்னையும் அங்கு
2243 பேதமையால்
மாறு ஒன்று
2244 பட்ட விடுசாபம்
பட்ட இடிசாபம்
சொல்வில்
2245 கதையும் பெரும்
கண்ண
நின் பெயரே
இதையம்
ஏத்துக் கதையின்
ஏத்திக் கதையின்
கதையும் திரு
மொழியாய்
2246 கமலக் கையால்
2249 வாள் அவுணன்
2250 பூவேகும்
பூவேறும்
2251 தமர் உள்ளம் தன்
பொருப்பு
தமர் உள்ளம்
மாமலலை
ஏவலலை
2252 அடங்கான்
அடி நிமிர்ந்த
2254 கரி இடந்த
துணிந்தேன்
யான்
2255 பெருந் தமிழன்
அல்லேன்
நல்லேன் பெரிது
2258 சாற்றி உரைத்தல்
சார்த்தி உரைத்
தல்
2259 நிமிர்ந்து அளப்ப
நிவர்ந்து அளப்ப
பேர் மொழிந்த
2260 தான் இரப்பான்
மொய் மலரான்
தோள் நலம்
தான்
எத்தனைக்கும்
2261 நினைந்து எனது
2262 ஊன் திகழும்
மேனி
2264 குறையானவெம்
என் சொற்கள்
செய்த வரம்
2265 உரம் கருதும்
மூக்கத்தவனை
மூக்கத்தவன்
2266 அமுது என்னச்
சொல்
2267 நவின்று உரைத்து
2269 தாம் செல்வ
தன்பின்
கடி நரக
2270 கதம் சிறந்து
உதவிப் போர்
யானை
2271 கைதொழுது
2272 அளந்தான் இக்
கார்க் கடல்
2273 ஏத்தினர் தாம்
2274 அவை கூடா
முன்னம்
2277 முத்தி மறை
யாவான்
2278 திரு மார்ப

பட மூக்கில்
குட மூக்கில்
2279 தான் வளர்ந்து
உள் ஒடுக்கிக்
2280 அறை கழல்
மா வடிவன்
மாவலியை
2281 நெடியானே
விண்ணவர்க்கும்
மேலா
மேலாய்
மேல் நாள்
விளவின்
2283 வரை மார்பில்
கொண்டேன்
மனம்
2284 செரு நரகம்
அரு நரகம்
2285 பொருந்தியே
உண்டு உமிழ்ந்
தும்
நீர் ஏற்றும்
2286 பாற்கடல்
கொண்டார்க்கு
2287 ஆழியார்க்கு
ஏற்றார்க்கு
2288 கழல் தொழுது
வாழ்
எழில் அளந்தும்
2289 உண்டு உமிழ்ந்து
உண்டும் உமிழ்ந்
தும்
வண்டு உறையும்
2290 மற்று இவையே
எண்ணின்
2291 நலம் புரிந்த
2292 நறை விரியும்
2293 திண் கதவும்
2296 பவ்வம்
2297 வந்து உதித்த
வந்து ஒதைத்த
மார்பன்
2298 செல்லாது

2301 உண்டு உமிழ்ந்து
ஆக்கி
உண்டு உமிழ்ந்
தாய் அவ்
இவ் உலகம்
பெரிது அன்றே
இன்றே திரு
மாலே
2302 பேசுவார் அவ்
வளவே
வாசமலர்த் தண்
துழாய்
தேசுடைச்
தேசுடையான்
அக்கரனைக்
கொண்டான்
2304 துளையில்
சென்று
புனத்துழாய்
2305 பொருந்து
சுடாழி
2306 முழுது உண்ட
மொய் குழல்
ஆச்சி
இழுது உண்ட
நெஞ்சே திறந்து
2308 யாரே துயர்
யாண்டையார்
பள்ளி அணைந்
தானை
2311 நேர்ந்தவன்
சிந்தை
நிறை விசும்பம்
2312 நரை ஏற்றான்
பாற்கடல்
உள்ளான்
2313 இருந்தான்
மனமும்
2315 வசவேகொல்
2317 கைய்ய
மாயர் அவர்க்கு
2318 அவர்க்கு அடிமை
2319 மண் திசையும்
2320 மறை பொருளாய்

2323 எரி உருவம்
2324 மார்பனர்
2326 மண் கோட்டில்
2327 அலை முகடு
அண்டம்
2330 பெற்றதும்
2331 சூழ்ந்து
தாழ அருவி
2333 மான் மரிய
மான் மறிய
2334 மேலாய்ப்
குழவியான்
2335 மார்பர்க்குப்
மார்பற்கு
மார்வர்க்கு
2336 வரை மார்வில்
மீன் போல
திரியுங்கால்
2337 நிறம் உடைய
2338 பொலிந்த
மலிந்த திரு
திரு இருந்த மார்
பன்
2341 உற்றக் காத்து
2342 பார்க்கடல்
போனம்
2345 படைப்ப
2346 அங்கர்க்கு
அங்கக்கு
கரி உருவன்
2347 கைடவரும்
2348 கமலத்தினது
ஒண்போது
ஆங்கு அத் திகிரி
2349 எனப் பெயர்ந்து
2351 விளங்கும் களிறு
2353 குல மகளிர்
2354 மன்னிக் குடம்
நயந்த
2355 தம் கொங்கை
வாய் வைத்தான்
2357 நீ வேண்டா
நீர் வேண்டாம்

வெஃகாவைச்
சேர்ந்தானை
மென் மலர்
2358 ஏய்ந்த முடிப்
போது
ஆன்ற அடிப்
போது
2359 வலம் சூழ்ந்த
வலம் சுழித்த
மாதவனை ஓர்த்து
2360 மார்பனையே
2362 நினைப்பு அரியனே
னும்
நிலைபெற்று
நினைப்பெற்றேன்
2363 உணர்வில்
உணர்வு
உணர்விலும்
காண்பு அரியன்
உணரிலும்
காண்பு அரியன்
காண்பு அரியர்
இணர் இணையக்
2364 உரைப்பரேனும்
காண்பு அரியனே
னும்
2365 உணர்வரேனும்
2366 கழல்போல்
சேர்ந்தால்
பின்னைக்கா
2367 எழில் கொண்ட
வேகத்து எழில்
கொண்டு
தான் முயங்கி
நீர் மேக மேனி
2368 இமைக்கும்
கண்ண
மாகதமே
2369 அய்யப்படாதே
மார்பன்
2372 மண் உண்டு
உண்டு ஆற்றாதாய்
2374 உள் ஒடுக்கி
ஆராய்ந்து
2376 அரியாய் இகந்த
சிந்திப் பிளந்த
2377 தாழ்த்து வணங்
கத்
2378 மலர் எடுத்த
2379 நணுகாமைக் காப்
பான்
2380 அந்நான்று
எங்கட்கு
2381 சார்பு நமக்கு
2382 தான்முகனுய்ச்
2383 உரைப்பன்
உரைப்பார்
யாரும் அறியார்
இத்தனை எத்
தவம்
2384 ஆலில் கிடந்ததும்
வும்
அப்பில் அரும்
பொருளை
2385 ஆறு சடைக்
காய்ந்தான்
2386 மார்பம்
வளை உகிர்த்
தோள்
யுகத்தில்
ஒரு ஞான்று
உள் வாங்கு நீயே
உள் வாங்கினையே
அருள் நான்கு
2387 அயத்தார் பௌத்
தர்
மானவனை மால
வனை
2388 இனிச் சிறிதும்
நன்றாக நின்
அருள்
அருளின்பாலதே
2389 சேர
கொலை கொண்ட
ஈடு அழித்தான்
2390 குறை கொண்ட
மறை கொண்டு
2391 அது கொண்டு
அழல்
யான் காண
2392 காண்கை கண்
கேட்கைச் செவி
மகுடம் தாழ்த்து
தண் மலராள்
2393 மறுக்கிடந்த
இரண்டும் போய்
இரண்டும்
2394 வீடு ஆகும்
மெய் வருந்திக்
கொண்டு உழல்
வீர்
விண்ணவர்க்கும்
2396 படி நடந்தான்
மாற் கண்டன்
நீற்கண்டன்
2397 அஞ்ஞான்று
2398 ஆல நிழற்கீழ்
நால்வர்க்கும்
2399 வள் உகிரான்
மார்பு இரண்டு
சாற்றி இருப்பார்
சார்த்திஇருப்பார்
2400 ஆழியான்அன்றே
2401 உலகு எலாம்
தவத் தேவு
2403 அரி உருவம்
தானே
பழகியான் தானே
2404 இடல் வேண்டும்
வேண்டுங்
கொலோ
கார்மேகம் அன்
னன்
2405 புகுந்தாய்
2406 வகையான் மதி
யாது
ஒன்று உண்டேற
2407 மற்றும் தொழு
வார்
கரிக்கண்டாய்
2408 மட நெஞ்சன்

யாம் காண
2409 வீழ்த்த
வீழ்த்ததுவும்
2410 உகப்பு உருவம்
ஒளி உருவம்
மகப்பு உருவம்
2411 உள்ளத்துள் நின்
றான்
அரவணை மேல்
2412 தாரணியுள்
பேசின் கதை
2413 திருவயிற்றின்
உள்ளே
படாதது அறி
மினோ
2414 ஆனை பிடித்து
தோளிக்காய்
2415 வெவ்வினை நோய்
தாம் கடத்தும்
தான் கிடக்கும்
2417 கருத்தனுவார்
2419 உகக்குமேல்
2420 மணிவரண்டி
ஆனை
2422 ஒலி உதிர
2423 வினை கடக்கும்
2424 காப்பு அணிவார்
தான் குவித்துக்
2426 தான் நோக்கி
நிற்கின்றான்
2427 மணி விளக்காய்
மணி விளக்காம்
எப்போதும்
ஆடுதிரேல்
2429 மென்மையால்
காப்பார் மலை
2430 மலை யாமை
தலை யாமை
அலை யாமை
2433 வியாதி ஏற்று
வேறாக எத்தார்
2435 நிற்கின்ற எல்லாம்
2437 வாணர்க்கு
2439 மன் எஞ்ச
2440 எம் கேசவனே
2441 என்று நின் தாள்
விள்ளேல் மனம்
2442 தஞ்சமாய்
2443 மார்வில்
மார்பன்
சிரீதரன் வண்
டுலவு
2445 போதானை
2446 மாதவனை மாய
வனை
மாயவனை மாத
வனை
மாதவனை மால
வனை
மாலவனை மாய
வனை
மாயவனை மால
வனை
2447 தன்னோடும்
2448 நம் பதியை
2450 கவிக்கும் நிறைப்
பொருளாய்
பார்க்கின்
மறை பொருளாய்
2451 எயிற்றுத் தாங்கிய
தும்
அறிகின்றேன்
வல்லேன்
2452 ஏதிலராய்
2453 இல்லறம் இல்
லேல்
2454 கார் சிறந்த
2455 பதிப் பகைஞர்க்கு
மதிக்கிடந்த
மதிக்கடைந்த
2456 தீக்கொண்டு
செஞ்சடையான்
பின்
பின் சென்றும்
பூக்கொண்டு
2457 பாட்டும் உரையும்
2458 தற்பென்னத்
2460 ஏய்ந்ததும்
2464 வேந்தவாய்
2465 தொழும் காதல்
2466 வானரர் கோன்
மதம் அழித்த
2467 தமியேற்கு
2468 இமையப் பெரு
மலை
சமைய விருந்து
சமையங்கள்
2469 பெயர் பாடி
2470 பார்க்கடலான்
2471 பால் திருந்து
மேல் திருந்த
மேல் திருந்து
2472 தாமரை மேலார்க்
கும்
ஆடு அரவு ஆர்த்
தார்க்கும்
ஆடு அரவு ஆர்த்
தார்க்கு
ஆடு அரவத்தார்க்
கும்
ஆடு அரவத்தாற்
கும்
2473 திரு இருந்த மார்
பில்
திரு இருந்த மார்
வில்
2474 என்று இருப்
பேன்
2478 ஒழுக்கம்
யோனியமாய்
2480 திருவின் நிழல்
போல்
2481 முனி நஞ்சப்
பேய்ச்சி
பனி நெஞ்ச
2482 இயல்பாக
இயல்பு எல்லாம்
திறத்துக்கு எல்
லாம்
ஒரு ஞான்று
2483 கொண்டு உலவும்

வல்லி இது எனும்
வல்லி ஈது எனும்
ஈது என்னும்
வல்லி அது எனும்
காண்மின்கள்
2484 செறித்து
2486 பரிபவர்தாம்
கருஞ் சுடர் ஆழி
2487 இது அன்றி
கிளியும் எழுகும்
இடும் தொண்
டையோ
ஈது அறிவு
அரிதே
2488 அரியனே
யாம் என்று
வெண் முத்தும்
பேர்கின்றதே
2489 பேர்கின்றதே
இது எல்லாம்
எனவே
2490 நடாவுதிர்
தண் வாடை
தணிந்து
2492 கயலோ நும்
கண்கள்
அயலோர் அறிகி
லும்
புனேவேங்கடத்து
2493 ஊழிகளாய் படும்
ஊழிகளாய் அடும்
2495 காரிகைக்கே
2496 கூயருளாய்
2497 உலகு ஏழ் உண்
டான்
மாலையும் தண்
ணம்
2498 தொடு உணப்
2500 புண்டரீகத் தண்
கேழ்
இயல்புகளே
2501 இயல்பு ஆயின
ஓரோ குடங்கை
கண்கள் தன்
னெடும்
2502 வளைவு விளக்கு
மால்
யவர்க்கும்
2503 கோது கொண்டு
தேன் நலம்
சோலை
2504 செருவாரும் நட்பு
செறுவார் உன்
நட்பு
இறை கூய்
இதோ வந்து
2506 இருந்தாள் இவள்
சொல்லால்
பெடையொடும்
செல்ல
அன்னன்ன
நீர்மை கொல்லோ
2507 இன்னம் சொல்
லீரோ
2508 இசையலம்
இசையிலும்
சிமையம் மிசை
மறை முனிவர்க்கு ' அஞ்சேல்மின் ' என்று அருள் கொடுத்து ; வெங் கண் விறல் விராதன் உக, வில் குனித்து; வண் தமிழ் மா முனி கொடுத்த வரி வில் வாங்கி ; புலர்ந்து எழுந்த காமத்தால், ' சீதைக்கு நேர் ஆவன் ' என்ன, பொன் நிறம் கொண்ட சுடு சினத்த சூர்ப்பணகி கொடி மூக்கும் காது இரண்டும் கூர் ஆர்ந்த வாளால் ஈரா விடுத்து ; கரனோடு தூடணன்-தன் உயிரை வாங்கி ; அவள் கதறி, தலையில் அம் கை வைத்து, மலை இலங்கை ஓடிப் புக ; கொடுமையின் கடு விசை அரக்கன், அலை மலி வேல்கணாளை அகல் விப்பான், ஓர் உரு ஆய மானை அமைத்து, செங்கல் பொடிக் கூறை, சிற்றெயிற்று, முற்றல் மூங்கில் மூன்று தண்டத்தன் ஆய், வஞ்சித்து, இலைக் குரம்பில் தனி இருப்பில் கனி வாய்த் திருவினைப் பிரித்து, நீள் கடல் சூழ் இலங்கையில் அரக்கர் குடிக்கு நஞ்சு ஆகக் கொண்டு போய், வம்பு உலாம் கடி காவில் சிறையா வைக்க ; அயோத்தியர் கோன் மாய மான் மாயச் செற்று ; அலை மலி வேல்-கண்ணாளை அகன்று, தளர்வு எய்தி ; சடாயுவை வைகுந்தத்து ஏற்றி ; கங்குலும் பகலும் கண் துயில் இல்லாக் கானகம் படி உலாவி உலாவி ; கணை ஒன்றினால் கவந்தனை மடித்து ; சவரி தந்த கனி உவந்து :

வன மருவு கவி அரசன் காதல் கொண்டு ; மரா மரம் ஏழ் எய்து ; உருத்து எழு வாலி மார்பில் ஒரு கணை உருவ ஓட்டி ; கருத் துடைத் தம்பிக்கு இன்பக் கதிர்முடி அரசு அளித்து ; வானரக் கோனுடன் இருந்து, வைதேகி-தனைத் தேட விடுத்த திசைக் கருமம் திருத்த, திறல் விளங்கு மாருதியும் மாயோன் தூது உரைத்தல் செப்ப :

சீர் ஆரும் திறல் அனுமன் மா கடலைக் கடந்து ஏறி, மும் மதில் நீள் இலங்கை புக்கு, கடி காவில் வார் ஆரும் முலை மடவாள் வைதேவி-தனைக் கண்டு, ' நின் அடியேன் விண்ணப்பம் கேட்

டருளாய் : அயோத்தி-தனில் ஓர் இடவகையில் எல்லியம்போது இனிது இருத்தல், மல்லிகை மா மாலை கொண்டு அங்கு ஆர்த்ததும் ; கலக்கிய மா மனத்தனள் ஆய்க் கைகேசி வரம் வேண்ட, மலக்கிய மா மனத்தனன் ஆய் மன்னவனும் மருது ஒழிய, 'குலக் குமரா! காடு உறையப் போ' என்று விடை கொடுப்ப, இலக்குமணன்-தன்னெடும் அங்கு ஏகியதும் ; கங்கை-தன்னில் கூர் அணிந்த வேல் வலவன் குகனேடு சீர் அணிந்த தோழமை கொண்டதுவும் ; சித்திரகூடத்து இருப்பப் பரதநம்பி பணிந்ததுவும் ; சிறு காக்கை முலை தீண்டி மூவுலகும் திரிந்து ஓடி, 'வித்தகனே ! இராமா ! ஓ ! நின் அபயம்' என்ன, அத்திரமே அதன் கண்ணை அறுத்ததுவும் ; பொன் ஒத்த மான் ஒன்று புகுந்து, இனிது விளையாட, நின் அன்பின் வழிநின்று, சிலை பிடித்து, எம்பிரான் ஏக, பின்னே அங்கு இலக்குமணன் பிரிந்ததுவும் ; அயோத்தியர்-கோன் உரைத்த அடையாளம், ஈது அவன் கை மோதிரமே' என்று அடையாளம் தெரிந்து உரைக்க, மலர்க் குழலாள் சீதையும் வில் இறுத்தான் மோதிரம் கொண்டு, 'அனுமான் ! அடையாளம் ஒக்கும்' என்று உச்சிமேல் வைத்து உகக்க, திறல் விளங்கு மாருதியும் இலங்கையர்-கோன் மாக் கடி காவை இறுத்து, காதல் மக்களும் சுற்றமும் கொன்று, கடி இலங்கை மலங்க எரித்து, அரக்கர் - கோன் சினம் அழித்து, மீண்டு, அன்பினல் அயோத்தியர் - கோன் தளிர் புரையும் அடி-இணை பணிய :

கான எண்கும் குரங்கும் முசுவும் படையா, கொடியோன் இலங்கை புகல் உற்று ; அலை ஆர் கடற்கரை வீற்றிருந்து ; செல்வ விபீடணற்கு நல்லன் ஆய் ; விரி நீர் இலங்கை அருளி ; சரண் புக்க குரை கடலை அடல் அம்பால் மறுக எய்து ; கொல்லை விலங்கு பணி செய்ய, மலையால் அணை கட்டி ; மறு கரை ஏறி ; இலங்கை பொடி ஆக, சிலை மலை செஞ் சரங்கள் செல உய்த்து ; கும்பனேடு நிகும்பனும் பட, இந்திரசித்து அழிய, கும்பகர்ணன் பட, அரக்கர் ஆவி மாள, அரக்கர் கூத்தர்போலக் குழமணிதூரம் ஆட, இலங்கை மன்னன் முடி ஒருபதும், தோள் இருபதும் போய் உதிர, சிலை வளைத்து ; சர மழை பொழிந்து ; கரம் துணித்து ; வென்றி கொண்ட செருக்களத்துக் கடிக் கமல நான்முகனும், கண்மூன்றத்தானும், எண்மர், பதினெருவர், ஈர்அறுவர், ஓர்இருவர், மற்றும் உள்ள வானவர் மலர்மழை பொழிந்து, மணி முடி பணிதர, அடி-இணை வணங்க, கோலத் திரு மா மகளோடு, செல்வ விபீடணன், வானரக் கோனுடன் இலங்கு மணி நெடுந் தேர் ஏறி ; சீர் அணிந்த குகனேடு

கூடி ; அங்கண் நெடு மதில் புடைசூழ் அயோத்தி எய்தி ; நல் நீர் ஆடி ; பொங்கு இள ஆடை அரையில் சாத்தி ; திருச் செய்ய முடியும், ஆரமும், குழையும் முதலா மேதகு பல்கலன் அணிந்து ; சூட்டு நன் மாலைகள் அணிந்து ; பரதனும், தம்பி சத்துருக்கனனும், இலக்குமனனும், இரவும் நன் பகலும், ஆட்செய்ய, வடிவு இணை இல்லாச் சங்கு தங்கு முன் கை நங்கை மலர்க் குழலாள் சீதையும், தானும் கோப்புடைய சீரிய சிங்காசனத்து இருந்து ; ஏழ் உலகும் தனிக் கோல் செல்ல வாழ்வித்தருளினர்.

ஸ்ரீ:

திவ்யப் பிரபந்தக் கதைக் குறிப்புக்கள்

1. அவதாரக் கதைகள்

மச்சாவதாரம் (ஒரு மீன் உரு ஆகி)

வானமும், நிலனும், மலைகளும், அலை கடல் குளிப்ப; அம் முது முந்நீர் வளர்ந்து, உம்பர் வள நாடு மூட; உலகம் எலாம் நெடு வெள்ளம் கொண்ட காலம், நிலையிடம் எங்கும் இன்றி, இமையோர் சரண் புக; திருமால், தான் ஒரு மீன் உரு ஆய், நீர் குழம்ப உலாவி, குல வரையின் மீது ஓடி, அகல் வான் உரிஞ்ச, அண்டத்து அப்பால் எழுந்து, இனிது விளையாடி; வியந்து, உயிர் அளித்து, உய்யக் கொண்டான்.

கூர்மாவதாரம் (ஓர் ஆமையும் ஆகி)

மந்தர மலையை மத்தாக நாட்டி; வாசுகியை வன் கயிறாகச் சுற்றி; கடல் மறுகக் கடைந்த காலம், அமரர்கள் தொழுது எழ; அமுதம் எய்தும் அளவும், தடங் கடலுள் கார் ஆமை ஆய், பரு வரை முதுகில் சுழலத் தாங்கி; மேலும், ஆயிரம் தோளால் திசையும், விண்ணும் வெருவ, மா நிலம் குலுங்க, வெள்ளை வெள்ளம் நீலக் கடல் ஆகி முழுதும் குழம்பி அலற, கடல்வண்ணன், தானே அமுது எழ, கடல் கடைந்தான்.

விஞ்சை வானவர், சாரணர், சித்தர், வியந்து துதிசெய்ய; மாயப் பிரான், தானே பெண் உரு ஆய், அவுணரை வஞ்சித்து, உள்ள நோய் தீர் மருந்தாக அமுதினை அமரர்க்கு அருளினான்.

கடைந்த அமுதை விண்ணவர் உண்ண, கிடந்த அமுதாகிய பெருமான் அமுதினில் வந்த மின் ஒத்த பெண் அமுதைத் தன் மார்வில் மன்ன வைத்து உகந்தான்.

அலை கடல் கடைந்த அப்பொழுது, தன் கூறு கொண்ட தழல் நிற வண்ணன் நஞ்சு உண்ணக் கண்டான்.

வராகாவதாரம் (பன்றியும் ஆகி)

ஆழப் பெரும்புனல்-தன்னுள் அழுந்திய நில-மடந்தை பொருட்டு, தரணித் தலைவன், வென்றிசேர் திண்மை விலங்கல் மா மேனி வெள் எயிற்று ஒள் எரித் தறுகண் பன்றி ஆனான்.

'சிலம்பினிடைச் சிறு பரல்போல், பெரிய மேரு திருக்குளம்பில் கணகணப்ப, திரு ஆகாரம் குலுங்க, சிலம்பு முதல் கலன் அணிந்து, ஓர் செங்கல் குன்றம் திகழ்ந்தது' எனத் தோன்றி, இமையவர் வணங்க நின்று, மண் எல்லாம் இடந்து, இலங்கு புவி மடந்தை தனைப் புல்கி, எயிற்றிடை வைத்து, அம் மடவரலை மணந்து உகந்தான்.

நரசிங்காவதாரம் (ஓர் ஆள்-அரி உருவம் ஆகி)

எல்லையிலாத தவமும் வரமும் கருதி, அல்லல் செய்த இரணியனுக்கு அஞ்சி; இமையோர் இறைவனை அடைந்து; 'வணங்கா முடியன் உன்னை இகழ்ந்தான்; மூர்க்கன் செயலால் தளர்ந்தோம்; சரண் தா' என்ன, 'அரண் ஆவோம்; முரண் ஆனவனை முடிப்போம்' என்றான்.

பொன்பெயரோன் பள்ளியில் ஓதி வந்த தன் சிறுவன் இறைவனது ஆயிர நாமம் ஓத, பொறாது, பிள்ளையைச் சீறி வெகுண்டு, தூண் புடைத்தான்.

அளந்திட்ட தூணை அவன் தட்ட, ஆங்கே, வளர்ந்திட்டது ஓர் ஆள்-அரி. அதுகண்ட பொன்னன், வயிறு அழல, வாள் உருவி, எதிர்ந்தான். வாள் எயிற்றுக் கோளரியோ, ஏனோர் அஞ்ச, வெஞ்சமத்து எரி விழித்தது.

அப்பொழுது வானோர், 'எரிந்த பைங் கண், இலங்கு பேழ் வாய் எயிற்றொடு, இது எவ் உரு!' என்று கலங்கி, இரிந்து ஓட; நாத் தழும்ப, நான்முகனும் ஈசனும் முறையால் ஏத்த; அந்தியம்போதில், வந்த ஆள்-அரி; வன் நெஞ்சத்துக் கொலைக் கை அவுணன் உளம் தொட்டு; ஒண் மார்பு-அகலம் குருதி குழம்பி, எழ; கூர் உகிர் வாளால் பிளந்து; அவன் குலமகற்கு இன் அருள் கொடுத்தது.

வாமனவதாரம்—திருவிக்கிரமாவதாரம் (ஒரு குறள் ஆய் ஓங்கி)

தனி முதலான சக்கரப் படைத் தலைவன், விண்ணவர் வேண்ட, அவர் தம் துயர் தீர, மிகு சிறு குறளாய்க் கோலம் கொண்டு, மண்ணிடை வந்து தோன்றினான்.

நீள் நிலா வெண்குடை வாணனார், அவுணர்க்கு நாயகன், மிக்க பெரும் புகழ், நீள் முடி வெந் திறல் மாவலியின் மங்கலம் சேர் பெரு வேள்விக்கு, காணி பேணும் மாணியாய், கண்டார் இரங்க, பொங்கு இலங்கு புரி நூலும் தோலும் தாழச் சென்று, 'மூவடி மண் இன்றே தா' என இரந்தான். 'தக்கது இது அன்று' என்று தானம் விலக்கிய சுக்கிரன் கண்ணைப் பொல்லாக் குறளன் துரும்பால்

கிளறி, வாட்டம் இலா மாவலி வண் கைக்கு, தன் ஆழித் தடக்கை தாழ, நீர் ஏற்றான்.

நீர் ஏற்றதும், அணி வளர் குறளன், அண்டம் ஊடுருவ, நிமிர்ந் தான்.

நின்றதோர் பாதம் நிலம் புதைப்ப, நீண்ட தோள் சென்று திசை அளப்ப, நெடு வான் அளவும் நீண்டான். வான் என்னும் கேடு இலா வான் குடைக்குத் தான் ஓர் மணிக் காம்பு எனத் திகழ்ந்தான்.

பின், இவ் உலகினில் பேர் இருள் நீங்க ; சுடர்த் தோள்கள் பல தழைத்து, எண் திசையும் சூழ ; இரு நிலனும், பெரு விசும்பும், தாரகையின் உலகும், தடவி, அதன் புறமும் விம்ம, வளர்ந்தான்.

பார் அகலம் திருவடியாக, பவனம் (வாயு மண்டலம்) மெய்யாக, திசைகள் எட்டும் தோளாக, அண்ட - முகடு திரு முடியாக, பரந்து எங்கும் காட்சி தந்து, நின்றான். நின்று, சேவடியை நீட்டி, திசை நடுங்க, விண் துளங்க, அம்பரம் ஊடு அறுத்து, உலகு அளந்தான். ஓங்கி, உலகு அளந்த உத்தமனை நோக்கி, மாவலி மகன் நமுசி, ' வஞ்சித்தாய்! என் இது மாயம்? என் அப்பன் அறிந்திலன்; முன்னைய வண்ணமே கொண்டு அளவாய் !' என்ன, அவனை வானில் சுழற்றினான் மின்னும் முடியன்.

கழல்-தலம் ஒன்றே நிலம் முழுது ஆயிற்று. ஒரு கழல் போய், எல்லா விசும்பும் நிழல் தர, நிறைந்தது. இடம் போதாது—என் கொலோ !

' எஞ்சிய ஒன்றும் தருக ' என்று, மாவலியைப் பொன் இலங்கு திண் விலங்கு இட்டு, சிறை வைத்தான். நெடுமையால் உலகு ஏழும் பாங்காய் அளந்து, காணி முற்றும் கொண்ட மாயக் குறளன், ' வாமனன் மண் இது !' என மெய்ப்பித்து, ' மூவுலகு அளந்த சேவடியோய் !' என அமரரும், முனிவரும், தொண்டரும், தொழுது எழ நின்றான்.

பரசுராமாவதாரம் (முனிந்த முனி ஆகி)

வையகம் முழுதும் முறைகெடச் செய்த மற மன்னரை, முனியாய் வந்து, முனிந்து ; மழுவே படையாக, மூ-எழுகால் அம் மன்னர் மணிமுடி பொடி படுத்து ; அரசு களைகட்டு ; அவர்-தம் குருதிப் புனல் குளித்து ; திருக் குலத்தில் இறந்தோர்க்குத் திருத்தி (திருப்தி) செய்து ; வையம் உய்வித்தான்.

செருக்களத்தே மன்னர் எலாம் திறல் அழிந்து, அவியச் செற்ற வேந்தன் (கார்த்த - வீரியன்) பகைத்து எதிர் நிற்க, அவன் சினத் தோள் ஆயிரமும் அழித்து, சிரம் துணித்தான்.

இராமாவதாரம் (சீற்றம் இலாத எம் அரசு ஆகி)

1. திருவவதாரம் : செங்கண் நெடுங் கருமுகிலை, தங்கள் தனி முதல்வனை, தேவர்கள் வேண்டி இரக்க, விண் முழுதும் உய்யக் கொண்ட வீரன், வெங் கதிரோன் குலத்துக்கு ஓர் விளக்காய், உலகு அனைத்தும் விளக்கும் சோதியாய், தசரதனுக்கும் கௌசலைக்கும் மா மகன் ஆனான். தசரதன் பெற்ற மரதக மணித் தடம் தாசரதி எனப் பெயர் பெற்றான்.

2. வேள்வி காத்தல் : மாமுனி (விசுவாமித்திரன்) வேள்வி காக்கச் செல்லும் நெறியில் வந்து எதிர்ந்தாள் வல் அரக்கர் குலப் பாவை, திண் திறலாள் தாடகை. அவள் உரம் உருவ, குருதி பொழிய, அடு சிலையில் சுடு சரம் துரந்து, அந் நீர்மையிலாளைத் தென் உலகம் ஏற்றுவித்தான்.

இடையூறு விளைத்த வல் அரக்கர் உயிர் உண்டு, மா முனி வேள்வி காத்து, அவபிரதம் ஆட்டினான்.

3. வில் முறித்தல் : தக்க பெரும் புகழ்ச் சனகன் மிக்க பெருஞ் சபை நடுவே, 'நல் நேரிழையோடு உடனுய வில்' என்ன, செவ் வரி நல் கரு நெடுங் கண் சீதைக்காகி, சின விடையோன் (சிவபெருமான்) சிலை இறுத்து, சனகன் திரு மருகன் ஆயினான்.

4. பரசுராமனது செருக்கு அழித்தல் : 'என் வில் வலி கண்டு போ' என்று எதிர் வந்த பரசுராமனது வில்லொடு, தவத்தையும் முற்றும் வாங்கி, தனது ஆக்கினான்.

5. கான் புகுதல் : இளமையில் இராமன், விளையாட்டாக, கூனி கூன் சிதைய, கை வில்லால் உண்டை தெறித்தான். அது குறித்து வன்மம் கொண்டிருந்த கொடுங் கூனியின் கடுஞ் சொல் கேட்டு, கலங்கிய மனத்துச் சிறிய தாய் கைகேயி, கூற்றுத் தாய் ஆகி, தசரதனிடம் வரம் வேண்ட, மயங்கிய மனத்து மன்னவனும் மறுது ஒழிய, அரி-அணை ஏற இருந்தவனை, 'நெடுங் கானம் படரப் போ' என்றாள்.

இராமனும் சிற்றவை பணியால், முடி துறந்து; கரியும், பரியும், பார் ஆளும் படர் செல்வமும், பரதநம்பிக்கு அருளி; பூவை போலும் மெல்லியலும், இளங்கோவும், பின் தொடர; தொல் கானம் நோக்கி எழுந்தான்.

பெற்ற தாய் பின் தொடர்ந்து, 'எம் பிரான்' என்று அழ; சுற்றத்தாரொடு நகரம் எலாம் தொடர்ந்து புலம்ப; இராமன் அவர்கள் வருத்தமும், தன் அருமையும், பாராது; தந்தையின்

மெய்யுரை காக்க, வள நகர் துறந்து, கொடிய கான் தொடுத்த நெறி போனான்.

6. தசரதன் புலம்பல் : தனயன் கான் புக, தசரதன், 'எம் இராமாவோ ! நன் மகனே ! கைகேசி சொல் கேட்டு, நான் உன்னை நன்றாக நானிலத்தை ஆள்வித்தேன் ! என் வெவ்வுரை கேட்டு எவ்வாறு நடந்தனை ? என் செய்கேன் ? வல் வினையேன் மனம் உருக்கும் மகனே! மெல் அணை மேல் இனிது துயின்ற நீ கல் அணை மேல் கண் துயிலக் கற்றனையோ !' என்றெல்லாம் புலம்பலுற்றான்.

நன் மகன் மீதும், மெய்யுரை மீதும், ஒருங்கே காதல் கொண்டு, 'வா' என்றும், 'போ' என்றும், 'இன்னம் வந்து ஒருகால் கண்டு போ' என்றும் முரண்படப் புலம்பினான்.

கானக வாழ்வின் இன்னல்களைத் தன் மனக் கண் முன் கண்டு, 'அரும் பாவி சொல் கேட்ட பெரும் பாவியேன் மகனே ! போகின்றாய் ; அந்தோ ! என் செய்கேன் ?' என்று கலங்குவான்.

'இது தகவோ ? சுமந்திரனே ! வசிட்டனே ! சொல்லீர் நீரே' என்பான்.

'மகனையும் மருகியையும் வனத்தில் போக்கி, என்னையும் வானில் போக்கி, நின் மகன்மேல் பழி விளைத்திட்டு, என் பெற்றாய், கைகேசி ! நீயும் இரு நிலத்தில் இனிதாக இருக்கின்றாயே !' என்பான்.

இறுதியில், கானகம் சென்ற இராமனை நினைத்து, 'நீ துறந்த வள நகரைத் துறந்து, நானும் வானகமே மிக விரும்பிப் போகின்றேன், மனு குலத்தார்-தங்கள் கோவே !' என்று கதறினான்.

7. குகனோடு தோழமை : இராமன் கங்கைக் கரையில் குகனைக் கண்டு, 'ஏழை, ஏதலன், கீழ்-மகன்' என்று பாராது, இரங்கி, இன் அருள் புரிந்தான். 'சீதை உன் தோழி' என்றும், 'உன் தம்பியாகிய இலக்குமணன் என் தம்பி' என்றும், 'தோழன் நீ' என்றும் கூறி, அக் கூர் அணிந்த வேல் வலவனுடன் சீர் அணிந்த தோழமை கொண்டான்.

8. பரதனுக்குப் பாதுகை ஈந்தது : சித்திரகூடத்து இருந்த போது, பரதநம்பி வந்து அடிபணிந்தான். அந் நம்பிக்குத் தன்னுடைய அடிநிலையும் (பாதுகையும்) அரசும் ஈந்தான்.

9. விராதன் வதம் : வரை நெடுந் தோளும், படை ஆர் திண் கையும், கொடிய கண்களும் ஆய் வந்த விராதன் மடிய வில் வளைத்தான்.

10. அகத்திய முனிவரிடம் வில் வாங்கியது : வண் தமிழ் மா முனி கொடுத்த வரி வில் வாங்கிக் கொண்டான்.

11. சூர்ப்பணகையின் அங்க பங்கம் : மான் அமரும் மென் நோக்கி வைதேவி இன் துணை ஆக, கான் அமரும் கல் அதர் போய், காடு உறைந்த காலத்து ; தென் இலங்கையாட்டி, தீ அரக்கர் குலப் பாவை, மன்னன் இராவணன் நல் தங்கை, மலை போல் உருவினள், வாள் எயிறு மின் இலக ; 'நான் சீதைக்கு நேர் ஆவேன் !' என்று வந்தாள். அக் கரு மகள் பிலம் கொள் வாய் திறந்து, அடுத்து, ஆர்த்து எழுந்தாள். இவ்வாறு தன்மேல் எதிர்ந்து வரும் அவளது வெம் சினக் கொடி மூக்கும், காது இரண்டும், கூர் ஆர்ந்த வாளினால் அரிந்து, அவள் தன் பில வாயால் அலறிக் கதறி, ஓடி, தலையில் அம் கை வைத்து, மலை இலங்கை புகச் செய்தான்.

12. கரன் ஆதியர் வதம் : தண்டக-வனத்தில் தன்னை எதிர்த்து வந்த கரன் சிரம் துணித்து, தூடணன் ஆதியர் உயிரையும் வாங்கினான். தன் விற்கை வீரம் தோன்ற, கவந்தனையும் மாய்த்தான்.

13. மாய மானை மாய்த்தது: செம் பொன் நீள் முடி இராவணக் கொடியோன், சித்தம் சீதைபால் வைத்து, மாரீசனை நோக்கி, 'நீ உருவம் கரந்து, அலை மலி வேல் கண்ணாளை அகல்விப்பதற்கு, இலை மலி பள்ளி (பர்ணசாலை) எய்துவாய்' என்றான். அவனும் பொன் ஒத்த மான் ஆகிப் புகுந்து, இனிது விளையாட, இராமன்,சீதையின் அன்பின் வழிநின்று, சிலை பிடித்து, மான் பிடிக்கச் சென்றான். புள்ளி மான் துள்ளி ஓட, முனிந்து தொடர்ந்து, மாச் சிலை வளைத்து, வாளி தொடுத்து, அம் மாய மான் மாய, வீழ்த்தினான்.

அதன் பின், இலக்குமணனும் சீதை-காவலை விட்டுப் பிரியவே, இராமன் சீதையைப் பிரிய நேர்ந்தது. அன்று அரக்கர் கோமானும் தகவிலி, தண்டகாரணியம் புகுந்து, தையலைக் கவர்ந்து சென்று, கடி காவில் சிறை வைத்தான்.

14. சடாயுவுக்கு வைகுந்தம் அருளுதல் : வைதேகி பிரிந்த பின், இராமன் தளர்வு எய்தி, (இராவணனால் தாக்குண்ட) சடாயுவை வைகுந்தம் ஏறச் செய்தான்.

15. சுக்கிரீவன் தோழமை : வனம் மருவு கவி அரசன் (சுக்கிரீவன்) மீது காதல் கொண்டு (தோழமை கொண்டு), கணை ஒன்றால் மராமரம் ஏழும் துளைபடச் செய்தான்.

பைங் கண் விறல் செம் முகத்து வானரக் கோன் வாலி உருத்து எழ, அவன் தன் மதம் அழிய, மார்பு துளைபட, சரம் துரந்து, இளையவனுக்கு அரசு அருளி, வானரக் கோன் ஆக்கினான்.

16. அனுமன் சீதையைத் தேடல்: அயோத்தியர் கோன் (இராமன்) வானரக் கோனுடன் (சுக்கிரீவனுடன்) இருந்து, சீதையைத் தேடுவதற்காக, அடையாளங்கள் மொழிந்து, அனுமனைத் தென் திசைக்கண் அனுப்பிவைத்தான்.

அனுமன் கடல் கடந்து ஏறி, கடி மதில் இலங்கை மேவும் கடிகாவில் (அசோகவனத்தில்) சிறை இருந்த கிளி மொழியாளைக்கண்டான். கண்டு, தான் அறிந்துவந்த அடையாளங்களை விவரித்து உரைத்தான்.

எல்லியம் போதில் இனிது இருக்கும்போது, சீதை மல்லிகை மா மாலை கொண்டு இராமனைக் கட்டி வைத்ததையும், சித்திரகூடத்து இருக்கும்போது, சிறு காக்கை சீதைபால் தவறு இழைக்க, இராமன் அத்திரம் (அஸ்திரம்) கொண்டு எறிய, அக் காகம், அனைத்து உலகும் திரிந்து ஓடி, புகலிடம் இன்றி, மீண்டு வந்து, 'வித்தகனே! இராமா! ஓ! நின் அபயம்' என்று முறையிடவே, அந்த அத்திரம் கண்ணை அறுத்ததுடன் அமையுமாறு, அருளப் பெற்றதையும், சிறப்பாகக் குறிப்பிட்டான்.

இவ்வாறு மொழிந்து, 'ஈது அவன் கை மோதிரமே' என்றான். சீதையும் வில் இறுத்தான் மோதிரம் கண்டு, 'அனுமான்! அடையாளம் ஒக்கும்' என்று, அம் மோதிரத்தை உச்சிமேல் வைத்து உகந்தனள்.

17. அனுமன் தூது: அனுமன் தூது மொழிந்ததும், அரக்கன், 'தூது வந்த குரங்கே! உங்கள் தோன்றலின் தேவியை விட்டுக் கொடேன்' என்றான்.

18. இலங்கை எரி ஊட்டுதல்: பின்னர் அனுமன் இலங்கையர் கோன் சினம் அடங்க, செல்வம் மாள, கடி கா இறுத்து, சுற்றம் கொன்று, நகரும் ஈடு அழிய, ஒள் எரி மண்டி உண்ணச் செய்தான்.

இவ்வாறு இலங்கையை வேவித்து, அனுமன் மீண்டு வந்து இராமன் அடி-இணை பணிந்தான்.

19. அணை கட்டுதல்: பரந்த கடலை இரந்து நின்றும், வழி பெறாது, அந்தக் கைமேல் அலை எறிந்து மோதக் கண்டு, அப் படு கடல் கலங்கி வெந்துபோக, சிலை வளைத்து, சுடு சரம் (அழல் அம்பு) தொடுத்தான்.

கடல் வழிபட்டு வழி விட, தான் ஆள் உகந்த குரங்கினத்தால் அதை நெருக்கி அடைக்க ஏவினான்.

குரங்குகள் தலையால் மலைகளைத் தாங்கிச் சென்று, அம் மலைகளும் மரங்களும் புகப் பெய்து, துவலை நிமிர்ந்து வான் அணவ, கடலைத் தூர்த்து, அணை கட்டின.

குரங்குகள் மலையைத் தூக்கக் கண்ட அணில் நீரில் குளித்து, மணலில் புரண்டு, ஓடிவந்து உதிர்த்து, கள்ளங் கவடு அற்ற உள்ளத்துடன், தானும் அணை கட்ட உதவியது. அணை கட்டி முடிந்ததும், இராமன் குரக்கினப் படையொடு குரை கடலின் மீது போய், ஆழி சூழ் இலங்கை என்றும், மலை மீது இயன்ற மதிள் இலங்கை என்றும், பகலவன் மீதியங்காத இலங்கை என்றும், பேர்பெற்ற பேரூரை அடைந்தான்.

20. போர் : வையம் எல்லாம் உடன் வணங்க, வணங்கா மன்னன் ஆகி நின்றவனை நோக்கி, 'நங்கை நம் அரக்கர் குடிக்கு நஞ்சு!" என்று அவன் தம்பியே (விபீஷணன்) சொன்னான். கனி வாய்த் திருவினைப் பிரித்த கடுவிசை அரக்கனோ எரிவிழித்து, ' தரணியாளன் என்று மானிடன் எழுந்தான்; அது கண்டு தரித்திருப்பானோ அரக்கர் கோன்?' என்று போருக்கு எழுந்தான். ஆனை, புரவி, தேர், காலாள், அணிகொண்ட சேனைத் தொகையுடன் வந்து, பொருதான்.

இராமனோ, கானில் திரியும் கரடியும், குரங்கும், முசுவும் படைத் துணையாக, அடல் அரக்கர் மானம் அழிய, எதிர்த்தான். (இலக்குமணனது) அம்பின் வாய்ப்பட்டு, ஆற்றகில்லாது, இந்திரசித்து அழிந்தான்.

கும்பகர்ணன் கூற்றத்தின் வாய் வீழ்ந்தான். கும்பனோடு, நிகும்பனும் பட்டான்.

காற்றிடைப் பூளை போல், அரக்கர் சேனை சிதறுண்டது. 'ஆஆ' என்று இரங்காது உலகத்தை அலைக்கும் அசுரர் வாழ்நாள் மேல் தீ வாய் அம்புகள் மழைபோல் பொழிய, இலங்கை மீண்டும் எரி உண்டது.

வானுளாரையும் வலிமையால் நலிந்த இலங்கையார் கோனின் பரு முடிகளை, அவ் வானவர் உகப்ப, பனங்கனி போல் உதிரச் செய்தன இராமனது சூரியனை ஒத்த சுடு சரங்கள்.

அம் மணி முடி ஒருபதும் செருக்களத்தே புரளக் கண்ட அரக்கர்கள் அஞ்சி, ' கூற்றம் மானிடமாய் வந்து தோன்றியது; இரக்கம் இன்றி எங்கோன் செய்த தீமை எமக்கு எய்திற்று' என்று சொல்லி, ' குரக்கு-நாயகர்காள் ! இளங்கோவே ! கோல வல் வில் இராம பிரானே ! நம்பி அநுமா ! சுக்கிரீவா ! அங்கதனே ! நளனே !' என்று கூவி, ' எம்மைக் கொல்ல வேண்டாம் ' என்று முறையிட்டுக் கொண்டனர். ' நீலன் வாழ்க, சுடேணன் வாழ்க, அங்கதன் வாழ்க, அனுமன் வாழ்க' என்று வாழ்த்தி, இராமனது பெரு வெற்றி பேசி, கூத்தாடி, உயிர் தப்பினர்.

21. துயர் தீர்த்தல்: ஏழையை, இலங்கைக்கு இறையை, வாழத் தெரியா மதிஇலியை, புன்மையாளனை, வென்ற வென்றியாளன், திண் தோள் மா மணி வண்ணன், வேரி வார் பொழில் மா மயிலை, சீதை என்பதோர் தெய்வத்தை, சிறை விடுவித்து, வானவர் ஆகுலம் தீர்த்தருளினன்.

22. விபீடணனுக்கு முடி சூட்டுதல்: இராவணன் தம்பி நல்லான், விபீடணற்கு, 'என் நாமம் இலங்கும் அளவும் நீயே இலங்கை ஆள்வாய்' என்று அரசு அளித்தான்.

23. உடன் உண்ணல்: அனுமனை மர்க்கடம், விலங்கு, என்று கருதாது, காதல்-ஆதரம் கடலினும் பெருக, 'நீ செய் தகவினுக்குக் கைம்மாறு இல்லை; உன்னோடு உடன் உண்பன் நான்!' என்று, மாருதியுடன் அமர்ந்து உண்டான்.

24. அயோத்தியில் அரசு புரிதல்: திருமகளோடு அம்பொன் நெடு மணி மாட அயோத்தி எய்திய எம்பெருமான், உலகு உய்ய, அரசு எய்தினன்.

அகத்தியன் வாய் மொழியால், தான் முன் கொன்ற அரக்கர் கோனின் பழம் பெருங் கதை கேட்டான். மிதிலைச் செல்வியின் திரு வயிறு வாய்த்த மக்கள் வாயிலாக, தன் சரிதையைக் கேட்டருளினன்.

செறி தவச் சம்புகனைச் சென்று கொன்று, செழு மறையோன் உயிர் மீட்டான். இலவணன் என்பவனைத் தம்பியால் வான் ஏற்றுவித்தான். முனிவன் வேண்ட, இலக்குமணனைப் பிரிந்தான்.

25. சோதி புகுதல்: புல், எறும்பு, தொடக்கமான சரா-சரங்களை எல்லாம் வைகுந்தத்து ஏற்றி, தானும் மணி நெடுந் தோள் நான்கும் இலங்க, விண் முழுதும் எதிர்வர, தன் சோதி புகுந்து, அமரர் அரி வுருக, இனிது வீற்றிருந்தான்.

'எங்கள் கோமான்!' என்று தொண்டர்கள், இன்னமுதும் மதியாது எம்பெருமான் சரிதையைச் செவியாலும் கண்ணாலும் பருகி இன்புறுவர்.

பலராமாவதாரம்

இராமனாகத் தோன்றிய பின், கண்ணனாகத் தோன்றுவதற்கு முன், கரு மா முகில் வண்ணன் கண்ணனுக்கு மூத்தோனாக, வெண் சங்கின் வண்ணமான மா மேனியுடன் தோன்றினன். ஒற்றைக் குழையும் நாஞ்சிலும் தரித்தான்.

இவனும் கண்ணன்போல், ஆயர்பாடியில் வளர்ந்தான். ஆனால், கண்ணன்போல் களவு முதலியன செய்தறியான் என்பர் ஆய்ச்சியர்.

ஸ்ரீ கிருஷ்ணவதாரம்

1. கண்ணன் பிறப்பு : திருமடந்தை, மண் மடந்தை, இருபாலும் திகழ, சுடர் ஆழி வெண் சங்கு இருபால் பொலிந்து தோன்ற, ஏழ் உலகும் தனிக் கோல் செல்ல, தன்னுடைச் சோதியில் வீற்றிருந்த பரம்பொருளை விண்ணோர்கள் நல் நீராட்டி, சூட்டு நன் மாலைகள் தூயன ஏந்தி, தூபம் தரா நிற்கவே, அவன் அங்கு ஒரு மாயையினால், நிலமங்கை துயர் தீர, மண் உலகில் மனிசர் உய்ய, கண்ணன் அவதரித்தருளினான். சாது சனத்தை நலியும் கஞ்சனைச் சாதிப்பதற்கு ஆதி அம் சோதி உருவை அங்கு வைத்து, இங்குப் பிறந்தான்.

மல்லை மூதூர் வட மதுரையில், 'என்ன நோன்பு நோற்றாள்-கொலோ இவனைப் பெற்ற வயிறுடையாள் ?' என்னும் வார்த்தை எய்துவிக்க, 'மத்தக் களிற்று வசுதேவர் தம்முடைச் சித்தம் பிரியாத தேவகி-தன் வயிற்றில்', மக்கள் அறுவரைக் கல்லிடை மோத இழந்த அத் தாயைக் குடல் விளக்கம் செய்ய, தந்தை காலில் பெரு விலங்கு தாள் அவிழ, கண்ணன் பிறந்தான். கஞ்சன் வலை வைத்த அன்று, கார் இருளில், சிறையில், அத்தத்தின் பத்தாம் நாள் (திருவோணம்) நிகழ்ந்தது இப் பிறப்பு.

2. ஆய்ப்பாடி அடைதல் : ஓர் இரவில் ஒருத்தி மகனாய்ப் பிறந்தவன், அதே இரவில் ஒருத்தி மகனாய் ஒளித்து வளரலுற்றான். தேவகி சிங்கம் தெய்வ-நங்கை யசோதைக்குப் பேதைக் குழவியாய், அறம் செய்யும் நந்தகோபன்-தன் இன் உயிர்ச் சிறுவனாய், பல தேவற்கு ஓர் கீழ்க் கன்றாய், ஆயர் பாடிக்கு அணி விளக்காய், ஆயர்கள் நாயகனாய், கொம்பனார்க்கு எல்லாம் கொழுந்தாய், திகழ்ந்தான்.

பெற்ற அன்னை புலம்ப, வளர்த்த அன்னை தொல்லை இன்பத்து இறுதி கண்டாள்.

3. மங்களம் கொண்டாடுதல் : பாடுவாரும், ஆடுவாரும், ஓடுவாரும், விழுவாரும், 'நம்பிரான் எங்கு உற்றான் ?' என்று நாடுவாரும் ஆயிற்று ஆய்ப்பாடி.

எண்ணெய், சுண்ணம், எதிரெதிர் தூவுவார் ; நறு நெய், பால், தயிர், நன்றாகத் தூவுவார் ; உறியை முற்றத்து உருட்டி நின்று, ஆடுவார்—அறிவழிந்து, ஆனந்தம் ஆயிற்று ஆய்ப்பாடி.

'ஆண் ஒப்பார் இவன் நேர் இல்லை' என்பார் ; 'ஓணத்தான் உலகு ஆளும்' என்பார்.

4. பிள்ளை வாயுள் வையம் கண்டது : குழந்தைக் கண்ணனைக் கையும் காலும் நிமிர்த்தி, பைய நீராட்டினாள் யசோதை. அப்பொழுது, பசுஞ் சிறு மஞ்சளால் நாக்கு வழிக்க, குழந்தை திறந்த வாய்க்குள் உலகம் ஏழும் கண்டாள் ஏர் ஆர்ந்த கண்ணி யசோதை.

இந்த நிகழ்ச்சியை மறக்க முடியவில்லை. காது குத்தும்போது, ‘ குழந்தாய் ! நீ விண்ணெல்லாம் கேட்க அழுதிட்டாய் ; அந்த உன் வாயில் மண்ணெல்லாம் கண்டேன் ; அஞ்சினேன் ’ என்றாள்.

5. சீராட்டி வளர்த்தல் : பத்து நாளும் கடந்த இரண்டாம் நாள், ஆயர்கள் சய மரம் கோடித்து, குழந்தையைப் பிரசவ அறையில் நின்று வெளிக் கொணரும் சடங்காகிய உத்தானம் கொண்டாடி, உகந்தனர்.

தூளித் தொட்டிலில் யசோதை குழந்தையைக் கிடத்துவாள் ; எடுத்துக் கொள்வாள் ; அணைத்துக் கொள்வாள் ; தன் தோழியை நோக்கி,

> கிடக்கில், தொட்டில் கிழிய உதைத்திடும் ;
> எடுத்துக் கொள்ளில், மருங்கை இறுத்திடும் ;
> ஒடுக்கிப் புல்கில், உதரத்தே பாய்ந்திடும் ;
> மிடுக்கிலாமையால், நான் மெலிந்தேன், நங்காய் !

என்று கூறுவாள்.

மற்ற ஆய்ச்சியர்களுக்கு, பாதாதி-கேசமாகக் குழந்தையின் அழகைக் காட்டுவாள். தாலாட்டுவாள் ; பாலூட்டுவாள் ; அம்புலி காட்டுவாள்.

6. பூதனை வதம் : தீ மனத்தான் கஞ்சனது வஞ்சனையால், தாயும் பிறரும் அறியாத நள் இருளில், புள் உரு ஆகி வந்த பொல்லா வடிவுடைப் பேய்ச்சி பூதனை, பெற்ற தாய்போல் வந்து, குழந்தைக் கண்ணனை எடுத்து, ஒக்கலில் வைத்து, ‘ பால் உண் ’ என்று நச்சு முலை உண்ணக் கொடுத்தாள். குழந்தையும் முலை உண்பான் போலவே, முனிந்து, உயிர் உண்டான். பேய்மகள் அலறி, மண் சேர்ந்தாள்.

7. சகடம் உதைத்தல் : யசோதை யமுனை நீராடப் போன பொழுது, ஆணிப் பொன்னால் செய்த வண்ணச் சிறு தொட்டிலில் உறங்குவான்போலே கிடந்த பிள்ளை, மலைபோல் உருண்டு வந்த சகடத்தைத் தாள் நிமிர்த்து உதைக்க, அச் சகடம் தளர்ந்து முறிந்தது. கஞ்சன் அனுப்பிய கள்ளச் சகடாசுரன் உடல் பிளந்து, மடிந்தான்.

இது, 'நாலைந்து திங்கள் அளவிலே' நிகழ்ந்தது என்று பெரியாழ்வாரும், 'நம்பி பிறந்த எழு திங்களில்' என்று திருமங்கை மன்னனும் கூறுவர்.

8. குழந்தையின் லீலைகள் : தன் முகத்துச் சுட்டி தூங்கத் தூங்க, தவழ்ந்து போய், பொன் முகக் கிண்கிணி ஆர்ப்ப, புழுதி அளைவான்.

கோல நறும் பவளச் செந் துவர் வாயினிடைக் கோமள வெள்ளி முளைபோல் சில பல் இலக, கண-கண சிரிப்பான் ; முன் வந்து முத்தம் தருவான் ; முத்து அனைய முறுவல் செய்வான்.

அழகிய வாயில் அமுத ஊறல் தெளிவுற, மழலை முற்றாத இளஞ் சொல்லால், 'அம்புலீ! சந்திரா ! மாமதீ ! விரைந்து ஓடி வா' என்று அழைப்பான். தாயின் முதுகைக் கட்டிக் கொள்வான். கிண்கிணிகள் ஒலிப்ப ஓடுவான் ; ஓடிஓடிப் போய்விடுவான்.

பாடிப் பாடி வருவான் ; அசைந்து அசைந்து கூத்தாடுவான். பூங் குழலார்கள் எண்ணத்துள் என்றும் தித்திக்க இருந்து, லீலைகள் பல புரிவான்.

9. வெண்ணெய் உண்டது : கண்ணன் மெள்ள நடந்தும், துள்ளி விளையாடிச் சென்றும், ஆய்ச்சியர் மனைகள் தோறும் திரிந்து, தித்தித்த பாலும், தடாவினில் வெள்ளி மலை இருந்தால் ஒத்த வெண்ணெயும், மெத்தத் திரு வயிறு ஆர, விழுங்குவான்.

தோய்த்த தயிரும், நறு நெய்யும், உளம் குளிர, அமுது செய் வான். எட்டாத உறிகளில் உள்ள வெண்ணெய், பால், முதலிய வற்றை எட்டி எடுக்க, பொத்த உரலைக் கவிழ்த்து, அதன்மேல் ஏறு வான். ஒத்த தோழர்களுக்கும் வாரி வழங்குவான்.

'வைகலும் வெண்ணெய் கைகலந்து உண்டான்' என்று ஆய்ச் சியர் பேசினர், ஏசினர், நகைத்தனர்.

'வெண்ணெயே அன்று, இருந்த பாலும் பதின் குடம் கண்டி லேன், நந்தன் மகன் அல்லால் மற்று வந்தார் ஆரும் இல்லை' என்று ஆய்ச்சி ஒருத்தி யசோதையை அணுகி முறையிட்டாள்.

ஆய்ச்சியர் அழைப்ப, கண்ணன் வெண்ணெய் உண்டதும் உண்டு. ஒளித்தும், நாணாது, வெண்ணெய் உண்பான். உறி ஆர்ந்த நறு வெண்ணெய் ஒளியால் சென்று, அங்கு உண்பான். மிடறு மெழுமெழுத்தோட, வெண்ணெய் விழுங்குவான். வெறுங் கலத்தை உடைய விட்டு, ஓசை கேட்பான்.

அருகு இருந்த மோர்க் குடம் உருட்டி, ஓர் ஆய்ச்சி கண்டு கொண்டதும், ஓராதவன்போல், முன் இருந்த இடத்திலே கிடந்தான்.

வேல் கண் மடவாள் போந்தனையும் பொய் உறக்கம் உறங்கி, பிறகு அறிவுற்று, தோள் அளவும் கைந் நீட்டி, முழுதும் வெண்ணெய் அளைந்து உண்பான்.

வெண் தயிர் தோய்ந்த செவ்வாய் கண்டு, தாய் எடுத்த சிறு கோலுக்கு உளைந்து ஓடி, தயிர் உண்ட வாய் துடைத்தான்.

எழில் கொள் தாம்பு கொண்டு தாய் அடிப்பது போல் நிற்க, கண்ணன் அஞ்சி நோக்கினன்; தொழுதான்; அணிகொள் செஞ் சிறு வாய் நெளித்து அழுதான். இது கண்ட யசோதை தொல்லை இன்பத்து இறுதி கண்டாள்.

10. உரலில் கட்டுண்ணல் : விரலோடு வாய் தோய்ந்த வெண்ணெய் கண்டு, ஆய்ச்சி (யசோதை) அன்புற்று நோக்கி, தன் மோதிரக் கையால் கையைப் பிடித்து, ஊரார் எல்லாரும் காண, கண்ணி நுண் சிறுத் தாம்பினல், 'நீர் ஆம் இது செய்தீர்!' என்று உரலோடு கட்டினள்.

மொத்துண்டு, அப் பெரு மா உரலில் பிணிப்புண்டிருந்து, குரல் ஓவாது, விம்மி விம்மி, ஏங்கி, அழுதான் கண்ணன்.

உரலினேடு இணைந்திருந்து ஏங்கிய அவ் எளிய வடிவு, உதரத்திலே கட்டப் பெற்றதால் தழும்பிருந்த தாமோதரன் ஆயிற்று.

11. மருதம் முறித்தது : மைத்த கருங் குஞ்சி மைந்தன், ஆய்ச்சி உரலோடும் ஆர்க்கப் போய், ஓடி, ஒருங்கு ஒத்த இணை மருதூடு நடந்து, அம் மரம் இரண்டும் சாய்த்து, பொய்ம் மாய மருதான அசுரரை, எண் திசையோரும் வணங்க, மாய்த்தருளினன்.

12. இளமை விளையாட்டு : ஆற்றில் சிறுமிகள் விளையாடிக் கொண்டிருக்க, அவர்களைச் சேற்றல் எறிந்து, வளையும் துகிலும் கைக்கொண்டு, காற்றினும் கடியனய் ஓடி, அகம் புகுந்தான். அது குறித்து அவர்கள் கேட்க, மாற்றமும் தாரான்.

பூங்குழலார் துகில் கைக்கொண்டு, மரத்தில் ஏறுவான் : வேண்டவும் தாரான்.

மாளிகை மச்சில் ஏறி, மாதர்கள் இடம் புகுந்து, கச்சொடு, பட்டைக் கிழித்து, துகிலவை கீறினன்.

கன்றுகள் ஓட, செவியில் கட்டெறும்பு பிடித்து இடுவான். கன்றின் வாலில் ஓலை கட்டி விடுவான். எண்ணெய்க் குடத்தை உருட்டுவான்; இளம் பிள்ளையைக் கிள்ளி எழுப்பி, கண்ணைப் புரட்டி விழிப்பான்.

சிறுமியர் முற்றும் முதுகு நோவ இருந்து, சிறு சுளகுகொண்டு வண்டல் நுண் மணலும், வெள்ளை நுண் மணலும் தெள்ளி, வளைக்

கைகளால் விசித்திரப் பட வீதிவாய் இழைத்த சிற்றில்களை, இரக்கம் இன்றி, சிதைப்பான். புன்முறுவல் செய்து, சிற்றிலோடு சிந்தையும் சிதைப்பான்.

பாலைக் கறந்து, அடுப்பேற வைத்து, மகள் இருப்ப, ஆய்ச்சி ஒருத்தி மேலையகத்தே நெருப்பு வேண்டிச் சென்று, இறைப் பொழுது அங்கே பேசிநின்றாள். அச் சமயம் பார்த்து, கண்ணன் அப் பாலைச் சாய்த்துப் பருகினான்.

திருவோண விழாவில் செந்நெல் அரிசி, சிறுபருப்பு, அக்காரம் (சர்க்கரை), நறுநெய், பாலால் அட்ட அடிசிலை எல்லாம் விழுங்கி, 'இன்னம் உகப்பன் நான்!' என்றான். கன்னல் இலட்டுவத்தோடு, சீடை, எள்ளுண்டை, கலத்தில் இட்டுத் தன் அகம் என்று வைத்துப் போக, இவன் புகுந்து, அவற்றை உண்டு, இன்னும் அங்கு உறியை நோக்கி, வெண்ணெயும் சோதித்தான்.

ஓர் இல்லம் புகுந்து, சிறுமியைக் கூவி, கை-வளை கழற்றி, கொல்லையில் நின்றும் நல்ல நாவற் பழங்கள் கொணர்ந்து விற்ற ஒருத்திக்கு அவ் வளை கொடுத்து, பழங்கள் கொண்டு, 'நான் அல்லேன்' என்று சிரித்தான்.

13. ஆநிரை மேய்த்தல்: வேலிக்கோல் வெட்டி, விளையாடு வில் ஏற்றி, பீலித் தழை பிணைத்து, குடையும் செருப்பும் இலாதே, ஆநிரை மேய்க்கப் போய், கரிய திருமேனி வாடக் கானகம் எல்லாம் அலைந்து திரிந்தான்.

மாதர் வந்து, அலர் தூற்றி, மனைகள் தோறும் தீமைசெய்து திரியாமே, அன்னை கண்ணனைக் கன்றின்பின் போக்கிய பின், மனம் கரைந்து 'பொன்அடி நோவ, என் இளஞ் சிங்கத்தைக் கானில் போக்கினேன், எல்லே பாவமே!' என்று இரங்கினாள்.

'சிற்றாடையும் சிறு பத்திரமும் (கத்தியும்) கட்டிலின் மேல் வைத்து, செங்கமல அடிகள் வெதும்ப, கஞ்சன் மனத்துக்கு உகப்பனவே செய்தாய்!' என்று புலம்பினாள்.

காலிக்குப் பின்னே கண்ணன் வருகின்ற கோலம் கண்டு, ஆய்ச்சி, 'கண்ணா! உன் கண்கள் சிவந்தாய்; என்னின் மனம் வலியாள் ஒரு பெண் இல்லை: நாளைத் தொட்டுக் கன்றின்பின் போகேல்' என்றாள்.

கண்ணன் வழக்கம்போல் கறவைகள் பின் சென்று, கானம் சேர்ந்து, இட்டமான பசுக்களை இனிது மறித்து நீரூட்டினான். கணங்களோடு மின்மேகம் கலந்தால்போல, வனமாலை மினுங்க நின்று, விளையாடுவான். அக் காலங்களில் வேர்த்து, பசித்து, வயிறு அசைந்து, வேண்டும் அடிசில் உண்பான்.

சிந்துரப் பொடி கொண்டு சென்னி அப்பி, திருநாமம் இட்டு, முல்லை நல் நறு மலர், வேங்கை மலர் அணிந்து, சுரிகையும் வில்லும் செண்டுகோலும் மேலாடையும் தோழன்மார் கொண்டு ஓட, ஒரு கையால் ஒருவன் தோளை ஊன்றி, ஒரு கையால் வளைகோல் வீசி, பல்லாயர் குழாம் நடுவே எல்லியம்போதில் காலிப் பின் வரும் கண்ணனைக் கண்டு, கன்னியர் காமுறுவாராயினர்.

குழல்களும் கீதமும் ஆகி எங்கும், கோவிந்தன் வருகின்ற கூட்டம் கண்டு, ' மழைகொலோ வருகின்றது ' என்று சொல்லி, மங்கைமார் சாலக வாசல் பற்றி, நுழைவனர் நிற்பனராகி, உள்ளம் விட்டு ஊண் மறந்தனர்.

14. குழலிசை பாடியது : குழல் இருண்டு சுருண்டு ஏறிய குஞ்சிக் கோவிந்தன் தன் கோமள வாயில் குழலை வைத்துக் கொண்டு,ஊதுவான். இடக் கன்னத்தை இடத் தோளொடு சாய்த்து, இரு கை கூட, புருவம் நெரிந்து ஏற, குட வயிறு பட, வாய் கடை கூட, குழல் ஊதுவான்.

அந்தத் தூய வாயில் குழலோசை கேட்டு, கோவலர் சிறுமியர் குதுகலிப்ப காவலும் கடந்து, கயிறு மாலை ஆகி வந்து, சூழ்ந்து கொண்டனர். மடமயில்களொடு மான்பிணைபோலே அம் மங்கைமார்கள் மலர்க் கூந்தல் அவிழ, உடை நெகிழ, ஓர் கையால் பற்றி, ஒல்கி, ஓடு அரிக்கண் ஓட, நின்றனர்.

வானிளம்படியர் வந்து வந்து ஈண்டி, மனம் உருகி, மலர்க் கண்கள் பனிப்ப, சென்னி சேர்த்து நின்றனர். மேனகையொடு, திலோத்தமை, அரம்பை, ஊர்வசி முதலோர் ஆடல் பாடல் மறந்து, வாய்திறப்பு இன்றி, வெள்கி மயங்கினர். தும்புருவோடு, நாரதனும், வீணை மறந்தனர். கின்னர-மிதுனங்களும் தம்தம் 'கின்னரம் தொடுகிலோம்' என்றனர். அம்பரம் திரியும் கந்தர்வர் எல்லாம் அமுத கீத வலையால் சுருக்குண்டு, 'நம்பரம் அன்று' என்று நாணி, மயங்கி, நைந்து, சோர்ந்து, கைம் மறித்து நின்றனர். குழலிசை அமரலோகத்து அளவும் சென்று இசைப்ப, வானவர் எல்லாம் அவி-உணு மறந்து, ஆயர்பாடி நிறையப் புகுந்து, ஈண்டி, செவி-உணுவின் சுவைகொண்டு, மகிழ்ந்து, கோவிந்தனை என்றும் விடாது தொடர்ந்தனர்.

சிறு விரல்கள் தடவிப் பரிமாற, குறு வெயர்ப் புருவம் குடிலிப்ப, குழல்கொடு ஊதினபோது; பறவைக் கணங்கள் கூடு துறந்து, வந்து, சூழ்ந்து, படுகாடு கிடப்ப ; கறவைக் கணங்கள் கால் பரப்பி, கவிழ்ந்து, இரங்கி, செவி ஆட்டாது, நின்றன. மான் கணங்கள் மருண்டு, மேய்க்கை மறந்து, மேய்ந்த புல்லும் கடைவாய் வழி சோர,

புடைபெயராது, எழுது சித்திரங்கள் போல,நின்றன. மரங்கள் மதுத் தாரைகள் பாய, நின்றன; மலர்கள் வீழ்ந்தன; வளர் கொம்புகள் தாழ்ந்தன, இரங்கின, கூம்பின—திருமால் நின்ற நின்ற பக்கம் நோக்கி.

15. கூத்து ஆடியது : மணல்-குன்று ஏறி, மூத்த அவை காண, உவந்து, கூத்து ஆடினன். குடங்கள் தலைமீது எடுத்துக் கொண்டு, சுழன்று ஆடினன். குடங்களை எடுத்து, ஏறவிட்டு, கூத்தாடினன். தெருவிலே குடம் இரண்டு ஏந்தி, 'ஆர், ஆர்?' எனச் சொல்லி, பறை கறங்க, பாரோர் மகிழ, ஆடினன். மரக் கால் கூத்தும் ஆடினன்.

நுண் இடை ஆய்ச்சியர்-தம்மொடும் கோத்து, அசைந்து, குரவைக் கூத்து ஆடினன்.

தாய்மார் மோர் விற்கப் போக, தகப்பன்மார் கறவைப் பசுக்கள் மேய்க்கப் போக, ஆயர் குலக் கொழுந்து பெண்டிர்க்கு அணுக்கனாய்த் திரிந்தான்.

மகளிர் பங்கயநீர் குடைந்தாட, பின்னே சென்று, ஒளித்திருந்து, பூந் துகில் வாரிக்கொண்டு மரம் ஏற, அவர்கள் இரப்ப, ' மங்கைநல்லீர், வந்து கொள்மின் ' என்றான். பிறகு, பூங் குருந்தம் ஒசித்து, ஆடைகளை அளித்தான்.

16. அசுரர்களை அழித்தல் : கன்றின் உரு ஆகி, மேய்ப் புலத்தே வந்த கள்ள அசுரனைச் சென்று பிடித்து, சிறு கைகளாலே விளங்காய் எறிந்து,அந்த அசுரனையும் மாய்த்தான். தேனுகன் ஆவி போக, அங்கு ஓர் பனங்கனி உதிர, எறிந்தான். பிலம்பனை, புள் உருவாய் வந்த பகனை, கேசியை, மற்றும் பல அசுரர்களை, அழித்தான்.

17. காளிய நடனம் : நஞ்சு உமிழ் நாகம் கிடந்த நல்-பொய்கை புகுந்து, கலக்கி, அடங்கா விடம் காலும் அரவத்தை, வால் பற்றி ஈர்த்து, படம் படு ஐந் தலைமேல் பாய்ந்து ஏறி, பல் மணி சிந்த, தூய சுந்தர நடனம் பயின்று அருளினன்.

18. நப்பின்னை திருமணம் : நல் தோகை மயில் அனைய ஆயர் இளங் கொடி நப்பின்னை காதலால், எழு எருதுகளைக் கொம்பு ஒடிய, வலி அழித்து, மணம் புரிந்தான்.

19. கல்லாலே கல்மாரி காத்தது : வானவர் கோன் இந்திரனுக்கு என்று ஆயர் எடுத்த விழாவில், மலைபோல் அமைத்த சோற்றுப் படையலை, கறியொடும் தயிரொடும் நெய்யொடும் கலந்து, கண்

ணன், முற்ற வாரி வளைத்து, உண்டான். அமரர்பதி மிக வெகுண்டு, காள மேகங்களால் ஏழு நாள் கல்மாரி பெய்விக்க, ஆய்ச்சியரும், ஆயரும், ஆநிரையும், அலறி, சரண் புக, மணி நெடுந் தோள் காம்பாகக் கொடுத்து, தடங்கை விரல் ஐந்தும் மலரவைத்து, 'கல் எடுத்துக் கல் மாரி காத்தாய் !' என்று உலகெலாம் போற்ற, கோவர்த்தனம் என்னும் கொற்றக் குடை பிடித்தான்.

20. கஞ்சன் வதம் : சாது சனத்தை நலியும் வஞ்சக் கஞ்சனுக்கு நஞ்சு ஆகி, நெஞ்சிலே நெருப்பு என்ன நின்ற கண்ணன், அவன் கருத்தைப் பிழைப்பிக்கும் நோக்குடன், வட மதுரையில் நடத்திய வில் விழாவுக்குச் சென்றான். அங்கே கூனி ஒருத்தி சந்தனம் கொண்டுபோக, 'அதை நமக்குக் கொஞ்சம் நல்குவாய்' என்று கண்ணன் கேட்க, அவளும் திருமேனியில் பூச, அவள் கூனை உள்ளே ஒடுங்க, நிமிர்த்தி அருளினான்.

புகு வாசலில் நின்றது கஞ்சன் விட்ட வெஞ்சினக் கொலை வேழம். அது கலங்க, மருப்பினைப் பறித்து, அதை, சாடிக் கொன்று, பாகனையும் வீழ்த்தினான் கண்ணன்.

இரு மலைபோல் எதிர்ந்துவந்த இரு மல்லரையும் மல்-போரில் மாய்த்து, 'மல்அமருள் மல்லர் மாள, மல் அடர்த்த மல்லா !' எனப் போற்ற நின்றான்.

அப்பால், நெஞ்சில் கறை கொண்ட கொடுமைக் கஞ்சனை உதைத்துக் கொன்று, தன் தாதை காலில் அவன் கோத்த தளைகோள் விடுத்தான்.

21. குரு தட்சிணை : மாதவத்தோன் (சாந்தீபினி புத்திரன்) மறி கடல்வாய் மாண்டான். ஓதுவித்த தக்கணையாக, அவனை உருவோடு அப்படியே கொடுத்தான்.

22. ருக்மிணி பரிணயம் : கண்ணுலம் கோடித்து, கன்னி-தன்னைக் கைப்பிடிப்பான், திண்ணார்ந்திருந்த சிசுபாலன் தேசு அழித்து, ஆங்கு அவளைக் கைப்பிடித்து, உருப்பிணி நங்கையை வலியத் தேரேற்றிக்கொண்டு, விருப்புற்று வரும்போது, அவளை மீட்பான், விரைந்து செருக்குற்று எதிர்வந்தவன் வீரம் சிதைத்து, மானபங்கம் செய்து, தேவியை மணம் புரிந்தான்.

கேட்பார் செவி சுடும் கீழ்மை வசைவுகளே வையும் பழம் பகைவன் சிசுபாலனை வதைத்து, தன் திருவடி அடையச் செய்தான்.

23. கற்பகம் கொணர்தல்: கற்பகக் காவு கருதிய காதலிக்காக, 'இப்பொழுது ஈவன்' என்று, இமையவர்கோனைச் செற்று, காவளம் கடிது இறுத்து, கற்பகம் கொண்டு, துவாரகையில் நட்டான்.

24. சீமாலிகன் முதலானோர் வதம் : சீமாலிகனோடு தோழமை கொண்டிருந்தும், அவன் உள்ளம் கண்டு, அவனைச் சாகுமாறு, சக்கரத்தால் தலை கொண்டான்.

காய் சினத்த காசி மன்னன், வக்கரன், பௌண்டிரன், நரகன் முரன், முதலானோரை வதம் செய்தான்.

25. வாணன் தோள் துணித்தல் : ஈசன், தன் படையோடும் கிளையோடும், ஓட, வாணனை ஆயிரம் தோள் துணித்தான்.

26. பாரதக் கதைகள் : காண்டவ-வனம் என்பதோர் காடு அமரர் அரசனுக்கு உரியது. சோலை நிறைந்த அவ் வனத்தை அழல் உண்ண முனிந்தான்.

அந்தகன் சிறுவன், அரசர்-தம் அரசற்கு இளையவன் (துச்சாதனன்) அணியிழையை (பாஞ்சாலியை) அணுகி, 'எம்-தமக்கு உரிமை செய்' என, அவள் தரியாது, 'எம்பெருமான், அருள்!' என்ன, அருள் செய்தான்.

ஒன்றே உரைப்பான், ஒரு சொல்லே சொல்லுவான், துன்று முடியான், துரியோதனன் பக்கல் தூது சென்றான். ஐவர்க்கு ஆய் மண் அகலம் கூறு இடுவான், மன்னவனால் சொல்லுண்டான். அரவு நீள் கொடியோன் அவையுள் ஆசனத்தை அஞ்சிடாதே இட, பெரிய மா மேனி அண்டம் ஊடுருவ, பெருந் திசை அடங்கிட, நிமிர்ந்தான். ஊர் ஒன்று பெறாத உரோடத்தால், பார் ஒன்றிப் பாரதப் போர் மூட்டினான். 'நம்பி, சரண்' என்று தாழ்ந்த தனஞ்சயனுக்காக மணித் திண் தேர் ஊர்ந்தான்.

பற்றார் நடுங்க, பாஞ்சசன்னியத்தை வாய் வைத்து ஊதினான்.

பார்த்தனும், வைதிகனும், உடன் ஏற, திண் தேர் கடவி, சுடர் ஒளியாய் நின்ற தன்னுடைச் சோதியில் வைதிகன் பிள்ளைகளை உடலொடும் கொண்டு கொடுத்தான். மண்மிசைப் பெரும் பாரம் நீங்க, பாரத மாப் பெரும் போர் முடித்தான்.

உத்தரையின் சிறுவனும் மருமகன் சந்ததியுமான அவன் (பரிட்சித்து) உயிர் மீட்டு, மைத்துனன்மார் உருமகத்தே வீழாமே, குருமுகமாய்க் காத்தான்.

மைத்துனன்மார் காதலி கூந்தல் முடிப்பித்து, அவர்களையே மன்னர் ஆக்கினான்.

கற்கி அவதாரம்

தவ் நெறிக்கு ஓர் பெரு நெறி ஆய், வையம் காக்கும் கடும் பரி மேல் கற்கியும் ஆனான்.

2. பிற கதைகள்

மஞ்சு ஆடும் மலை ஏழும், கடல்கள் ஏழும் திசைகள் எட்டும், வானகமும், மண்ணகமும், மற்றும் எல்லாம், எஞ்சாமல் வயிற்று அடக்கி, அன்னவசமாகி, ஊழி வெள்ளத்து, ஓர் ஆலின் இளந் தளிர் மேல் பாலகனாய், பரம்பரன், பைய யோகு துயில் கொண்டவன், பெரு வெள்ளம் உண்ணாமல், தான் விழுங்கி, உய்யக்கொண்ட மண்நாடும், விண்நாடும், வானவரும், தானவரும், மற்றும் எல்லாம், ஒழியாமே உமிழ்ந்த பெருவாயன் ஆனான்.

உளைந்திட்டு எழுந்த மது-கைடவர்கள் வலியால் வயிரம் விளைந்திட்டது என்று விண்ணோர் பரவ, பெருமான் அவர் நாள் ஒழிக்க, அவர்கள் வயிறு உருகி மாய்ந்தார்.

ஈசனைப் பயந்த நான்முகனை, தன் உந்தி மா மலர் மிசைப் படைத்து, 'நீ உலகெலாம் படை' என்று பணித்தான்.

கலைகளும், வேதமும், நீதிநூலும், கற்பமும், சொற்பொருள் தானும், மற்றை நிலைகளும், வானவர்க்கும், பிறர்க்கும், நீர்மையினால் அருள்செய்தான்.

பேரிருள் சூழ்ந்து உலகை மூட, நான்மறை முற்றும் மறைந்திட, அன்னம் ஆகியும், பரிமுகம் ஆகியும், அருமறை தந்தான்.

அழல் உமிழ் ஆழிகொண்டு எறிந்து, அங்கு எதிர்முக அசுரர் வன்குலம் வேர் அறுத்தான். மாசினத்த மாலி, சுமாலி, காலநேமி, காலனோடு கூடுமாறு வில் குனித்தான்.

நீறு பூசி, ஏறு ஊரும், இறையோன் சென்று குறை இரப்ப, தன் மார்வு அகலத்துக் குருதி-நீர் அளித்து, உகந்து, அவன் சாபம்-அது நீக்கினான்.

நான்முகன் தன் வாழ்நாள் மிகுதி பற்றி மேற்கொண்டிருந்த தருக்கை, வேத வாய்மொழி உரோமச முனிவனால் போக்கினான். பனி சேர் விசும்பில் பால் மதியின் தேம்புகின்ற இடரைத் தீர்த்து, சிறை விடுத்தான்.

கத்திரபந்துவும் (க்ஷத்திரபந்து) மொய்த்த வல்வினையுள் நின்று மூன்று எழுத்து உடையபேரால் (கோவிந்த நாமத்தால்) பராங்கதி கண்டுகொண்டான்.

நமனும், முற்கலனும் (நாரணன் நாமங்கள்) பேச, நரகில் நின்றார்கள் கேட்க, நரகமே சொர்க்கம் ஆயிற்று.

மீன் அமர் பொய்கையில், நாள்மலர் கொய்வான் வேட்கையினோடு சென்று, இழிந்த வேழத்தின் கால் முதலை வாய்ப்பட, அது துதிக்கை கூப்பி 'என் கண்ணா, கண்ணா!' என்று கதற, புள் ஊர்ந்து

சென்று, நின்று ஆழி தொட்டு, மா முதலை துணிபட, ஆனையின் துயரம் தீர்த்தான்.

நர-நாரணன் ஆய், உலகத்தில் அறநூல் சிங்காமை விரித்தான்.

சிவபிரானை ஒரு கூறாக உடைய திருமால், அப் பெருமான், திரிபுரம் எரிக்க, அழல்-அம்பாய் உதவினான். மார்க்கண்டேயனைச் சிவபிரான் உய்வித்ததும், ஆலமர நிழலில் நால்வருக்கு அறம் உரைத்ததும், அத் திருமாலின் அருளே.

புரிசடை அம் புண்ணியனும், உலகம் தாவிய நெடுமாலும், இரண்டு உருவும் ஒன்றாய் இசைந்து, 'ஒருவன் ஒருவன் அங்கத்து என்றும் உளன்' என்னுமாறு காட்சி தருவர்.

3. சரித்திரக் குறிப்புக்கள்

1. அபிமான துங்கன்: கோவிந்தன் குணம் பாடுவோர் கூடியுள்ள திருக்கோட்டியூரின் தலைவனான அபிமான துங்கன், நளிர்ந்த சீலன்; நயாசலன்; தெளிந்த செல்வன்; செங்கண் மால் சேவகன் (11, 367).

2. நெடுமாறன்: குறுகாத மன்னரைக் கூடுகலக்கி, வெங்கானிடைச் சிறுகால் நெறியே போக்குவிக்கும் திருமாலிருஞ்சோலைச் செல்வனை, தென்னன், தென் கூடற்கோன், கொல் நவில் கூர்வேல் நெடுமாறன், கொண்டாடினான் (344, 345).

3. பாண்டியர் குலபதி: பருப்பதத்து (இமயமலையில்), கயல் பொறித்தான் பாண்டியர் குலபதி (469).

4 தில்லை மூவாயிரவர்: 'செழுந் தண் சோலைத் தில்லை நகர்த் திருச்சித்திரகூடம்-தன்னுள், அந்தணர்கள் ஒரு மூவாயிரவர் ஏத்த, அணி மணி ஆசனத்து இருந்த அம்மான்' (742) என்பர் குலசேகரர். 'மூவாயிரம் நான்மறையாளர் நாளும் முறையால் வணங்க, அணங்கு ஆய சோதித் தேவாதி-தேவன் திகழ்கின்ற தில்லைத் திருச்சித்திர கூடம்' (1165) என்பது திருமங்கை மன்னன் வாக்கு.

5. தொண்டையர்கோன்: மயிலைத் திருவல்லிக்கேணியில், மன்னு தண் பொழிலும், வாவியும், மதிளும், மாட மாளிகையும், மண்டபமும், தென்னன் தொண்டையர்கோன் செய்தான். (1077)

6. கச்சியில் வயிரமேகன்: மன்னவன் தொண்டையர்கோனால் வணங்கப்படுபவனும், நீள் முடி-மாலை உடையவனும் ஆகிய வயிரமேகனது வலிமையும் புகழும் சூழ்ந்த கச்சி மா நகரம். (1127)

7. பரமேச்சுரன் : தடங்களும், மாடங்களும், மா மதில்களும் சூழ்ந்து, அழகு ஆய கச்சியில், வெண் குடை நிழலில், செங்கோல் நடத்தியவனும் ; விடை வெல் கொடியும், பாம்புக் கொடியும், வேல் படையும், உயர்த்தியவனும்; கடல்போல் முழங்கும் குரலை உடைய கடுவாய்ப் பறை உடையவனும் ; 'பல்லவன்', 'வில்லவன்' என்று உலகில் பலராய்ப் பல வேந்தரால் வணங்கும் கழலை உடையவனும்—ஆன மல்லையர்கோன்; தேர் மன்னு தென்னவனைக் கன்னி மா மதில் சூழ் கருவூரிலும், வில்லவனை நென்மலியிலும், பிற பகைவர்களை மண்ணையிலும், திசைப்ப, பொருதான். இவன் பணிந்தது பரமேச்சுர விண்ணகரம். (1128-1137)

8. பல்லவர்கோன் பணிந்த சித்திரகூடம் : செம் பொன் மணி மாடங்கள் சூழ்ந்த தில்லைத் திருச்சித்திரகூடத்தில் படைமன்னன் பல்லவர்கோன் பைம் பொன்னும், முத்தும், மணியும், கொணர்ந்து பணிந்தான். (1160)

9. திருநாங்கூர்த் திண் திறலாளர் : நண்ணார் முனைகளில் மா வரும் திண் படை மன்னர்களை வென்றிகொள்வாரும், துண் என மாற்றார் தம்மைத் தொலைத்தவரும், ஒண் திறல் தென்னன் ஓட, வட அரசு ஓட்டம் கண்டவரும், ஆகிய திண் திறலாளர் மன்னும் சிறப்பை உடையது திருநாங்கை. (1249, 1252, 1293, 1299, 1308)

10. தொண்டைமன்னவன் மந்திரம் பெறுதல் : துளங்கு நீள் முடி அரசர்-தம் குரிசிலான திண் திறல் தொண்டை மன்னவன் ஒருவனுக்கு உளம்கொள் அன்பினொடு, இன் அருள் சுரந்து, எழு நாழிகை உடன் இருந்து, வளங்கொள் மந்திரம் திருமால் அருளிச் செய்தார். (1426)

11. நந்திபுர விண்ணகரம் : வண்டு கிளையோடு மலர் கிண்டி, மது உண்டு, நைவளம் நவிற்றும் மழை தவழ் பொழில் உடையதும், முனியாளர் பண்ணில் மலி கீதமொடு பாடி, ஆடலொடு கூட, மண்ணில் இது போல நகர் இல்லை என வானவர்கள் மலர் தூவி, நண்ணி உறைகின்றதும், நந்தி பணி செய்ததும் ஆன, நகரம் நந்திபுர விண்ணகரம். (1438-1447)

12. கோச்செங்கணான் : செழும் பொன்னி வளம்கொடுக்கும் பொன்னி நாடனும் ; களிறு உந்தி, வெண்ணி ஏற்ற விறல் மன்னர் திறல் அழிய, வெம்மா உய்த்து, தெய்வ வாள் வலம்கொண்டு, பகை மன்னர் மணி முடிமேல் காகம் ஏறச் செய்தவனும் ; பார் ஆளர் அவர் இவர் என்று, அழுந்தை ஏற்ற படை மன்னர் உடல் துணிய, பரிமா உய்த்த தேர் ஆளனும்; வேல் ஏந்து விளைந்த வேளை விண் ஏற,

தனி வேல் உய்த்தவனும் ; உலகம் ஆண்டவனும் ; தென் நாடனும்; தென் தமிழனும் ; குடகொங்கனும் ; வட புலக் கோனும்—ஆன திருக்குலத்து வளச் சோழன், இருக்கு இலங்கு திருமொழி வாய் எண்தோள் ஈசற்கு எழில் மாடம் எழுபது செய்து, உலகம் ஆண்டவன், செம் மொழி வாய் நால்வேத வாணர் வாழும் திருநறையூர் மணி மாடம் சேர்ந்து, வழிபட்டான். (1498-1507)

13. மலையரையன் : பொற்புடைய மலையரையன் பணிய நின்ற பூங்கோவலூர். (2058)

14. குணப்பரன் : கோனே ! குணப்பரனே ! (2474) ஒப்பிடுக : கோழியும், கூடலும், கோயில் கொண்ட கோவலரே ஒப்பர். (1762)